400

# ஜகன்மோகினி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS
400

8C
M12237
K142·19 .11
183073

...யம் ...சி)
அ 2 ண
நவம்பர் '42
ஐப்பசி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

நவம்பர் 1942 **விஷய அட்டவணை** சித்திரபானு ஐப்

மலர் 19. இதழ் 11


| | | |
|---|---|---|
| 6. அம்புலி மாமா! வா, வா | பி. ஸ்ரீ. | 1 |
| பாரதநாட்டு திலகங்கள்-பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள் | வை. மு. கோ. | 5 |
| ஐப்பசியின் அழகு | "குகப்ரியை" | 9 |
| அபூர்வ மாறுதல்-(சிறு கதை) | ஸ்ரீ. ஜானம்மாள் | 12 |
| "பூஜா பலம்" | வை. மு. ஸ்ரீ. | 17 |
| க்ஷேமலாபங்கள் | வை. மு. கோ. | 19 |
| வாத்ஸல்யம்-59-வது நாவல்(தொடர்ச்சி) | வை. மு. கோ. | 97-128 |
| சித்திர ரகஸ்ரீ (உள் அட்டை படம்) | "கார்த்திகை" | |


மேலட்டை படம்: பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள்

## ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்



சஷ்டியப்த பூர்த்தி விழாவன்று எடுத்த படம்.

("பூஜா பலம்" 17-ம் பக்கம் பார்க்கவும்)

ஸ்ரீராமஜயம்.

# ஜகன்மோகினி

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -ஸ்ரீ. வீரராகவ கவி.

183073
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS
183073

| மலர் 19 | சித்ரபானு௵ ஐப்பசி௴ நவம்பர் 1942 | இதழ் 11 |
|---|---|---|




## பி.ஸ்ரீ (ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்)

### 1. அம்புலி மாமா! வா, வா

மாலைப்பொழுது. நெற்றியிலே சுட்டி அசையத் தவழ்ந்து போகிறது குழந்தை. அரையிலே சதங்கை 'கிண் கிண்' என்று ஒலிக்கப் போய்ப் புழுதி அளைகிறது. "என்னடா கூத்து, கையெல்லாம் புழுதியாக்கிக்கொண்டு!" என்று சொல்லிக்கொண்டே, குழந்தையின் சேஷ்டைகளில் குதூகலம் அடைந்தவளாய் வருகிருள் யசோதை.

சந்திரோதயம் கண்டதும், "அடே, சந்திரா! இந்தக் கூத்தை நீயும் பார்க்க வந்துவிட்டாயா? நல்லது, பார்த்துப்போ!" என்கிருள்:

தன்முகத் துச்சுட்டி தூங்கத்தூங்கத் தவழ்ந்துபோய்,
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப்புழுதி அளைகின்ருன்:
என்மகன் கோவிந்தன் கூத்தினை இளமாமதீ!
நின்முகம் கண்ணுளஆகில், நீ இங்கே நோக்கிப்போ!

[தூங்க-தொங்கி அசைய. கிண்கிணி-அரைச்சதங்கை. ஆர்ப்ப-ஒலிக்க. இளமாமதீ-அழகிய இளஞ்சந்திரனே. நின்-உன்]

"குழந்தைச் சந்திரா! என்னுடைய குழந்தைக் கோபாலன் விளையாடும் விளையாட்டைப் பார். முகத்திலே கண் படைத்தவர்களெல்லாம் பார்க்கவேண்டிய விளையாட்டு!" என்கிறாள். "இவனுடைய விளையாட்டைப் பார்ப்பதுபோல் நீ இவன் கண்ணிலே தென்படவேணும்" என்கிறாள். இப்படிச் சந்திரனை அழைப்பது போல், குழந்தைக்கு அம்புலி காட்டி விளையாட ஆசைப்படுகிறது தாயுள்ளம்.

"மறையாதே!......ஓடி வா!"

புழுதியைத் துடைத்துப் பிள்ளையை ஒக்கலில் வைத்துக் கொள்ளுகிறாள். வைத்துக்கொண்டதும் அமிர்த பானம் செய்தது போலே ஆனந்த வெறி தாயாருக்கு. "எனக்கு ஓர் இன்னமுது எம்பிரான்" என்று பூரித்துப் போகிறாள். சந்திரனைக் கண்டதும் கண்ணன் கைகளை நீட்டுகிறான். "என் செல்லம், என் சிறு குழந்தை, தன் அருமைச் சிறு கைகளைக் காட்டி அழைக்கிறான்; இரண்டு கைகளாலும் அழைக்கிறானே! எத்தனைதரம் அழைக்கிறான், பார்! விளையாட வா—என்று அழைக்கிறான்; அட, சந்திரா! உனக்கு ஆசையில்லையா இவனோடு விளையாடுவதற்கு?" என்று கொஞ்சுகிறாள் தாய். "குழந்தையும் கொஞ்சி அழைக்கிறது, தன் மழலை முற்றாத இளஞ் சொல்லால், "அம்புலி அம்மா! வா, வா" என்று.

சந்திரன் அதே சமயத்தில் மேகத்திலே மறைந்து போகிறது. உடனே யசோதை,

மஞ்சில் மறையாதே, மாமதீ! மகிழ்ந்து ஓடிவா

[மஞ்சில்—மேகத்திலே. மாமதீ—அழகிய சந்திரனே.]

என்று வேண்டிக்கொள்ளுகிறாள்.

"அப்படி அந்தத் திரைக்குள்ளே மறைந்து போகாதே. அப்படியெல்லாம் பிகு பண்ணவேண்டாம். ஓடி வா" என்றெல்லாம் மறைந்து கொண்டிருக்கும் "அம்புலி மாமா"வோடு பேசுவது போல் குழந்தைக்கு விளையாட்டுக்காட்டிக்கொண்டிருக்கும்போதே, மேகத்திரையிலிருந்து வெளிப்பட்டு மறுபடியும் வந்துவிடுகிறது பூர்ண சந்திரன். முன்னிலும் அழகாய்த் தோன்றுகிறது.

இந்த முகம்போல் இல்லை உன் முகம்!

அந்தச் சந்திர வட்டத்தையும் புத்திர ரத்தினத்தின் முக சந்திரனையும் ஒப்பிட்டுப் பார்க்கிறாள் யசோதை. பார்த்து, "சந்திரா! உனக்கு அவ்வளவு கர்வமா? க்ஷயமும் களங்கமும் நீங்கிவந்தாலும், உன் அழகு எங்கே? என் மகன் அழகு எங்கே?" என்கிறாள்.

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்துசோதி பரந்தெங்கும்
எத்தனை செய்யினும் என்மகன்முகம் நேர்ஒவ்வாய்!
-[நேர் ஒவ்வாய்—பூர்ணமாக ஒப்பாகமாட்டாய்.]

என்று முடிவு கட்டுகிறாள். அந்த "ஒளிவட்டம்" சுற்றிச் சுற்றிச் சூழ்ந்து பார்த்துப் பார்த்து எப்படியெல்லாம் தன்னைத்

திருத்தித் திருத்தித் திரைமறைவிலே போய்ப் போய் எத்தனை விதமாக அழகு செய்துகொண்டு எவ்வளவு ஜோதியைப் பரப்பி வந்தபோதிலும், தன் மகனுடைய முகத்திற்கு ஒப்பாகாதென்று சொல்லுகிறது தாயின் இதயம்.

**கைவலிக்க வாய்வலிக்கக் கூப்பிடுகிறதே!**

கண்ணன் கை நீட்டிக் கூப்பிட்டுக்கொண்டேயிருக்கிறான்.

கைத்தலம் நோவாமே, அம்புலீ! கடி(து) ஓடிவா

[நோவாமே-வலி எடுக்காதபடி. கடிது-விரைவாக.]

என்று பரிந்து தாயும் சிபார்சு செய்கிறாள். "கைவலிக்குமே குழந்தைக்கு: தாமதம் செய்யாமல் வந்துவிடு; மெள்ள வந்தால் போதாது; ஓடி வா" என்று தாய் சொல்லக் குழந்தையும் ஒக்கலில் இருந்து அம்புலியையே பார்த்துக்கொண்டிருக்கிறது; அந்த அம்புலியையே விரலால் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறது.

யசோதை நயமும் பயமுமாய் எச்சரிக்கை செய்கிறாள் சந்திரனுக்கு:

சக்கரக் கையன் தடங்கண்ணால் மலரவிழித்து;
ஒக்கலை மேலிருந்(து), உன்னையேசுட்டிக் காட்டுங்காண்:
தக்க(து) அறிதியேல், சந்திரா! சலம் செய்யாதே
மக்கள் பெறாத மலடன் அல்லையேல், வா, கண்டாய்!

[சக்கரக் கையன்—சக்கர ரேகையோடு கூடிய கையையுடையவன்; சக்கராயுதத்தைத் தரித்துச் சுழற்றக்கூடிய கையையுடையவன். தடங்கண்—விசாலமான கண்கள். தக்கது-தகுதியானது. அறிதியேல்—அறிவாயாகில். சலம்-கபடம்.]

"இவனைக் குழந்தையென்று எண்ணி அலட்சியம் செய்துவிடாதே; சந்திரா! ஜாக்கிரதை, ஜாக்கிரதை! சக்கரத்தைச் சுழற்றி உன்னைப் பயமுறுத்தக்கூடிய கையல்லவா? இப்போது தயவாக அழைக்கிறது!" என்று கொஞ்சம் பயமுறுத்தப் பார்க்கிறாள். உடனே நயமாகப் பேசுவதுதான் நலமென்று கருதியவளைப்போல் மகிழ்ச்சியால் மலர்ந்த குழந்தைக் கண்களைக் குறிப்பிட்டு, "இந்தக் கண்களால் உன்னை எவ்வளவு உத்ஸாகமாய்ப் பார்க்கிறான், பார்! கபடம் பண்ணாமல் வா. நீ மக்கள் பெறாத மலடனில்லை யானால், குழந்தையை வருத்தப் படுத்தாமல் வந்துவிடு" என்கிறாள். எனினும் "வா, கண்டாய்!" என்று கொஞ்சம் கண்டிப்பாகவே—கொஞ்சம் "கெடுபிடி"யாகவே—பேசுகிறாள்.

"நீ மலடனா? குழந்தைக்குக் கைவலிக்குமென்று தெரியவில்லையா?" என்றவள், "நீ செவிடனா? குழந்தை கூப்பிடுவது காதில் விழவில்லையா!" என்றும் கேட்கிறாள்:

அழகிய வாயில் அமுதஊறல் தெளிவுரு
மழலைமுற்றாத இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான்;
குழகன் சிரீதரன் கூவக்கூவநீ போதியேல்,
புழையில ஆகாதே? நின்செவி புகர்மாமதீ!

[அமுதவூறல்-அமிர்தம்போல் ஊறும் ஜலத்தோடு கூடிய. தெளிவுரு-தெளிவில்லாததாய்; உருத்தெரியாததாய். குழகன்-இளையோன்; அழகன்; பிறர்க்கு இணங்குகிறவன். சிரீதரன்-ஸ்ரீதரன்; கிருஷ்ணன். போதியேல்-போவாயானால். புழை-துளை. ஆகாதே-(இங்கே) ஆகாதோ.]

ஸ்ரீகிருஷ்ணனுடைய அழகிய வாயில் ஊறும் அமிர்தத்திலே தோய்ந்து வருகிறதாம் மழலைச்சொல். அது மழலையும் முற்றாத இளஞ்சொல் என்கிறாள். மழலை முற்றாத இந்த அமிர்தமான இளஞ்சொல்லும் காதில் விழவில்லையென்றால், காதில் துளையில்லையோ?—என்றே சந்தேகப்படுகிறாள். "கண் படைத்த பயன் கண்ணன் விளையாட்டைப் பார்ப்பது" என்று தீர்மானித்தவள், "காது படைத்த பயன், கண்ணன் மழலைச்சொல்லைக் கேட்பது" என்று சித்தாந்தம் செய்கிறாள்.

### உறக்கம் வந்துவிட்டதே! ஓடிவா

இப்படியெல்லாம் அம்புலி காட்டி விளையாட்டுக் காட்டி வரும்போதே, கொட்டாவி வந்துவிடுகிறது குழந்தைக்கு. அப்போது தாய், "பிள்ளைக்கு உறக்கம் வருகிறது; வந்துகொண்டிருக்கிறது; வந்துவிட்டது! ஆகாசத்திலிருந்து நீயும் வந்துவிடு; சந்திரா! விரைந்தோடி வந்துவிடு" என்கிறாள்,—குழந்தையின் தூக்கத்தைத் துரிதப்படுத்துவதற்காக! "என் குழந்தை.

கண் துயில் கொள்ளக்கருதிக் கொட்டாவி கொள்கின்றான்

என்று சந்திரனைத் துரிதப்படுத்துவதுபோல்,

விண்தனில் மன்னிய மாமதீ! விரைந்தோடிவா

[விண்—ஆகாசம். மன்னிய—பொருந்திய.]

என்கிறாள்.

பாலகன் என்று பரிபவம் செய்யேல்

[பரிபவம் செய்யேல்-குறைவாக நினைத்துவிடாதே.]

என்றும்,

சிறியன் என்(று) என்இளஞ் சிங்கத்தை இகழேல் கண்டாய்

[இகழேல்—இகழாதே.]

என்றும் மறுபடியும் எச்சரிக்கை செய்கிறாள்.

### யசோதையாகிய ஆழ்வார்

இப்படியெல்லாம் அம்புலிகாட்டி விளையாடிக் குழந்தையை உறங்கப்பண்ணும் யசோதை உண்மையில், பெரியாழ்வார்தான். அதனால்தான் கண்ணனைச் "சக்கரக் கையன்" என்கிறார்; "சிரீதரன்" என்கிறார்; "வித்தகன் வேங்கடவாணன்" என்கிறார்;

தண்டொடு சக்கரம் சார்ங்கம் ஏந்தும் தடக்கையன்

[தண்டு-கதை. சார்ங்கம்-விஷ்ணுவுக்குரிய வில். தடக்கையன்-விசாலமான கைகளையுடையவன்.]

என்கிறார்.

"சிறு கைகள்" என்றும் குழந்தையின் கைகளைக் குறிப்பிடுகிறார். தாய் அப்படித்தானே சொல்லுவாள். தாயுணர்வுகளுக்கிடையே ஆழ்வாரின் பக்தியுணர்ச்சியும் ததும்பிவிடுகிறது.

இந்தப் பதிகத்தின் இறுதியில் பக்தியுணர்வு அதிகரித்துவிடுகிறது. எனவே,

**ஆலின்இலை வளர்ந்த சிறுக்கன் அவன்இவன்**

[சிறுக்கன்-சிறு பிள்ளை.]

என்கிறார். பிரளயகாலத்திலே உலகங்களையெல்லாம் வயிற்றிலே வைத்துக்கொண்டு "ஆலிலை மேலொரு பாலக"னாய்க் கண்வளர்கிறான் ரட்சக மூர்த்தியான பகவான் என்று புராணம் சொல்லுகிறதல்லவா? "அந்தச் சிறு குழந்தைதான் இந்தப் பசுங்குழந்தை" யென்று சொல்லக்கூடியது தாயன்பா, பக்தியா?

உருவச் சிறுமை கருதி இகழ்வது ஆபத்தாக முடியும்—என்று அம்புலிக்கும் கிலியுண்டாகும்படி,

**சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்றுகேள்**

[மாவலி-மகாபலிச் சக்கரவர்த்தி.]

என்று சொல்லுகிறவரும் ஆழ்வார்தான்; யசோதையல்ல.

இப்பதிகத்தில் "மைத்தடங்கண்ணி யசோதை" வேஷம் நன்றாகப் பொருந்தவில்லை ஆழ்வாருக்கு—என்றே தோன்றுகிறது. எனினும் இதிலும் நமது பக்தமணியின் பரிசுத்தமான தாயன்பும், கள்ளங்கவடற்ற குழந்தையுள்ளமும் வெளிப்படத்தான் செய்கின்றன.

# பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள்

## நிறைகுடம்

1928 வருஷத்தில் (மாதம் நினைவில்லை) ஒரு தினம் ஒரு மாணவி ஒரு அழைப்புக் கடிதத்தை எடுத்துக்கொண்டு வந்து, "வை. மு. கோ. நீங்கள் தானா?" என்று வெகு அடக்கமாயும் மரியாதையுடனும் கேட்டாள்.

"நீ யாரம்மா! எங்கிருந்து வந்தாய்? எனக்குத்தான் அக் கடிதம். என்ன விசேஷம்?" என்று கேட்டேன். அதற்கந்த மாணவி, "பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள் அனுப்பினார்கள். நான் கலைமகள்கழகத்திலிருந்து வந்திருக்கிறேன். இந்து நிலயத்தில் இருக்கும் மாணவி நான். உங்களைக் கட்டாயம் வரச் சொன்னார்கள்" என்று கூறிச்சென்றாள்.

நான் அழைப்பில் குறிப்பிட்டிருந்த தினம் அங்கு சென்றேன். பண்டிதை கிருஷ்ணவேணியம்மாளை அதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. அங்கு அதிக கூட்டமில்லை. நிலய மாணவிகளைத் தவிர இதர பெண்கள் சிலர்தான் இருந்தார்கள். பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள் ஏதோ தடபுடலாக இருப்பார்கள். மகா படித்த மேதை. அவர்கள் நம்மை அன்புடன் அழைத்திருப்பினும் எப்படி நடந்துகொள்வார்களோ என்கிற எண்ணம்

எனக்கு உள்ளுக்குள் இருந்தது. அங்கு சென்றதும் முற்றிலும் ஏமாற்றமே அடைந்தேன். மேல் அட்டைப் படத்தில் நீங்கள் இப்போது பார்க்கும் அதே தோற்றத்தில் வெகு எளிய முறையில் காணப்பட்டார்கள். படாடோபம் என்பதே அந்த அம்மாளிடம் மருந்துக்கும் காணப்படவில்லை.

என்னைப் பார்த்ததும் தாமாக எழுந்து வந்து,"வாருங்கள்! வாருங்கள்! நெடுநாட்களாகத் தங்களைச் சந்திக்க ஆவல் உண்டு. இன்று பூர்த்தியாயிற்று. எங்கள் மாணவிகளுக்கு நீங்கள் அடிக்கடி வந்து சொற்பொழிவுகளும் சங்கீத விருந்துகளும் தரவேண்டும்" என்று சொல்லும்போது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது.

## போதனு முறையின் சிறப்பு

அரைகுறை படிப்புப் படித்துத் தலைகால் தெரியாது குதிக்கும் சில ப்ரகிருதிகளைப் பார்த்தபின் இந்தம்மாளைப் பார்த்ததும், யார்தான் வியக்காமலிருக்கமுடியும். அந்தம்மாளிடம் நல்ல அருமையான விஷயங்களைப் பற்றி பேசும்போது அறிவில்லாதவர்களுக்குக்கூட அறிவு உண்டாகும். அத்தனை நயமாயும் விளக்கமாயும் பேசினார்கள். அவர்கள் ஹிந்து நிலயத்தில் 1920-வது வருஷம் முதல் கவனிப்பாளராக இருந்துவரும் திறமையின் சோபையை அன்று மாணவிகள் அரிய விஷயங்களைப்பற்றி பேசியதிலிருந்து நன்கறிந்தேன்.

மாணவிகளை அவர்கள் நடத்தும் உயர்ந்த முறைகளைக் கேட்டு மகிழ்ந்தேன். சமையல் வேலை முதல் கணக்கெழுதுதல், தையல் வேலை செய்தல், விருந்தினரை உபசரித்தல் முதலிய பல குடும்ப காரியங்களையும் ஒரு போதனையாகவே நடத்துவதாக அறிந்தேன்.

## கல்வித்துறையில் களிப்பும் பண்டிதை பட்டமும்

இவ்வளவு படிப்பும் உயர்ந்த குணமும் உள்ள ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மாளைப்பற்றி முற்றிலும் அறிய எனக்குப் பேராவல் உண்டாகியது. அந்தம்மாளுக்கும் எனக்கும் பரிச்சயமான ஒரு பெரியம்மாளைக் கேட்டு விஷயமறிந்து ஒருபுறம் விசனமும் ஒருபுறம் மகிழ்ச்சியும் அடைந்தேன். நாயுடு வம்சத்தில் பிறந்த அந்தம்மாள் தனது வெகு சிறிய பிராயத்திலேயே பதியை இழந்து துக்கசாகரத்தில் மிதந்தாராம்.

அந்த மகத்தான அந்தகாரம் நிறைந்த சூன்யமான வாழ்க்கைச் சமுத்திரத்தில் தத்தளிக்கும் இந்தம்மாளை அவருடைய தகப்பனர் கல்வி என்கிற தோணியில் ஏற்றி, அந்தக் கொடிய பயங்கர பாதையிலிருந்து தனது ஆத்மார்த்தகமான இன்பத்திற்கும், உலகத்திற்கு உபகாரமான மார்க்கத்திற்கும் பயன்படுமாறுச் செய்து பிரகாச உலகத்திற்குக் கொண்டுவந்தார். அவர் முதல் முதல் செந்தமிழ் ரத்தினகரம் வல்லை. ஷண்முகசுந்தர முதலியாரிடம் சில இலக்கியமும், சொற்பொழிவு ஆற்றும் முறைகளும் பயின்றார். அதன்பிறகு பல சபைகளில் சிறந்த விஷயங்களை சொற்பொழிவாற்றிவந்தார். தூத்துக்குடி சைவசித்தாந்த மகா சங்கத்தின் 30-வது ஆண்டு விழாவன்று இவர் சொற்பொழிவு ஆற்றிய திறமையையும், தமிழ் அறிவையும் சோதித்தறிந்த அறிஞர், ஸ்வாமி வேதாசலம் அவர்கள் தலைமை வகித்த ஒரு மாபெருங்கூட்டத்தில் இவருக்கு "தமிழ் பண்டிதை" என்கிற பட்டத்தை வழங்கினராம். இந்த விஷயத்தைக் கேட்

கும்போது பெண்களின் இனத்திற்கே ஒரு பெருமையை அளித்தது போன்ற ஒரு உணர்ச்சி எனக்கு உண்டாயிது.

## தங்கப் பதக்கமும் சங்கம் நிருவியதும்

பின்பு சங்கத்தினர் அந்தம்மாளுக்கனுப்பிய தங்கப் பதக்கம் காலஞ் சென்ற நீதிபதி சர். டி. சதாசிவ ஐயர் அவர்களால் அளிக்கப்பட்டது. தென்னாட்டில் அனேக இடங்களில் நல்ல விஷயங்களைச் சொற்பொழிவு ஆற்றியும், மாதர்களின் முன்னேற்றத்திற்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் நல்ல முறையில் பொழுதைப் போக்கிப் பல ஊர்களில் மாதர்கள் சங் சங்களைத் திறந்திருக்கிறார். அவைகள் இப்போதும் நடைபெற்று வரு கின்றன. சென்னையில், 'மாதர் வித்யானுபாலன சங்கம்' ஒன்று ஏற்படுத்தி வாரந்தோறும் பெண்களுக்கு ராமாயணம், பாரதம், பாகவதம், கஜேந்திர மோக்ஷம், பெரிய புராணம் முதலியன பாடம் சொல்லிக்கொடுத்தார். அயோத்தி குப்பத்திலுள்ள பெண்களுக்கும் வேறு நிலயங்களிருந்த ஹரி ஜனப்பெண்களுக்கும், வாரத்திற்கு ஒருமுறை மத சம்மந்தமான விஷயத் தைப்பற்றியும் சுத்தம், சுகாதாரம், ஒழுக்கம் முதலிய பல விஷயங்களையும் போதித்தார். மேற்படி குப்பத்தில் நடக்கும் ராப் பள்ளிக்கூடங்களை அப் போதைக்கப்போது கவனித்து உதவி வந்தார்.

## நிலய நிர்வாகமும் தலைமைப் பதவியும்

1920 வருஷம் அரசாங்கத்தைச் சார்ந்த இந்து நிலயத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அச்சமயம் மூன்றே பெண்கள் உப காரச் சம்பளம் பெற்றுவந்தார்களாம். இவ்வம்மையாருடைய முயற்சியால் காலக்ரமத்தில் 27 பெண்கள் உபகாரச் சம்பளம் பெற்றுவந்தார்கள்.

அக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான "கலை மகள் கழகம்" ஒன்று ஏற்படுத்தி அதில் அம் மாணவிகளே காரியதரிசி யாகவும், பொக்கிஷதாரியாகவும், சொற்பொழிவாளராகவும் பழக்கியது மிகவும் பாராட்டத்தக்கது. வாரந்தோறும், அஷ்டப்ரபந்தம், நாலடியார், திருக்குறள் முதலிய நூல்களைக் கற்பித்து வந்தார்.

மேற்படி கழகத்திற்கு அம்மாணவிகளின் பெற்றோரும் மற்றோரும் உதவிய பணத்தைக் கொண்டு சுமார் 500 ரூபாய்களுக்கு சிறந்த புத்தகங் களை வாங்கினர். அவைகள் இப்போதும் பயனளித்து வருகின்றன.

1922 வருஷம் லேடிவெல்லிங்டன் கல்லூரியில் தலைமை தமிழ் ஆசி ரியராய் அமர்ந்தது தமிழருக்கும் தமிழ் மக்களுக்கும்-முக்யமாக பெண் குலத்திற்கு-பெருமையைத் தருவதோடு அம்மையாரின் பாண்டித்யத்திற்கு சரியான பரிசாகவும் ஆகியது.

ஆதியில் அவர் கல்வித் துறையில்இறங்கியபோது வசை பாணங்களைப் பொழிந்து தாக்கியஅனேக ப்ரக்ருதிகளேஅம்மையார் பண்டிதை கிருஷ்ண வேணியம்மாள் என்கிற பதவிக்கு வந்தவுடனே அவருடைய உதவியை நாடி தம்தம் மக்களைச் சேர்த்தது வியப்பிலும் வியப்பல்லவா !

## ஸ்ரீ வைஷ்ணவம்

1930 வருஷம் ப்ரபன்ன வித்வான். ஸ்ரீமான் ராமஸ்வாமி நாயுடு அவர்களை ஆசார்யாாக அடைந்து வைஷ்ணவ மந்திரார்த்தங்களையும் ஆழ்

வார்கள் அருளிச் செய்த தத்வார்த்தங்களையும், இன்னும் அனேக உயர்ந்த விஷயங்களையும் அறிந்துகொண்டார்.

1931-ம் வருஷம் ஸ்ரீ வைஷ்ணவப் பெண்கள் மகாநாடு ஒன்று நடத்தினர். பண்டிதையம்மாளின் அழைப்புக்ிணங்க நானும் எனது ஆத்ம சிநேகிதை ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாளும் மகாநாட்டு நடவடிக்கைகளில் கலந்துகொண்டோம். அந்த மகாநாடு வருடந்தோறும் சிறப்பாக நடந்து வருகிறது.

வைஷ்ணவ சித்தாந்தத்தையும் ஆழ்வார்களின் ஒப்பிலாமாணிக்கம் போன்ற பாசுரங்களையும் மக்களிடையேபரப்பி, அவர்கள் உய்யும்பொருட்டு பிரபந்தங்களில் 40 பாசுரங்களும் அதன் அர்த்தங்களையும் அச்சிட்டு வழங்குவதோடு அந்த பாசுரங்களை மாணவ, மாணவிகளும் மற்றவர்களும் பரீக்ஷகர்முன்பு இசையுடன் பாடவும் அதில் முதல்தரமாகப் பாடியவர்களுக்குப் பரிசுகளும் வழங்க உதவி புரிகிறார். பைசானி மாதவச் செட்டியாரின் தர்ம கைங்கரியமே மேற்படி விஷயத்திற்கு உதவி புரிகிறது. இதே பரீக்ஷையில் நானும், பண்டிதை அம்மையாரும் சுமார் 4, 5 முறைகள் பரீக்ஷகர்களாய் இருந்திருக்கிறோம்.

இவ்வம்மையாருக்கு பகவத் பக்தியும், பாகவத பக்தியும் சத்விஷயங்களில் அபாரமான பற்றுதலும் உண்டு. இவர்கள் அதை மிகவும் மகிழ்ச்சியோடு, பிறருக்கும் உதவியாகும்படி, திருமந்திரம், திருப்பாவை, திருப்பல்லாண்டு, திருவாய்மொழி முதலிய விஷயங்களை பல பெண்களுக்கு வியாக்யானம் செய்கிறார்கள்.

இவ்வம்மையார் எழுதியுள்ள நூல்களில் சிலவற்றை பள்ளிக்கூடங்களுக்கும் சிலவற்றை கலாசாலைகளுக்கும், பாட புத்தகங்களாக வைத்திருக்கிறார்கள். இந்தம்மையார் வெளியிட்டுள்ள நூல்களாவன: "கோதையார்" "வைதேகியார்" "வீரக் கற்பின் வெற்றி" "பாரிமகளிரும் பறம்பு நாடும்" "கவிமலர் மாலை: 5 பிரிவுகள்.

"நிறைந்த குடம் நீர் ததும்பாது" என்கிற பழமொழிப்படிக்கு அந்தம்மாள் விளங்குகிறார். உடல் நலக்குறைவால் 1938 வருஷம் முதல் நிலைய நிர்வாகத்தை விட்டுவிட்டார்கள். கல்விக் களஞ்சியமாகிய அம்மையார் பல பத்திரிகைகளில் எழுதியுள்ள கட்டுரையை நீங்கள் படித்தின்புற்றிருக்கலாம். இந்தம்மாளுடைய இத்தனை உயர்வுக்கும் காரணம் அவருடைய இளைய சகோதரி ஸ்ரீமதி பத்மாவதியவர்களின் உதவியுமாகும். இந்தம்மாளின் நிர்வாகத்திலிருந்த மாணவிகள் தற்சமயம் வெளியூர்களில் சென்று அனேக சங்கங்களை நிலவியிருக்கும் பெருமை அம்மாளுக்குரித்தானதல்லவா!

ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் ஏற்றும் தத்துவ ரகஸியத்தை போதகாசிரியரிடத்தில்தான் பிரத்யக்ஷமாகக் காணலாம். பண்டிதையம்மாளிடம் பயின்ற மாணவிகளில் ஒரு பெண்மணி தூத்துக்குடிக் கருகாமையில் ஒரு ஊரில் பெண்கள் சங்கம் நிலவி செவ்வனே நடத்துகிறார்கள். அதற்கு நானும் ஒரு வருஷம் ஆண்டு விழாவுக்குப் போயிருந்தேன். பண்டிதை அம்மையாரின் உயர்ந்த சிறப்பு அப்போது என் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பது போல் அம்மையாரிடம் பயின்ற மாணவிகளில் சிலர் பண்டிதை ஸ்தானத்திற்குத் தகுதியான முறையில் பிரகாசிக்கிறார்கள். —வை. மு. கோ.

குகப்ரியை

# ஐப்பசியின் அழகு

ஐப்பசி என்றவுடனே தீபாவளியின் ஞாபகம்தான் முதலில் வருகிறது. தீபாவளி எதன் பொருட்டுக் கொண்டாடுகிறோம்? கொடிய நரகாசுரன் உலகத்தையே ஆட்டிவைத்துக்கொண்டிருந்தான் தனது கொடுங்கோன்மையினால், அவன் பதினாறாயிரக்கணக்கான அரசிளங்குமரிகளைப்பிடித்து சிறை வைத்திருந்தான். அவனை ஒழிக்கவேணுமென்று நினைத்தான் கண்ணன்.

"பெண்களைச் சிறை மீட்கப் பெண்ணேதான் வரவேணும்; நானும் உடன் வருவேன்" என்று பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டாள் ஸத்யபாமை. போர்க்கோலம் பூண்டு தேரில் ஏறினான் கண்ணன். கருமுகிலோடு தோன்றும் மின்னற்கொடிபோல அவனுடன் தானும் ஏறிஉட்கார்ந்துகொண்டாள்.

பயங்கரமான யுத்தம், வில்களும், வாள்களும் மின்னுகின்றன. ஒரே சரமாரி, தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையிலே நடை பெறும் அந்த மகாயுத்தம் பயங்கரமாயில்லாமல் வேறு எப்படி இருக்கமுடியும், அந்த நரகாசுரனுடைய அசுர பலத்திற்கு முன்னே கண்ணனே சளைத்துப்போய், தேர்த் தட்டிலே சாய்ந்துவிட்டான்.

தேவியின் புருவம் வளைந்தது. வீரபத்தினியாகிய அவள் நெஞ்சிலே வீரக்கனல் மூண்டது. வளையல்கள் அணிந்த அந்த மலர்க்கைகள் வில்லை எடுத்தன. அவ்வளவுதான்! ஒரே அம்புமாரி பொழிந்துவிட்டாள். அவளுடைய அந்த தர்ம ஆவேசத்தின்முன் யார்தான் நிலை நிற்கமுடியும்? விஷத்தைக் கக்கிக்கொண்டுவந்த அந்த அஸ்திர சஸ்திரங்கள் கோப தாபங்கள் எல்லாம் ஒரே தூள் தூளாகச் சிதறிப்போயின.

அவள், தாய் செய்த அந்த அற்புதமான வில் விளையாட்டிலே, அலைமேல் அலையடித்துப் பொங்கி வந்துகொண்டிருந்த அந்த அசுர சமுத்திரமே வற்றிப்போய்விட்டது. சர்வாதிகார வெறி பிடித்து விண்ணையும் மண்ணையும் ஒருங்கே நடுங்க வைத்துக்கொண்டிருந்த அந்த நரகாசுரன் "அம்மா!" வென்று அலறிக்கொண்டு தடால் என்று கீழே விழுந்துவிட்டான்.

கொடியவனாகிய அவனும் பூமிதேவியின் புதல்வன்தானே. மகனாயிருந்தால்தான் என்ன? குற்றம் செய்தவன் தண்டிக்கப்படுவான். நீதியின் முன் தாய் ஏது? நீதியின் முன் நீதிதான் நிற்கும். தேவி நடு நிலைமை தவறாதவள். என்பதை இந்த வதம் அறிவுறுத்துகிறது. ஆனால் தாயுள்ளம் எப்பொழுதும் அன்பும் கருணையும் நிறைந்ததுதானே. பிறகும் "உனக்கு என்னவரம் வேண்டும்?" என்று கேட்கிறாள் கடைசியாக. 'என்னை நினைத்து விழாக் கொண்டாடி மங்களஸ்நானம் செய்து மக்களெல்லோரும் வாழவேண்டும். அப்படிச் செய்பவர்கள் கங்கையில் நீராடிய பலனைப் பெறவேண்டும்' என்று கேட்கிறான்.

இந்த அற்புதமான காட்சியைக் கண்டு கண்ணனது "மல்லாண்ட திண் தோள்"கள் பூரிக்கின்றன. தேவியின் இந்த வெற்றியிலிருந்துதான் தர்மத்தை நிலைநிறுத்துவதற்கு வேண்டிய ஒரு சக்தி கண்ணனுக்கே கிடைத்ததாம். இது தான் நரகசதுர்த்தசியின் ஸாரமான கருத்து. ஸத்யபாமையின் வெற்றி பெண் குலத்திற்கே வெற்றிதானே. இன்றும் நாடு இருக்கின்ற இந்த நிலையிலே. அதர்மத்தோடு போராடி சுதந்திரம், சமாதானம் சகோதர தர்மம் என்கிற மங்களதீபங்களை ஏற்றி வரிசையாக "தீபாவளி"யாக வைப்பதற்குப் பெண்களின் உதவியும் தர்மாவேசமும் தான் தேவை, என்பதை, நவராத்திரி தொடங்கிப் பலவிதமாகப் போதிக்

கிறான் தேவி. முதலிலே சக்தி, பிறகு பொருள், பிறகு அறிவு. கடைசியில் இவற்றிற்கெல்லாம் மேலாக வெற்றி எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி. என்கிறான் பாமை. * * *

"அதோ வருகிறான். இதோ வந்துவிட்டான், என்று நடுநடுங்கி ஓடுகிறார்கள் தேவர்களும் முனிவர்களும். தாரகன் ஸிம்மமுகன் சூரபத்மன் இவர்களது கொடுங்கோன்மையால் ஏழு உலகங்களும் மழுவாய்க் கொதித்தது. எதிர்ப்பட்டவர்களையெல்லாம் கொன்றுகொன்று குவித்தார்கள் தேவர்களைச் சிறை வைத்தார்கள். அவர்கள் செய்த கொடுமை எண்ணத் தொலையாது. ஏட்டிலடங்காது. சராசரப் பொருள்களெல்லாம் நடுங்கின. இந்தத் தொல்லையை நீக்க வந்து தோன்றினன் முருகன்.

தீபாவளியை அடுத்த ஆறும் நாள் கந்த சஷ்டி. பயங்கரமான போர்க்களம். எதிரே, மூன்று வலிய கொடிய அஸுரர்கள், இங்கே நவ வீரர்கள். அவர்களுக்கிடையே பாலசூரியன்போல் வேலும் கையுமாய் நிற்கிறான் சின்னஞ்சிறு குழந்தைக்குமரன். இந்தக் குழந்தையா அவனைப் போருக்கு அழைக்கிறது என்று ஆச்சரிய மிகுதியினல் திகைக்கிறார்கள் தேவர்கள்.

ஒரே வீச்சு. சூரனது தலை கீழே விழுகிறது. என்ன ஆச்சரியம்! இன்னொரு தலை முளைத்துவிட்டது. அது யானைத்தலை. கஜமுகன் தம்பிக்கு இதைக் கண்டால், பயமா? இன்னொரு வீச்சு. அற்றது தலை. இப்படி எத்தனை தலைகள்தான் முளைக்கும்? அந்தக் குழந்தைக்கும் சலிப்பில்லையா? என்று நடுங்குகிறார்கள் தேவர்கள்.

பார்த்தான் குமரன். ஒரு வீச்சிலே உடலையே இரண்டாக்கி நடுக்கடலிலே எறிகிறான் பெரிய மலையாக வருகிறான் அதையும் வேல் தூளாக்குகிறது. அங்கேயும் அழகிய மாமரம் முளைக்கிறது. அதையும் பிளக்கிறான் இராமன் மராமரம் துளைத்ததுபோலே, தடாலென்ற ஓசையோடு மரம் வீழ்கின்றது. சூரன் தன் தவறை உணர்கின்றான். மரத்தின் இரு பகுதிகள் ஒன்று மயிலும் ஒன்று கோழியுமாக மாறி முருகனைச் சரணடைகின்றன. தன்னை ஏதேனும் ஒரு பணி செய்ய ஏற்றுக்கொள்ள வேணுமென்று கெஞ்சுகிறான். கோழியைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் ஏற்றுக்கொள்ளுகிறான் குழந்தைக்குமரன்.

வெற்றி மாலை சூடி நீல மயில்மீது ஏறிப் பவனி வருகிறான் முருகன், இந்த அற்புதமான காட்சியைத்தான்,

சீர்திகழ் தோகை மயில்மேலே-ஒரு
செஞ்சுடர் தோன்றும் திறம்போலே

என்று இராமலிங்க ஸ்வாமிகளும்.

ஏறுமயி லேறிவிளையாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே.
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே

என்று அருணகிரியாரும், புதுமைக் கவிஞரான பாரதி.

வில்லினை ஒத்தபுருவம் வளைத்தனை வேலவா—அங்கோர்
வெற்புநொருங்கிப் பொடிப் பொடியானது வேலவா

என்றும் பாடிப் பாடிப் புகழ்கிறார்கள்.

இன்று உலகத்தைப் பீடிக்கும். தாரக, சிம்மமுக, சூரர்களை வெல்ல, யார் வரப்போகிறார்கள்? தாயா? சேயா? எப்பொழுது வரப்போகிறார்கள்? என்று கேட்க வேண்டுமென்று தோன்றுகிறதல்லவா?

இன்னும் வெள்ளிமுளைக்கவில்லை. இதற்குள் உதயராகம் கேட்கிறதே என்று ஆச்சரியப்படுகிறேன்.

ரங்கநாதருட பங்கஜ பாதத்தை
அங்கம் உருகித் தொழுதேன்.

என்ற பாடல் இசையோடு கலந்து நம்மை எழுப்புகிறது. ஏன்? என்ன? வேறொன்றுமில்லை. பெண்மணிகள், தேங்காய், பழம், புஷ்பம் குங்குமம், வெற்றிலைக் கூடை, மடிஸஞ்சிகள் சகிதமாய் துலாக் காவேரி ஸ்னானம் செய்யப் புறப்படுகிறார்கள். காலையில் காவேரியில் நீராடி, தானங்கள் நடைபெறும். பகலில் கோயில் மண்டபங்களிலோ, அல்லது ஆற்றங்கரையை அடுத்த மண்டபங்களிலோ துலாக் காவேரி புராணப் பிரசங்கம் நடைபெறும். கடைசி நாளாகிய, கடைமுகம் மிகவும் விசேஷமான ஒரு நாளாகக் கருதுவார்கள். ஆனால் அதற்கும் அடுத்த நாளை "முடவனுக்கு மோட்சம்" என்று குறிப்பதுண்டு. கைகால்களற்ற ஒரு முடவன், தான்காவேரியில் நீராடவில்லையே என்று ஏங்கினனும் அவனுக்கும் முத்தியளித்தாராம் எம்பெருமான். என்று புராணம் சொல்லும்.

ஆனால், இருகரையும் புரண்டு, வர்ஷாகாலத்தின் முழுசௌந்தர்யத்தையும் காண்பிப்பவள்போல், கொப்பும், நுரையுமாய் வரும் காவேரி நதியைப் பார்க்கும்பொழுது, நாஸ்திகனும் கடவுள் என்ற பெயரைச் சொல்லாவிடினும் பிரகிருதி தேவியின் அற்புதம் என்று கரங்குவிப்பான் என்பதில் சந்தேக முண்டா?

* * *

ஆம்! பாணங்களின் ஓசை, மேளக்காரன் அற்புதமாய் வாசித்தவைகள் எல்லாம் ஓய்ந்துவிட்டன. பாண்ட் வாத்யகோஷ்டியின் முழக்கமும் அமர்ந்துவிட்டது. 'ஜல் ஜல்' என்று ஜால்ராக்களின் ஓசையும், 'திடும் திடும்' என்று மேகம்போல் மிருதங்கம் முழங்குவதும்தான் கேட்கிறது. ஏன்? அங்கே என்ன விசேஷம்? என்று கேட்கவேணுமா? விஷயம் வேறொன்றுமில்லை. பேயாழ்வாரின் "ஒய்யார நடை" உத்ஸவந்தான். தேனமர் சோலை மாடமாமயிலை என்று புகழப்பெற்ற மயிலாப்பூரிலே, ஆழ்வார் அவதரித்த இந்தப் புனிதமான தலத்திலே, மாதவன் சந்நிதியிலே, எம்பெருமானைக் கண்ட அந்த ஆனந்த மிகுதியினாலே கூத்தாடுகிறார் ஆழ்வார். இந்த அருமையான விழாவை காதவழி நடந்தேனும் காணவேண்டும். என்று ஓடி வருகிறார்கள் பக்தர்கள்.

* * *

இதோ இன்னொரு காட்சி. இவன் யார்? குமரனா? அல்லது மாரனா? என்றுகூடச் சந்தேகம் வந்துவிடுகிறது நமக்கு. இதுவேறு யாருமல்ல. இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தமூர்த்தி. சைவப் பயிரையும் தமிழ்ப் பயிரையும் ஒருங்கே வளர்க்கவந்த புனிதன். சின்னஞ் சிறு பையன். குழந்தை சம்பந்தன், பதினாறு வயதுகூட முடியவில்லை. கலியாணக் கோலத்தோடு நிற்கிறான். வேதவிதிப்படி அம்மிமிதித்து, அருந்ததி பார்த்து எல்லாம் நடைபெறுகிறது. கடைசியில் சிவதரிசனம் செய்ய எல்லோரும் கோயிலுக்குட் போகிறார்கள். கர்ப்பகிருக முழுமையும் ஒரே ஒளி வெள்ளம். ஜோதி மற்றவர்கள் முன்னே செல்ல, ஒவ்வொருவராய் அதற்குள்ளே செல்லுகிறார்கள். கடைசியில், மணமகனும் மணமகளும் முகத்தலம்பற்றியவர்களாய் மெல்ல மெல்ல நடந்து உள்ளே செல்லுகிறார்கள். அந்த முகத்திலேதான் என்ன ஒளி! ஹர! ஹர! மகாதேவ! என்ற ஒலிகோயில் முழுவதும் சிலையோடுகிறது.

மறுவிநாடி, இதென்ன, கனவா? நனவா? என்றுகூட நிர்ணயிக்க முடியாதபடி அந்தக் கோயிலில் ஒரே அமைதி. இந்திர ஜாலமா? என்று வந்தவர்கள் திகைத்தார்கள். எம்பெருமானுடைய அருள் சோதி வெள்ளத்திலே, சம்பந்தர் முதல் எல்லோரும் கலந்துவிட்டார்கள் என்று தீர்மானிக்கிறார்கள். இந்த அற்புதக் காட்சியைத்தான் திருநல்லூர்ப் பெருமணம் என்று கொண்டாடுகிறார்கள் சிவநேசச் செல்வர்கள் இந்த விழாவை சிறப்பாய்க் கொண்டாடாத சிவலாயம் தமிழ் நாட்டிலிருக்கமுடியுமா? எலும்பைப் பெண்ணாக்கிய அற்புதம் நிகழ்ந்த திருமயிலையிலே இன்றும் இந்த விழா வெகு சிறப்பாய்க் கொண்டாடப்படுகிறது. பார்த்துப் பார்த்துப் பரவசமாகிறார்கள் பக்த கோடிகள். ஐப்பசியில் நடந்த அற்புதங்கள் எல்லாவற்றிலும் அற்புதம் இதுதான் என்று போற்றுகிறது பக்தர்களது நெஞ்சம்.

---

ஸ்ரீ. ஜானம்மாள் — சிறு கதை —

# அபூர்வ மாறுதல்

நடந்ததை உள்ளபடி உரைப்பதுதான் கடமை. நீங்கள் நம்புவீர்களோ நம்பதான் மாட்டீர்களோ அது எனக்குத் தெரியாது. விஷயம் சற்று சிரமம்தானாயினும், பொறுமையை இழக்காமல் இருக்கும் பக்ஷத்தில் பொருள் விளக்கம் சிறிது நேரத்துக்குள்ளாகவே விளங்கிவிடும். இக்கட்டுரைக்கும் சீமைப் பிரயாணத்திற்கும் யாதொரு சம்மந்தத்தையும் காணமே என்றுமட்டும் பதறி மொழிந்திடாதீர்கள்! ஆத்திரப் படாமல் முடிவுவரை படிப்பீர்களானால் சில அருமையான விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். கதை ஆரம்பமாகிவிட்டது; கவனத்துடன் படியுங்கள்.

எனது பெயர் கலாவதி. பெயருக்குத் தக்கவாறு எனக்கு கலைகளில் சிறிது ஞானமுண்டு. எஸ். எஸ். எல். ஸி. வரையிலும் தேறிய மாணவி நான். நாகரீகப் பழக்கவழக்கங்களையும் புதிய விஷயங்களையும் ஆராய்ந்து தெரிந்துகொள்வதில் எனக்கு மிக்க ஆர்வமுண்டு. ராமாயணம், பாரதம், பாராயணமென்றால் பிழிந்துபோடும் பழையதைத் தின்னச் சொல்வதைப் போல அவ்வளவு மந்த பண்டமாக அவைகளை நான் மதித்துவந்தவள் மில்டன், ஷேக்ஸ்பியர் புத்தகம் என்றால் மான்போலத் துள்ளிக்குதித்துக் கையில் எடுத்த புத்தகத்தை முடிக்காமல் கீழேவைப்பது கிடையாது! அப்பேர்க்கொத்த சுபாவத்தை உடையவள்.

அந்த உச்சஸ்தாயியில் இருந்த எனக்கு இரண்டு மூன்று மாதங்களாக உடம்பு முற்றிலும் மாறுதலடைந்திருக்கிறது! விசால நயனமிரண்டும் இப்பொழுது இடுங்கி பாதாளத்தில் வாதாடுகின்றன! சதா புன்னகை பூத்து முத்துவரிசையாகயிருந்த என் தந்தங்கள் இப்ப உதட்டை நெட்டிக் கொண்டு வெளியில் தலைகாட்ட ஆரம்பித்திருக்கின்றன. குயிலினும் இனிய சாரீரம் வாட்டுத் தவளைக்கு ஒப்பாக ஒலமிடுகிறது. துடை வரையில் கருநாகம்போல ஆடிக்கொண்டிருந்த எனது கூந்தல் கழுத்திற்கு மேலாக ஓடிக்கொண்டு போகிறது! கொழ மழவென்று இருந்த என் சரீரம் சொர சொரவென்று முள்ளுபாய்ந்து தேய்ந்து பாலாடையாக கிடக்கிறது. எனது செந்தாமரை நிறம் மறைந்து நிபோத்பல வர்ணம் மேலிட்டு நிழலாடுவதை

பார்த்தால்தான் என் உள்ளம் எரிகிறது. வாசகர்களே! இதற்குமேல் என் லக்ஷணத்தை வர்ணித்து எழுதுவதற்கு எனது பேனு இணங்கவில்லை. இவைகளே போதுமானவை!

பொறுங்கள் காரணம் வெளிவரும். நான் மிகவும் பலவீனமாகயிருப் பதினுல் என் ராமாயணத்தை இருப்பக் கூறுவதானது முடியாது! நான் அதை டாக்டரிடம் சொல்லும்பொழுது சுலபமாக நீங்களும் தெரிந்து கொள்ளலாம்! பொறுமையுடையார் பூமியாள்வாரல்லவா?

II

எனது தந்தையார் என்னை சீமைக்கு வழிகொண்டு அனுப்புவதற்காக திருவள்ளூரிலிருந்து வந்திறங்கினர். என்னைப் பார்த்தவுடன்,

"அடுத்தவாரம் சீமைக்கு கிளம்பிப்போகும் சீமாட்டியாம்மா நீ! என்ன கோலமிது? என் பெண் கலாவதியா நீ?" என்று சொல்லி பலபலவென்று கண்ணீரை உதிர்த்தார்.

"என்ன அப்பா பிரமாதம்! நான்தான் அடுத்த வாரம் சீமைக்கு போகப்போறேனே! நடுவில் வியன்னுவில் ஒரு வாரம் தங்கி நல்ல நிபுண ரான ஒரு டாக்டரிடம் என் உடம்பைக் காட்டி தேத்திக்கொண்டு போகி றேன். கவலே ஏன் படவேணும்?" என்று அலக்ஷ்யத்துடன் பதிலளித்தேன்.

"ஐயோ! இன்னம்மா டாக்டரிடம் காட்டிக்கொள்ளாமல் இருக்காய்? படிப்பையறிந்தும் பேதைமை விலகவில்லையே! நல்ல புத்திசாலி. முதலில் உன் கணவன் எப்பொழுது வரப்போகிருன் என்பதைச் சொல்லு" என்று வினவினர்.

"இன்று வருவதாய் தந்தி வந்திருக்கிறது! இன்னம் ஒரு வாரம் தானேப்பா பிரயாணத்திற்கு இருக்கிறது! அதற்குரிய சாமான்களையெல் லாம் பார்த்து எடுத்து பாக் செய்துகொள்ளவேண்டாமா?

"கலா! நீ சற்று பேசாமலிருந்தாலே அதுவே போதுமானது. சீமை யாம்...என்று சோபத்வனியுடன் கூறிவிட்டு என் பிதா டாக்டரை அழைத்துக்கொண்டு வருவதற்கு காரில் ஏறிக்கொண்டு போய்விட்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் என் கணவரும் நெல்லூரிலிருந்து வந்திறங் கினர். என்னைப் பார்த்ததுதான் தாமதம். உடனே இரத்தம் பொங்கி அவ ரது முகத்தை ஒரே சிகப்பாய் அடித்து கண்களும் உதடும் துடிக்கும்படிச் செய்துவிட்டது.

"யாரடா அங்கே! போடா சீக்கிரம்! அம்மாவுக்கு கட்டிலில் படுக் கையைப் போடு" என்று வேலையாளுக்கு கட்டளை பிறந்தது. பிறகு என்னை அழைத்துக்கொண்டு போய் மெத்தைமீதில் படுக்கவும் வைத்து விட்டார். இத்துடன் என் கணவர் பேசாமல் இருப்பர் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? அதுதான் அவரால் முடியாது. "அடே கிருஷ்ணு அதேண்டா மரம்போல் நிற்கிருய்? தர்மாமீட்டரைக் கொண்டுவா!" என்று இறைந்தார். சமையல்காரக் கிருஷ்ணனும் அந்த ஜுரக் குச்சியைக் கொண்டுவந்து என் நாதரிடம் கொடுத்தான். அவர் உடனே அதை லோஷனில் அலம்பி ஒரு தரத்திற்கு மூன்று முறை வைத்து அதைக் கண் கொட்டாமல் உருட்டித் திருப்பி பார்ப்பதைக் கவனித்துக்கொண்டிருந்த நான் "நாதா! தர்மாமீட்டரை குலுக்கி இறக்காமல் மேலும் மேலும் வைத்துப் பார்த்தால் ஜுரம் ஏறியிருப்பது எப்படி தெரியும்?" என்றேன்.

"தன் உடம்பை கவனித்துக் கொள்வதற்கு வலக தெரியாத ஒரு பெண் ஐரோப்பா யாத்திரை கிளம்பியதுதான் விந்தையிலும் விந்தை!

மேலும் எனக்கு புத்தி கற்பிப்பதற்கும் வந்துவிட்டாள். தன் உடம்பில் உஷ்ணம் இருப்பதற்கும் இல்லாமலிருப்பதற்கும் வித்யாசத்தை தெரிந்து கொள்வதற்கு முடியவில்லை! இதை எவரிடம் சொல்லிக்கொள்வது? இப்படி சப் நார்மல் வருவதற்கு என்ன காரணம்? அடே கிருஷ்ணு! டாக்டர் ஏன் இன்னும் வரக் காணம்! போய் போனில் பேசி, உடனே புறப்பட்டு வரச்சொல்லு'' என்றார்.

மறுபடியும் சற்று நேரம் கழித்து, "ஏண்டா நீ சரியாகச் சொன்னயா? இன்னும் வரக்காணமே! நீ நேராக அவர் வீட்டிற்குப் போய் கையுடன் அழைத்துக்கொண்டு வந்து சேர். என்ன தெரிகிறதா?'' என்றார்.

டாக்டர் வருவதற்குள் என் அறைக்கும் வாச வராண்டாவுக்கும் சுமார் ஐம்பது தடவைக்கு மேலாகவே போய் வந்திருப்பர். கண்ணில் பட்டவர்கள் எல்லோருக்கும் வசைமொழிகள் மழைபோலப் பொழிந்தன. சீமை பிரயாணத்தை நிறுத்திவிட்டார். வீட்டில் ஆர்ப்பாட்டம் பெரிதாகிவிட்டது! எல்லாவற்றையும் சமாளித்துத் தாங்குவதற்கு சக்திபிருந்த எனக்கு சீமைப் பிரயாணப் பிளவைக் கேட்கவே கண் இரண்டும் இருட்டிக்கொண்டு தலையைச் சுற்ற ஆரம்பித்துவிட்டது! என்னையும் அறியாமல், "ஐயோ! மூன்று மாதங்களாக நான் பட்ட சிரமமும் முயற்சியும் நிஷ்பலமாகப் போகும்படி செய்துவிட்டீர்களே? "ஆகாராதிகளையும் பழக்க வழக்கங்களையும் கால ரீதியை அனுசரித்து மாற்றி அமைத்துக்கொள்வதுதான் தக்க சாதனம்'' என்று எழுதியதால் வந்த ஆபத்தல்லவா இது?'' என்று மொழிந்தேன்.

அம்மொழிகள் எனது நாதரின் ஹிருதயத்தில் அம்பினின்று கிளம்பிய பாணத்தைப்போல தைத்தன. அவ்வேதனையைத் தாங்கமுடியாத அவர் "கலா! என்ன சொன்னுய்? உன் உடம்பு இந்த லக்ஷணத்திற்கு வந்தடைந்ததற்கு காரணம் எது என்றாய்? எனக்கு ஒன்றும் சரியாக விளங்கவில்லையே'' என்று துக்கத்துடன் கேட்டார்.

"நாதா! அவசரப்படவேண்டாம். அப்பாவுடன் டாக்டர் வந்துவிடுவர் பிறகு விஷயங்களும் காரணங்களும் வெளிப்படப்போகின்றன!'' என்று நான் நிதானமாகப் பதில் உரைத்தேன்.

## III

"என்னம்மா, உடம்பு இப்படி கேவலமாக இளைத்து இருக்கிறது? காரணம் என்ன?'' என்று டாக்டர் என்னை வினவினர்.

முதலில் பல்லையும், ஹார்ட்டையும் பாருங்கள்'' என்றார் என் கணவர்.

"ஏன் சார்! நீங்கள் அடுத்த வாரமா சீமைக்கு புறப்படப்போகிறீர்கள்'' என்று டாக்டர் கேட்டார். 'டாக்டர்வாள் முதலிவ் குழந்தையைக் கவனியுங்கள். சீமை எதற்கு? சிக்குதான் தலைகொண்டு வந்திருக்கே!' என்றார் என் பிதா.

"என்ன உடம்பு அம்மா உங்களுக்கு?'' என்று கேட்டுக்கொண்டே எனது நாடியையும் ஹ்ருதயத்தையும் நன்றாகப் பரிசோதனை செய்தார், பிறகு, "சாப்பாடு ஒன்றுமே செல்லவில்லை என்று தெரிகிறது'' என்றார். "அப்படி ஒன்றுமில்லை டாக்டர்! இந்த மூன்று மாதங்களாக விடமின் ஆகாரங்களையே நான் புசித்துக்கொண்டு வருகிறேன்'' என்றேன்.

"லக்ஷணம்! கண்கள் பாதாளத்தில் சுழலமிடுகின்றன. தேகம் வாட்டி வதங்கித் துவளுகிறது. விடமின் ஆகாரங்களாம்! என்றார் கணவர். "சார்! அவசரபடாதீர்! நோயாளியே எல்லாவற்றையும் உரைப்பார் ஏதோ தகுந்த காரணம் இருப்பதாய்த்தான் தெரிகிறது'' என்றார் டாக்டர்.

"கணவர் எனக்கு இட்ட கட்டளைப்படி நான் நடந்துகொண்டேன். வேணுமானால் அவர் எனக்கு எழுதிய கடிதத்தையே உங்களிடத்தில் கொடுத்துவிடுகிறேன்; அதை எல்லோருக்கும்தெரியும்படி வெளிப்படையாக இரைந்து படிக்கவேண்டும்'' என்று டாக்டரை வேண்டிக்கொண்டேன். "அது இருக்கட்டும். உங்களின் உதடுகள் இப்படி குழி குழியாய் பள்ளம் விழுந்து ரணகாயமாக யிருப்பதின் காரணம் யாதோ?'' என்றார் டாக்டர்.

"டாக்டர்! நீங்களும்கூடவா அவசரப்படவேண்டும் நான்தான் கடிதத்தை படித்துப் பார்த்தால் எல்லா விஷயங்களும் விளங்கும் என்றேனே!" என்று கூறிக்கொண்டே என் கணவன் எழுதிய கடிதத்தை டாக்டரிடத்தில் அளித்தேன். டாக்டர் கீழ்வருமாறு படிக்கலானார்.

நெல்லூர்,

"என் ஆருயிர்க்காதலி! ஆச்வாசபங்களா, 8—8—36.

நமது சீமைப் பிரயாணம் இன்னம் மூன்று மாதங்கள்தான் இருக்கின்றன. உன்னைப்பற்றிய கவலைதான் அதிகமாகயிருக்கிறது! இட்டிலி, வெங்காய சாம்பார், டோமெடோ ரசம், முதலியவைகள் ஒன்றுமே சீமையில் அகப்படாது. உனக்கு எண்ணெய் ஸ்னனம் ஒரு முறை தவறிவிட்டாலே மண்டைக்கொதிப்பு கண் எரிச்சில் வந்துவிடுகிறது. எண்ணெய் சீக்காய் இரண்டும் மருந்துக்குக் கூட அங்கு அகப்படாது.

ஆதலால் இந்த மூன்று மாதங்களுக்குள், படிப்படியாக நமது ஆகாராதிகளையும் பழக்கவழக்கங்களையும்மாற்றிக்கொண்டு சீமைக்குரிய நாகரீகவாழ்க்கையை கைக்கொள்வதுதான் உசிதம் 'முயற்சியுள்ளோர் இகழ்ச்சி அடையார்' என்றபடி நீ இவைகளை ஊக்கத்துடன் முயற்சி செய்து பார்ப்பாயாகில் எல்லாம் உனக்கு சுலபமாகவே முடிந்துவிடும்.

முதலில் நீ மேஜைமீது பீங்கான் பாத்திரங்களில் புசிப்பதற்குக் கற்றுக்கொள்ளவேணும், சீமையில் தின்பண்டங்களை கையிட்டுத் தொடவேமாட்டார்கள். அதனால் நீ ஸ்பூனினாலும் முள்ளு (போர்க்) னாலும் ஆகாராதிகளை எடுத்து உண்பதற்கு ஆரம்பம் செய்யவேண்டும். பால், வெண்ணெய், கிரீம் முதலியவைகள் அங்கு ஏராளமாக கிடைக்கும். நீ சாதத்தைத் குறைத்துக்கொண்டு பால் பதார்த்தங்களை அதிகமாக சேர்த்துகொள்வதில் துணியவேணும். உடம்புக்கு அவை மிகவும் நல்லவை நம்மைப்போல காய்கிழங்குகளை நன்றாக வேக வைக்கமாட்டார்கள் அங்கு; எல்லாம் அரை வேக்காடாகவே சமைத்து வைப்பார்கள். மிளகாய் பார்ப்பதற்குக்கூட அங்கு அகப்படாது. குடிப்பதற்குக்கூட ஜலம் சில வேளையில் கிடைக்கிறது அரிது அங்கு.

ஆதலினால் நான் சொல்வது என்னவென்றால் நம்மைப் பார்த்து பிறர் நகைக்காமல் இருக்கும்படி நடந்து கொள்ளவேணும் என்பது தான். அதற்கு முக்கியமாக நமது பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்வதுதான் தக்க சாதனமாகும்.

கலா! நமக்கு பாஸ்போர்ட் கிடைத்துவிட்டது. இரண்டு பேருக்கு கப்பலில் Book-ம் செய்துவிட்டேன்.

நான் உன்னை சந்திக்கும்போது நீ ஆச்சரியமாக மாறியிருப்பாய் என்று திடமாக நம்புகிறேன்.

இப்படிக்கு,
உன் ஆருயிர்க் காதலன்
பாலகோபால்''

என்று படித்து முடித்தார். நான் எழுதியதில் என்ன தவறுகள் இருக்கின்றன? என்றார் கணவர். "சார்! நீங்கள் எதிர்பார்த்ததைப்போல உங்கள் மனைவி முற்றிலும் மாறியிருப்பதுமட்டும் உண்மையல்லவா? இந்த கேஸில் டாக்டரினால் டயக்னோஸ் செய்வது மிகவும் கடினம், பேஷண்டால்தான் முழுமையும் சொல்லமுடியும்" என்றார் டாக்டர்.

உடனே நான் "நடந்திருப்பதை உள்ளபடி உரைக்கிறேன். தயவு செய்து எல்லோரும் கவனத்துடன் கேட்கவேணும்.

கணவன் எனக்கு இட்ட கட்டளைப்படி பழக்கவழக்கங்களையும் மாற்றிக்கொள்வதில் அதிக ஊக்கத்துடனும் உத்ஸாகத்துடனும் ஆரம்பித்தேன். முதல் இரண்டு மாதங்கள் வரையில் ஆகாராதி முதலியவைகளை படிப்படியாக குறைத்துக்கொண்டு வந்ததில் சற்று உடம்புக்கு ஒய்ச்சலும் தலைச் சுற்றலும் ஏற்பட்டது. கடைசியான மூன்றாவது மாதத்தில் நான் அடியுடன் புளி, மிளகாய், பருப்பு, எண்ணெய்முதலிய பண்டங்களை அகற்றி அதற்குப் பதிலாக பால் பதார்த்தங்களான பாயசம், திரட்டிப் பால், தூத்பேடா, ரசகுல்லா முதலியவைகளை அதிகமாக உட்கொண்ட நிமித்தம் வயற்று கடுப்பும், உப்புசமும் உபத்திரவம் ஏற்பட்டது. அரைவேக்காடான கிழங்குகளை தின்றதினால் வயற்று வலியும் மாரவலியும் விடாமல் வாட்டி வருகிறது. பதார்த்தங்களை கையினால் தொடாமல், கரண்டி முள்ளுகளினால் எடுத்து தின்பதினால் இப்படி உதட்டில் பொத்தி ரணகாயமாகிவிட்டது. எண்ணெய் ஸ்நானத்தை விட்டேன். என் கூந்தல் சிறகுதிர்ந்த மரத்துக்கு ஒப்பாய் போய்விட்டது. இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒருமுறை உடம்புக்கு குளிப்பதினால் என் சரீரம் இப்படி முள் பாய்ந்து கருநிறம் மேலிட்டு ஓங்கி நிற்கிறது. டாக்டர்! இந்த மேஜை சாப்பாட்டை ஆரம்பித்தது முதற்கொண்டு குமட்டலும் வெகட்டலும் என்னைப் பிடித்து ஆட்டி வருகிறது. அன்னத்வேஷம் மேலிட்டு என் உடம்பை குட்டிச் சுவருக்கொப்பாக மாற்றியதை நான் கண்கூடாகப்பார்க்கின்றேன். நான் உரு தெரியாமல் மாறியிருப்பதின் காரணத்தை தெரிந்துகொண்டுவிட்டீர்களல்லவா?" என்று சொல்லி முடிக்கும்போது எனக்கு மூர்ச்சை வந்துபோட்டுவிட்டது. உடனே டாக்டர் மருந்து கொடுத்தார்; பிறகு பிரக்ஞை வந்துவிட்டது.

"பாலகோபால்! உங்கள் காதலியின் வியாதியைப் போக்குவதற்கு என்னைப் போன்ற பரீக்ஷையில் தேறிய டாக்டர்களினால் ஒருகாலும் ஆகாது மேலும் அந்த நோயை கண்டிக்கும் மருந்து எந்த மருந்து ஷாப்பிலும் கிடைக்காது. பேசாமல் அவளை அவளது பிதாவுடன் கூட்டி இப்பவே அனுப்பிவிடுங்கள். இரண்டே மாதத்தில் உமது மனைவியின் அனுபவ சக்தி வாய்ந்த பாட்டியார், எண்ணெயிட்டு, அமுதூட்டி தக்கபடி பத்தியம் செய்து அவள் உடம்பை வழிக்குக் கொண்டுவந்து விடுவார். நீங்கள் மறுபடியும் பெரிய மாறுதல் ஒன்றை உங்கள் மனைவியிடத்தில் கண்டு ஆச்சரியப்படப் போகிறீர்கள்" என்று கூறிவிட்டு டாக்டர் போய்விட்டார்.

என் பாட்டியார் எனக்களித்த பத்தியத்தினால் பழய கலாவதியாக மாறிவிட்டேன். இனி நானும் என் கணவரும் அன்னிய நாட்டு காக்ஷியைக் காண்பதைவிட நாம் நாட்டில் இருக்கும் புண்ணிய தீர்த்தங்களையும் பரிசுத்த பர்வதங்களையும் தரிசிப்பதுதான் சிலாக்யம் என்று தீர்மானித்துக் கொண்டோம்.

# "பூஜா பலம்"

(வை. மு. ஸ்ரீநிவாஸன், எம். ஏ., பி. எல்.)

பூர்வ ஜன்மத்தில் புண்ணியம் செய்திருந்தால்தான் இந்த ஜன்மத்தில் நல்ல கதி கிடைக்கும் என்பது நமது சித்தாந்தம். எவராவது ஒருவர் நல்லபெயரும், புகழும் பெற்று கௌரவத்துடன் வாழ்க்கை நடத்துகிறுரென்ருல், அவரைப்பார்த்து நாம் "பூர்வ ஜன்மத்தில் அவர் செய்த பூஜாபலம் அவரை இந்த நிலையில் வைத்திருக்கிறது" என்று சொல்கிறேமல்லவா? நல்ல பரம்பரையில் உதித்து, நல் வாழ்க்கை நடத்தி, ஸத்விஷயங்களில் சிரத்தைகாட்டி வரும் எவரையும் எல்லாரும் கொண்டாடுவது சகஜந்தானே?

"வைத்தமாநிதி. முடும்பை" குடும்பத்தார் என்ருலே ஆதி காலம் முதல் திருவல்லிக்கேணியிலும் ஸ்ரீ வைஷ்ணவ சமூகத்திலும் ஒரு தனித்த மதிப்பு இருந்து வருகிறது. சென்ற நூற்ருண்டில் ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்த ஸ்ரீ. வை. மு. சாமுலு ஐயங்காரின் பெயர் இன்றும் மறையாது கோயிலில் கல்வெட்டால் நிறுவப்பட்டிருக்கிறது. அதே குடும்பத்தைச் சேர்ந்தவரும், அத்தகைய கைங்கரியத்தில் ஈடுபட்டவருமானஸ்ரீ. வை. மு. ஸ்ரீநிவாஸ அப்பங்கார் ஸ்வாமி (அடியேனுடைய தந்தை வை. மு. பார்த்தசாரதி அய்யங்காரின் தந்தை.) அவர்களிடம் காலக்ஷேபம் கேட்காதவர் சென்ற தலைமுறையில் திருவல்லிக்கேணியில் இருந்ததே இல்லை. அதேபோல மகா பண்டிதர் ஸ்ரீ வை. மு. சடகோப ராமானுஜா சாரியர் (அடியேனுடைய தந்தையின் தமையனர்) அவர்களின் வித்துவத்தைப் போற்ருதாரும் சென்ற தலைமுறையிலில்லை. நூற்றெட்டு திருப்பதியையும் குறித்துப் பாடியுள்ள ஸ்ரீமதி வை. மு. வேதவல்லி அம்மங்கார் (அடியேனுடைய தந்தையின் தமக்கையார்) அவர்களின் பக்தியைக் கொண்டாடாதவரும் சென்ற தலைமுறையில் இல்லை. இப்பேர்ப்பட்ட பிரசித்திபெற்ற உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்தான் ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரும். கம்பராமாயணம், வில்லி பாரதம், திருக்குறள் முதலிய சிறந்த தமிழ் இலக்கியங்களுக்கு வியாக்யானம் செய்து பெயரெடுக்கும் பாக்கியமும் அவருக்குக் கிடைத்துள்ளது.

பூர்வ ஜன்மத்தில் அவர் செய்த பூஜா பலம் அவருக்கு எல்லா விதத்திலும் சிறப்பைக் கொடுத்திருக்கிறது. உயர்ந்த குடும்பத்தில் ஜனனம், சிறந்த கல்விப் பயிற்சி, நிகரற்ற இலக்கிய சேவை, பக்தி சிரத்தையுடன் கூடிய பகவத் கைங்கர்யம்—எல்லாம் அவருக்குக் கிடைத்திருக்கின்றன. அதேபோல் ஷஷ்டியப்த பூர்த்தி மகோத்ஸவமும் கொண்டாடும் பாக்கியம் அவருக்கு சென்ற 20-10-1942 கிடைத்தது. எம்பெருமான் க்ருபையால் 80-வது பிறந்த நாளும் இனிது கொண்டாடும் பாக்கியம் அவருக்கு கிடைக்குமாக!

* * * *

ஷஷ்டியப்த பூர்த்தி மகோத்ஸவத்தைப் பார்ப்பதென்ருலே எனக்கு ஒரு விசேஷ ஆசை உண்டு. இவ்வாசை முதன் முதலாக

என் சிறிய வயதில் என் அன்னை ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாளின் சிறிய தகப்பனாரின் சஷ்டியப்த பூர்த்தி வைபவத்தைக் காணும்போது உண்டாகியது. அதன் பிறகு வேறு இடங்களில் ஷஷ்டி வைபவத்தைக் கண்ணாரக் கண்டு களித்திருக்கிறேன். இருந்தாலும், இதுவரை ஸ்ரீ. வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரின் ஷஷ்டியப்த பூர்த்தி மகோத்ஸவத்தைப் போன்று கண்டதேயில்லை. இந்த விழா சம்பந்தமாக ராமாயணம், நாலாயிரம் முதலிய மகா கிரந்தங்கள் பாராயணம் நடந்து, சென்ற 24வ சாற்றுமுறை நடந்தது. அவ்வமயம் எழுந்தருளியிருந்த ஸ்ரீ கோவில் கந்தாடை அப்பன்—திருமணி ஸ்வாமி—ப்ரமாணம், ப்ரமேயம், ப்ரமாதா வென்னும் தத்துவங்களை விளக்கி, ஆதிக்ரந்தங்களைப் பூஜிப்பதிலும், இலக்கிய சேவை செய்வதிலும், எம்பெருமானுக்கு கைங்கரியம் செய்வதிலும் மிகுந்த சிரத்தை கொண்டுள்ள ஸ்ரீ கோபால கிருஷ்ணமாசாரியருக்கு பகவான் தீர்க்காயுசையும், சுபத்தையும் கொடுக்கவேணுமாய் ப்ரார்த்திப்பதாய் தெரிவித்தார். இவ்வைபவத்தை நேரில் காணும்போது எவ்வளவு ஆனந்தம் ஏற்பட்டது என்பதை எழுத இயலாது.

* * * * *

அதே மாதிரியான ஆனந்தம்—இதயப் பூரிப்பு—கண்களில் நீர் சொறியக் கை கட்டி நிற்கும் ஆனந்தம்—அன்னாருடைய சஷ்டியப்த பூர்த்தி தினத்தன்று ஏற்பட்டது. அன்று காலை ஸ்ரீரங்கம், திருமலை, பெருமாள் கோயில் திருமாலிருஞ்சோலை, ஸ்ரீ பார்த்தசாரதி, ஆழ்வார்திருநகரி, ஸ்ரீ வில்லிபுத்தூர், அம்பில், அப்பக்குடத்தான், திருவெள்ளறை, உறையூர், நாச்சியார் கோயில், திருச்சேறை, வானமாமலை, ஸ்ரீ பெரும்பூதூர், ஸ்ரீ மீனாக்ஷி உள்பட பல திவ்ய க்ஷேத்திரங்களினின்று அவருக்கு மாலை, மரியாதை, பட்டு, பவித்திரம் வந்து சேர்ந்ததை சபையில் அவருக்கு சாற்றின காக்ஷியை என்றும் மறக்கவே முடியாது. ஸ்ரீ வானமாமலை ஜீயர் ஸ்வாமி ஷஷ்டியாரை கௌரவித்து ஒரு பெரிய சால்வை அனுப்பியிருந்தார். கர்நாடக சம்பிரதாயமான இந்த பரிசு மிகவும் அபூர்வமானதென்று சொல்லவேண்டியதில்லை. பட்டும், பவித்திரமும் அணிந்த பின்னர் அவரால் தூக்கமுடியாதவாறு கனமான மாலைகள் ஒன்றன்மேலொன்றாக சாற்றப்பட்டபோது அவருடைய முகம் எங்கேயென்று தேடும் வண்ணம் இருந்தது. அவருக்கும், எல்லோருக்கும் ஆனந்தம்.

* * * *

வைதீகம், லௌகீகம் இரண்டுக்கும் ஈடுகாட்டி ஷஷ்டி விழாவை ஒருவாரம் நித்ய கல்யாணமாக வெகு விமரிசையாகக் கொண்டாடும் பாக்கியம் அவரது குமாரர் எஞ்ஜனீயர் ஸ்ரீ வை. மு. நரஸிம்மனுக்கு ஏற்பட்டது. அவருக்கு வலது கையாக உதவிய ஸ்ரீ எஸ். திருமலை அய்யங்காருக்கும், இச் சிறப்பில் பெரிய பங்கு உண்டு. அன்னதானமும் வஸ்திர தானமும் ஏராளமாக வழங்கிய

தோடு பல திவ்யஸ்தல எம்பெருமான்களுக்கு பீதாம்பரம் சமர்ப்பித்து உத்ஸவமும் நடந்தேறியது.


*　　*　　*　　*　　*

தமிழ் இலக்கிய உலகில் ஸ்ரீ கோபாலகிஷ்ணமாசாரியர் செய்துள்ள தொண்டைப் பாராட்டி தமிழ் நாட்டின் பிரபலஸ்தர்களும், வித்வான்களும் சேர்ந்து அவரைக் கௌரவப்படுத்தி ஒரு "ஷஷ்டியப்த பூர்த்தி ஞாபகார்த்த மலர்" தயாரித்திருக்கிறார்கள். அதை வெளியிட்டு, ஸ்ரீ ஆசாரியரைக் கொண்டாடி சொற்பொழிவாற்றும் வைபவம் 1-11-1942 அன்று ஏற்பாடாகியிருக்கிறது. வித்துவான்களும் மற்ற பிரபலஸ்தர்களும் இது விஷயமாக எடுத்துக்கொண்டுள்ள சிரத்தையும், காட்டியுள்ள அன்பும் பாராட்டத்தக்கது.

*　　*　　*　　*　　*

என்னுடைய பெரிய தகப்பனாராகிய ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியரின் ஷஷ்டியப்த பூர்த்தியைக் கண்டு களிக்கையில், எனது முன்னோர்களை—முதலில் குறிப்பிட்டுள்ள பெரியோரை—க்காணும் பாக்கியம் கிடைக்காதுபோயிற்றே என்று ஏக்கமுண்டாயிற்று...ஷை யாரின் 80-வது பிறந்த நாள் கொண்டாட்டத்தைக் காணும் பாக்யத்தை எங்களெல்லோருக்கும் பகவான் கொடுப்பாராக. சுபம்.

---




மோகினியின் அன்பர்களுக்கோர் ஆனந்தச் செய்தியை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். எம்பெருமானின் கிருபாகடாக்ஷத்தினாலும், உங்களுடைய பேராதரவினாலும் நமது மோகினிச் செல்விக்கு 19 ஆண்டுகள் இனிது நிறைவேறி ஆனந்தமான இருபதாவது ஆண்டு நாளது ஜனவரி மாதம் பிறக்கப்போகின்றது என்பதை சந்தோஷத்துடன் தெரிவிக்கின்றேன். நமது அன்பர்களில் பல பேர்கள் நெடு நாட்களாக நாம் ஏன் ஒரு தனி மலர் பிரசுரிக்கவில்லை. தீபாவளி, பொங்கல், அல்லது ஆண்டு மலர் முதலிய ஏதாவதொன்று பிரசுரித்து எங்களுக்கு விருந்தளிக்கக்கூடாதா! என்று கடிதமூலமாயும் நேரிலும் கேட்டிருக்கிறார்கள். எதற்கும் வேளை வரும்போதுதான் காரியம் சித்திக்குமல்லவா!

கீதாசாரியனுகிய ஸ்ரீ பார்த்தஸாரதியின் பேரருளேயும், உங்களுடைய மகத்தான ஆதாரவையும் முன்னிட்டு மோகினியின் 20-வது வருஷ ஆரம்பக் கொண்டாட்டமாகவும், நமது 60-வது வைர விழா நாவல் வெளிவரும் சந்தோஷத்தை முன்னிட்டும், ஒரு ஆண்டு மலர் வெளியிடத் தீர்மானித்திருக்கும் சந்தோஷச்செய்தியை உங்களுக்கு ஆனந்தமாகத் தெரிவிக்கிறேன்.

நமது அறுபதாவது நாவலாகிய 'கிருபாமந்திர்' என்கிற புத்தகம் முழுதும் மோகினியின் ஆண்டு மலரிலேயே பிரகாசித்து உங்களே மகிழ்விப்பதோடு, பல பிரபல எழுத்தாளர்களுடைய வெகு மேன்மையான கட்டுரைகளும் ஷை மலரில் ஜாஜ்வல்யமாய் ஜொலித்து உங்களேப் பரவசமூட்டும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு பல அரிய சித்திரங்களும் திகழ்ந்து விளங்கும். ஷை மலர் சம்மந்தமான விவரங்கள் மற்ருெருபக்கத்தில் காணலாம். சிறந்த பிரமுகர்களும், சகோதரிகளும் மோகினியின்பால் பேராதரவும், அன்புங்கொண்டு உயர்ந்த கட்டுரைகளே உதவியிருக்கிருர்கள். இதுவரை ஷை மலருக்கு விஷயதானம் செய்ய இசைந்துள்ளவர்கள், ஸ்ரீமான்கள் (1) பி. ஸ்ரீ. ஆசார்யா; (2) வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியார்: (3) ஜே. ஆர். ரங்கராஜு—காரு; (4) ராவ் பகதூர் ப. சம்பந்த முதலியார். பி. ஏ., பி. எல்; (5) ராவ் பகதூர் "கொனஷ்டை", பி. ஏ., பி. எல்; (6) ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ; (7) வி. கே. சௌரிராஜன், எம். ஏ., எல். டி; (8) வை. மு. ஸ்ரீநிவாஸன், எம்.ஏ., பி.எல்; (9) வி. வி. ராமானுஜன், பி. எஸ். ஸி; (10) பி. வி. திருவேங்கடஸ்வாமி; ஸ்ரீமதிகள் (11) சகோதரி ஆர். எஸ். சுப்பலக்ஷ்மியம்மாள், (12) பண்டிதை கிருஷ்ணவேணியம்மாள்; (13) "குமுதினி"; (14) "குகப்ரியை"; (15) எஸ். அம்புஜம்மாள்; (16) ஸ்ரீ ஜானம்மாள், (17) ஸாவித்ரி, இன்னும் பல பிரபல எழுத்தாளர்களும் ஷை மலரை சோபிக்கச் செய்வார்கள். அவர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலுடன்கூடிய வந்தனத்தைச் சமர்ப்பிக்கின்றேன்.

நாளுக்குநாள் பேப்பர் பஞ்சம் அதிகரித்து வருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாகும். நாம் தனி மலர் வெளியிடுவது இதுவே முதல்தடவையாகுமென்பதுவும் நண்பர்கள் அறிந்த விஷயமாகும். கால தேச வர்த்தமானத்தை உத்தேசித்து ஷை மலரின் விலையை ஒன்னரை ரூபாயாக வைத்திருக்கிருேம். நேயர்களுக்குத் தனிச் சலுகை காட்டும் திட்டம் வேறு பக்கத்தில் காணவும். குழந்தைக்குத் தாய்ப்பாலும், பயிருக்கு மழையும், இருளுக்கு வெளிச்சமும் எத்தனே அவச்யமோ, அத்தனே அவச்யம் உங்களுடைய பேராதரவும் அன்பும் மோகினிச் செல்விக்கு என்பதை நான் சொல்லவேண்டியதில்லை.

வை. மு. கோ.

'சௌபாக்கியவதி சந்திராவுக்கு ஆசீர்வாதம், உபயக்ஷேமங்கள்.

என் கடிதத்தைக் கண்டு நீ திடுக்கிடலாம். ஆம்... அது இயற்கையேயாகும். என் மனம் வரம்பு மீறிப் பொறுமையை வகித்தது. இனியும் அம்மாதிரி இருக்க அதற்குச் சக்தியில்லை. நீயும் உன் சகோதரியும் தேனும் பாலும்போல என்றால் மிகை யாகாது. அப்படியிருந்தவர்களின் தூய வாழ்க்கைக்கு இடை யில் ஏதோ பெரிய முள் வேலி போடப்பட்டிருப்பதுபோல் உங்கள் இருவருடைய நடத்தையும் தெரிவிக்கின்றது. அந்த முள்வேலிக்குக் காரணம் யாதோ! தெரியவில்லை. ஒருகால் அதற்குக் காரணம் நானாகவே இருப்பேனோ என்கிற பெரிய கவலை என் மனத்தில் பாறைபோல் அழுத்துகிறது.

சந்திரா! நான் இங்குவந்த சில தினத்திற்குள்ளேயே நீ முற்றிலும் மாறியதோடு, ஊரையும்விட்டுப் போனது என் இத யத்தைப் பிளக்கிறது. நீ அம்மாதிரி செய்வதற்கு நான் என் மனப்பூர்வமான குற்றம் எதுவுமே செய்யவில்லை. என்மீது நீ அனாவசியமான சந்தேகமோ, விபரீத எண்ணமோ கொண் டிருப்பாயானால், ஆண்டவன்மீது ஆணையாக நான் அப் படிப்பட்டவனில்லை என்று உனக்குச் சத்தியம் செய்கிறேன். நிஷ்களங்கமான இதயத்துடன் உன்னிடம் நான் நடந்து கொண்டேன். இப்போதும் அதே உணர்ச்சியுடன்தான் எழுதுகிறேன். நீ அம்மாதிரி நினைத்திருப்பாயானால் அந்த தப்பெண்ணத்தை மாற்றுவதற்காகவே நான் இதை எழுதி என் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறேன்.

சந்திரா! உனது மன மாறுதலுக்குக் காரணம் கட்டாயம் தெரிவிக்கவேண்டும். அப்படித் தெரிவிக்காவிட்டால் எங்கள் வாழ்க்கையிலேயே ஒரு கசப்பும் கலவரமும் தோன்றிவிடும் என்பது உண்மை. உன் சகோதரியை எத்தனை கேட்டும் அவள் சரியான ஜவாப்பு கொடுக்காதது விசனமாயும் சந்தேக மாயுமிருக்கிறது. உன் பதிலை என் ஆபீஸ் விலாஸத்திற்கு அனுப்பு. அச்ரத்தையாயிருக்காதே. என்மீது சந்தேகமும் கொள்ளாதே. இக்கடிதத்தைக் குற்றமாக நினைக்காதே. என் மனது தாளாது இதை எழுதுகிறேன். கனவில்கூட உனக்குத்துரோகம் நினைக்க மாட்டேன் என்பதைச்சத்தியம் வேண்டுமாயினும்செய்கிறேன்.

உன் அன்பன்,

சேகர்.'

என்றதைப் படித்ததும், சந்திரா கதிகலங்கிவிட்டாள். "பழி யோரிடம், பாவமோரிடம் என்பது சரியாகிவிட்டதே. நான் அக் காவின் ரகஸியத்தை வெளியிட்டால் அக்காவுக்கு த்ரோகம் நினைத்த வளாவேன். நிரபராதியான மனிதனின் மனத்தில் உண்டாகி யிருக்கும் புண்ணை ஆற்றாது வாளாவிருந்தால் அதனால் அவர்களின் வாழ்க்கையில் என்ன பயங்கரம் நிகழுமோ என்ன செய்வேன்!

இத்தகைய சோதனையும் வரவேண்டுமா!" என்று வெகு நேரம் புலம்பித் தவித்தாள். இத்தகைய பரிசுத்தாத்மாவைப் பார்த்தா அக்கா அவர்மீதே பழிசுமத்தித் தன்னுடைய களங்கத்தை மறைத்துப் பேசினாள்! என்ன அக்ரமம்...கலியுகத்தின் கோலமா! கணவனை தெய்வமாகப் பூஜிக்கவேண்டியவள் அவர்மீதா அபாண்டத்தைக் கூறினாள்" என்று அங்கலாய்த்தாள்.

ஒரு முடிவுக்கும் வரமுடியாது குழம்பினாள். "நான் அவருக்குக் கடிதமெழுதியது தெரிந்தால் அக்காவின் சந்தேகம் ஊர்ஜிதமாகி வீணான அபவாதம் முற்றிவிடும். எந்த பக்கம் சென்றாலும் என் கதி அதோகதியாக இருக்கிறதே. சகலத்தையும் தாயாரிடம் சொல்லி விடலாம் என்று துணிந்தாலும் என்னவிருப்பினும் பெத்த பாசம் அந்தம்மாளை பாதிக்காமல் விடாது. அதனால் அவர்களுடைய மனதிற்குச் சங்கடம் உண்டானாலும் ஆகும். ஒருவிதமும் அனுகூலமில்லாது நான் என்ன செய்வது?

பக்கத்துவீட்டில் தற்செயலாகக் கடவுள் கொண்டுவிட்ட என் அன்பரைப் பார்க்கவும் அன்னியரிடம் இருக்கும் பந்தம்இடங் கொடுக்கவில்லை. ஆபத்தில் உதவாத மகாபாவி நான் அவரைப் பார்த்தாலும் என்னை வெறுக்கவும் கூடும். எந்தவிதந்தான் நான் சமாதானமடைவேன்?....ஈச்வரோ ரக்ஷது. ஆனது ஆகட்டும்' என்று மனத்தை உறுதி செய்துகொண்டு கடிதமெழுதவாரம்பித்தாள்.

"அத்திம்பேருக்கு நமஸ்காரம். உபயக்ஷேமங்கள்.

உங்கள் கடிதம் கிடைத்தது. நம்மைப் படைத்த ஆண்டவன்மீது ஆணையாக நான் ஒருவிதமான வித்யாஸமும் நினைக்கவில்லை. எல்லாம் ஈசனின் சோதனை என்று கூறுவதைத் தவிர வேறில்லை. வீண் கவலை வேண்டாம். தங்களிடம் எனக்குள்ள பக்தி விச்வாசம் என்றும் ஒரே நிலையாகவே இருக்கிறது. ஒரு அணுவளவும் வித்யாசமில்லை. நிஷ்களங்கமான இதயத்துடனேயே எழுதுகிறேன்.

இங்ஙனம்,
சந்திரா."

இதை கவரில் போட்டு முதலில் தபாலில் போடும்படி நாகுவை அனுப்பினாள். பிறகு கல்யாணியம்மாளிடம் தன் தாயின் கடிதத்தைக் காட்டி 'நான் நாளையே பிரயாணமாகிறேன்; யார் கொண்டு விடுகிறார்கள் ?' என்றாள்.

சந்திரா ஊருக்குப் போய்விடுகிறாளே என்கிற கவலையே தாயிக்கும் மகனுக்கும் உண்டாகியது.'தானாக ப்ரியப்பட்டு வந்தாள். தானாகப் போகவேண்டும் என்கிறபோது அனுப்பவேண்டியது தானே நியாயம்' என்று சம்மதித்தார்கள்.

ஊருக்குப் போகும் சாக்கை வைத்துக்கொண்டு ராஜாயியிடம் சொல்லிக்கொள்வதுபோல் போய் அவளுடைய ஆத்மநாதனை

மற்றொருமுறை கண்டு களிக்கவேண்டுமென்று உள்ளூற விரும்பினுள். சந்திராவுக்கு நல்ல சேலை, ரவிக்கை சன்மானங்கொடுத்து அனுப்புவதற்காக கல்யாணியம்மாள் ஜவுளிக்கடைக்கு சந்திராவைக் கூப்பிட்டாள். சந்திரா தனக்குத் தலைவலி என்று கூறி அவளை மட்டும் அனுப்பினுள். தனது தனிமை அச்சமயம் சிறிது ஆனந்தமாகவே தோன்றியது.

## 26

இச் சந்தர்ப்பத்தில் போனுல்தான் உண்டு என்று தைரியம் செய்துகொண்டாள். ராஜாயி வீட்டிற்கு வெகு தைரியமாகச் சென்ருள். ராஜாயிக்கு சந்திராவின் வரவால் மிகுந்த சந்தோஷம் உண்டாகியது. "வா! வா! இப்போதுதான் நானும் அம்மாவும் உன்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நீயே வந்தாய்.

சந்:—என்னைப்பற்றியா பேசினீர்கள்? என்ன சமாச்சாரம்? வைரமாலையைப்பற்றி வந்ததா!

ராஜா:—இல்லை; இல்லை. உன் பெயரைப்பற்றி வந்தது. நேற்று அடிபட்டு படுத்திருந்த நோயாளி தன்போக்காக, "சந்திரா!... உன்னை ஒருமுறை பார்த்துவிட்டால் என்னுவல் தீரும். அதற்கும் பாக்யமில்லையா?" என்று வாய்ப்பிதற்றினுர்—என்ருள்.

இதைக்கேட்டு சந்திராவின் தேகமே சிலிர்த்தது. முகத்தில் எங்கே மாறுதல் தெரியப்போகிறதோ என்று பயமும் தோன்றியது. "உம்....அப்புறம்" என்று சற்று அலக்ஷியமாகவே கேட்டாள்.

ராஜா:—அப்புறம் ஒன்றுமில்லை. இரவு நன்ருக ஞாபகம் வந்த பிறகு எங்கப்பாவும் அண்ணுவும் நடந்த வரலாற்றைக் கூறிப் பின் "யாரப்பா அது! சந்திரா!...சந்திரா என்று பிதற்றினுயே" என்று கேட்டதும் அவர் திடுக்கிட்டார். முகமே மாறியது. கண்களில் நீர் முட்டியது. சற்று சமாளித்துக் கொண்டு, "உம். வாய்பிதற்றினேனு! சந்திரா என்பது என் சகோதரியின் பெயர். அவளை அவள் கணவன் மிகவும் கொடுமைப்படுத்தி எங்கள் கண்களில் காட்டாது இம்சிக்கிருன். அவர்கள் கொலாலம்பூரில் இருப்பதால் பார்த்தே பல வருஷங்களாயின. அதைச் சொல்லியிருப்பேன்... அடாடா! உங்களுக்கெல்லாம் மிகவும் சிரமத்தைக் கொடுத்து விட்டேனே!" என்று விசனித்தார்.

இந்த வார்த்தைகள் முற்றும் வெறுங் கட்டுக்கதை என்பதை சந்திராவின் உள்ளம் நன்கறியும். ஸ்ரீதரனுக்கு உடன்பிறந்தவர்களே கிடையாதென்பதுமட்டும் நன்ருகத் தெரியும். இவர்களுக்கு சமாதானம் சொல்லும் பொருட்டு தன் ரகஸியத்தை மறைத்து இப்படிக் கூறியிருக்கிருர் என்று தெரிந்ததும் ஏற்கெனவே உள்ள

வேதனையைத் தூண்டிவிட்டதுபோலாயிற்று. தன்னை அவர் மறக்க வில்லையென்பதை அறிந்து உள்ளம் பூரித்தாள்.

"யார் எப்படி வேண்டுமாயினும் நினைக்கட்டும். கட்டாயம் அவரைப் பார்த்துவிட்டே போவது" என்று உறுதிகட்டிக்கொண்டு "வாயேன் மாடிக்கு; உன் ரூமுக்குப் போகலாம்" என்றாள்.

உள் மர்மமறியாத ராஜாயி கூடவே சென்றாள். முதல் நாள் பார்த்த இடத்திலேயே கண்கள் தாவின. அவளது இதயம் உத்திரவுச் சீட்டின்றியே அந்தக் கட்டிலைத் தாவி ஓடியது. ராஜாயியுடன் பேசிக்கொண்டே சென்று அந்தப் பக்கம் பார்த்தாள். என்னே ஏமாற்றம்! என்னே சோதனை! கட்டிலில் கர்லியாகக் கிடந்ததால், பூமியிலிருந்து ஒரு துள்ளு தூக்கிப்போட்டது.

'அவர் எங்கே?"என்று எப்படிக் கேட்பதென்று சில விநாடிகள் தியங்கினாள். பிறகு தானே வார்த்தையைத் துடங்கி, "ஐயோ! பாவம்.உடன்பிறந்த சகோதரியைப்பிரிந்தால்அப்படித்தானிருக்கும். இப்போது என் சகோதரிகூட வெகு தூரதேசம் போய்விட்டாள். எனக்கு எத்தனை ஏக்கமாகவிருக்கிறது தெரியுமா!" என்றாள்.

ராஜா:—அவர் சந்திரா என்ற பெயரைக் கூறும்போதே எத்தனை ஆழமான அன்பு ஜ்வலிக்கிறது தெரியுமா! கண்ணீர் சொட்டியது. அவருடைய நிலைமையே பரிதாபமாகவிருந்தது. அவருக்கு நினைவு வந்ததுதான் தாமதம் ஒரு நிமிடங்கூட இருக்கமாட்டேன் என்று போய்விட்டாரே! என் தகப்பனார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். என் தமயன் அவர் கைகளைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினார். 'ஊஹூம்' என்று மறுத்துவிட்டார். எங்களால் அவருக்கு ஏற்பட்ட இந்த விபத்துக்கு நாங்கள் வருந்தி வைத்தியத்திற்கும் வழிச் செலவிற்கும் இருக்கட்டுமென்று எங்கப்பா 50 ரூபாய் கொடுத்தார். அதை அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. நாங்கள் செய்த உதவிக்கு வந்தனம் செய்துவிட்டுப் போய்விட்டார். எங்கு போனாரோ! என்னவோ! அதுவும் தெரியாது. மகா யோக்யர். நல்லவர்.—என்றெல்லாம் ஸ்ரீதரனை ராஜாயி தோத்திரம் செய்து கொண்டே போனாள். சந்திராவின் இதயம் படீரென்று வெடித்து விடும்போலாகியது. "வெகு ஆவலாகப் பார்க்க வந்தும் நமது துர்ப் பாக்கியம் கிட்டாதுபோய்விட்டதே. இனி எங்கு காண்பேன். எப்படி அவர் தரிசனம் கிடைக்கும்" என்று ஏங்கித் தவிக்கும் நிலைமையில் அங்கு நிற்கவே முடியாதுபோயிற்று.

நேற்று இன்னும் சிறிது நேரம் அந்த ஸௌந்தரிய வதனத்தைப் பார்க்கவிடாது சித்தி கூப்பிட்டது மிகவும் வெறுப்பாகவிருந்தது; இன்று யாராவது கூப்பிடக்கூடாதா! உடனே ஓடிவிடலாமே என்று நினைத்தாள். கண்ணில் பெருகும் நீரைத் தடுக்கமாட்டாது அதை வேறு விதமாக மாற்றி, "ராஜாயி!...நாளைக்கு நான் ஊருக்குப் போகிறேன். அதைச் சொல்லிக்கொள்வதற்காகவே வந்தேன். உன் சங்கீதத்தை இனி எப்போது கேட்பேனோ என்று நினைக்கும்

போது துக்கமாகவிருக்கிறது. ஏதோ சில காலத்துப் பழக்கத்தில் சங்கீதாம்ருதத்தைப் பருகினேன். மறக்காதே. போய்வருகிறேன்" என்றுகூறி தனது கண்ணீரையும்துக்கத்தையும் தீர வெளிப்படுத்திச் சற்று ஆறுதலடைந்தாள்.

உண்மையில் தன் பிரிவுக்கு அழுவதாக எண்ணிய ராஜாயிக்கும் உயர்ந்த குலத்துப் பெண்மணியின் சினேகம் நின்றுபோகிறதே என்று துக்கமே வந்தது. அவளும் கண்ணீர் விட்டபடியே, 'சந்திரா! நீங்களும் மறக்காதீர்கள். நான் உங்கள் ஊருக்கு வந்தால் கட்டாயம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். உங்கள் கல்யாணம் வெகு விரைவிலேயே நடக்குமென்று பெரியம்மா சொன்னார்கள். நான் கச்சேரி ஜமாய்த்துவிடுகிறேன்' என்றுகூறித்தாம்பூலங்கொடுத்தாள்.

சந்திரா உடைந்த இதயத்துடன் சுவையற்ற கட்டையாய் அவன் படுத்திருந்த கட்டிலருகில் வந்து நின்றாள். அந்த கட்டிலைப் பார்ப்பதும் தொடுவதுங்கூட அவளுக்குஆனந்தமாகத்தோன்றியது. ஸ்ரீதரன் அதில் படுத்திருந்த காக்ஷி உருவெளித்தோற்றம்போல் தோன்றியது கண்டு உள்ளம் பூரித்தாள். ராஜாயி இல்லாத சமயத்தில் கட்டிலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். ஸ்ரீதரனின் கைக்குட்டையொன்று அக் கட்டிலடியில் விழுந்து கிடந்ததை சந்திரா பார்த்து வியப்புற்றாள். ஏனெனில் ஒரு சமயம் தீபாவளிப் பரிசாக இதே கைக்குட்டையை தானே பூ வேலைகள் செய்து போட்டுக்கொடுத்திருப்பதால் உடனே அடையாளம் தெரிந்து அதை எடுத்து மறைத்துக்கொண்டாள்.

பித்து பிடித்தவள்போல் நின்றாள். பிறகு "நான் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு நேரே வீட்டிற்கு வந்தாள். "இந்த கைக்குட்டையாவது எனக்குக் கிடைத்ததே! இந்த ஒரு கடுகளவு பாக்யமாவது கிடைத்ததே" என்று சந்தோஷமடைந்து அதைக் கண்ணில் ஒற்றிக்கொண்டு முகத்தில் மூடினாள்.

கண்ணீரைத் துடைப்பதற்காக இது கிடைத்ததாக எண்ணிப் பெருமூச்சுவிடும் சமயம் கல்யாணியம்மாள் ஒரு அடுக்கு சேலைகளுடன் வந்து, "சந்திரா! இதோ இச் சேலைகளில் உனக்கு மிகவும் பிடித்தமானதை எடுத்துக்கொள்ளு" என்றாள்.

சந்திரா கைக்குட்டையை மடியில் மறைத்துக்கொண்டு, 'சித்தியம்மா! நீங்கள் எதைப் பொறுக்கினாலும் எனக்குச் சம்மதந்தான். எனக்கு ஒன்றுமே தெரியாது. எனக்கு அக்காவும் அம்மாவுந்தான் சேலை பொறுக்கி வாங்குவார்கள்" என்றாள்.

கல்:—இந்த ரோஜா வர்ண சேலை உனக்கு மிகவும் நன்றாயிருக்குமென்று தோன்றுகிறது. உனக்குப்பிடிக்கிறதா?—என்றாள். ஏதோ ஒன்று எடுத்து தன்னைத் தொந்தரவு செய்யாதிருந்தால் போதும் என்று எண்ணித் தலையை ஆட்டினாள்.

அதோடு கல்யாணியம்மாள் போய்விட்டாள். மறுநாளே சந்திரா பிரயாணத்திற்குச் சித்தமானாள். கல்யாணியம்மாளே சந்

18073

திராவைக் கொண்டுவிடக் கிளம்பினுள். கேவலம் மெலிந்துபோய் உருவமே மாறிவந்த சந்திராவைக் கண்டு நாஸிம்மன் அலறினர். “ஊரைவிட்டு ஊர் போனதில் பின்னும் கேவலமாகவன்றோ ஆய்விட்டாள். நிச்சயமாக வீட்டிலுள்ள கோளாறுதான் இப்படிச் செய்கிறது” என்று உறுதியாக எண்ணினர்.

அமிருதவல்லியம்மாளும் சந்திராவின் மெலிவைக்கண்டு கலங்கினுள். ஏற்கெனவே அவளுக்கிருந்த சந்தேகம் பின்னும் பலமாக எழுந்தது. கல்யாணியம்மாள் எப்படியாவது சீக்கிரத்தில் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யும்படி தன் சகோதரியிடம் சொல்லி விட்டு ஊருக்குச் சென்றுள்.

அமிருதவல்லி, “சந்திராவின் உடம்பை எப்படித் தேற்றுவது? எக்காரணம் பற்றியோ இப்படி மெலிந்து கேவலமாகிவிட்டாளே!” என்று ஏங்கினுள். “நாம் ஏதாவதொரு சாக்கை வைத்துக்கொண்டு வேறு வீட்டிற்குப்போகலாமா! எனக்கு உள்ளூற ஏற்பட்ட பயம் நீங்கவே இல்லை. எப்போதும் ஒரு கிலி என்னை வாட்டிக்கொண்டே இருக்கிறது. என் உத்யோகத்தை வேறு ஊருக்கு மாற்றிக் கொள்ளலாமா என்று எழுதியிருக்கிறேன். என்ன செய்வது சொல்லு?” என்றார் நரஸிம்மன்.

அமி:—நான் சொன்னுல் என்மீது கோபம் வருகிறது. என் வார்த்தையை நம்புவதமில்லை. நீங்கள் சாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் பாதங்களை நம்பி மற்ற இதர க்ஷுத்திர தேவதைகளை நினைக்காமலேயே இருந்தால் பயம் எப்படி உண்டாகும்! “சர்வதர்மான்பரித்யஜ்ய...என்கிற ச்லோகத்தையும், ஆஞ்சநேயம் மதிபாடலாஞ்சனம்! என்கிற ஹனுமான் தோத்திரத்தையும் இடைவிடாது சொல்லுங்கள். பயம் என்பது மனத்தில் தோன்றுகிறதாபாருங்கள். பயத்திற்கும் கலவரத்திற்கும் நாம் இடங்கொடுத்தால்தானே அது நம்மிடம் அண்டி ஆளேயே வதைக்கிறது. பகவான் திருவடிகளை தஞ்சம் என்று நம்பினுல் பயம் நம்மை என்ன செய்யும்? நானும் இதே வீட்டில்தானே இருக்கிறேன். ஒரு பயமும் எனக்குத் தோன்றவில்லையே! வீணுக நாமே பயம்! பயம்! என்று பறைசாற்றினுல் பிறர் கண்டு பரிகஸிப்பார்கள். அல்லது வீண் மூட்டைகளைக் கட்டி கயிறு திரிப்பார்கள். சந்திராவின் காதில் விழப்போகிறது. தைரியமாகவிருங்கள். இதே பங்களாவில் பகவானின் சன்னிதியும், சிலையும் அகப்பட்டதே பெரிய பாக்யமல்லவா! அதைவிட வேறு என்ன வேண்டும்?” என்று பலமான உபதேசம் செய்தாள்.

அதே சமயம், தோட்டத்தில் சிறிய கட்டிடங் கட்டுவதற்காக இடித்துப் பள்ளந் தோண்டி வேலை செய்யும் ஆட்கள், “குய்யோ! முறையோ!” என்று கத்தியவாறு ஓடிவந்து, “சாமீ! சாமீ!...எஜமான்!...பள்ளம் வெட்டும் இடத்தில் ஒரு பிணம் எலும்பும் கூடும் விகாரமாகக் காணப்படுகிறது. எங்கள் கை கால்கள் நடுங்கு

கின்றன. வாருங்கள்...இப்படி வந்து பாருங்கள்'' என்று கூக்குர லிட்டார்கள்.

ஏற்கெனவே பயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்த நரஸிம்ம னுக்கு சப்த நாடிகளும் அப்படியேநின்றுவிட்டதுபோலாகி 'என்ன! பிணமா! நம் தோட்டத்திலா...!' என்று உளறினர். அவர் சரீரம் பூரா வும் நடுக்கலுடன் வெயர்வை குபீரென்று பொங்கி வழிந்தது.

## 27

ஆனந்தத்தை வளர்ப்பதற்கும் ஒரு அடையாளக் கருவியோ, நினைவோ, சம்பவமோ இருந்தால்தானே விருத்தியாக முடியும்? சந்திராவின் ஆனந்தத்திற்கு ஸ்ரீதரனின் கை குட்டை பெரிய ஸாதனமாகவிருந்தது. "தூரவிருந்தாகிலும் தரிசனம் செய்வ தற்குப் பாக்யம் கிடைத்ததே என்று பாழும் மனம்திருப்தியடைய வில்லையே! அவரைப் பார்க்கவும் அவருடன் பேசி அவர் துன்பத்தை யறிந்து உதவி செய்யவும் நெஞ்சு பறக்கிறதே! என்ன செய்வேன்?'' என்று மனது பறக்கிறது.

அச் சமயம் அமிருதவல்லியம்மாள் சந்திராவிடம் வந்துஅவளை அணைத்தபடியே "கண்மணீ! நான் ஒரு வார்த்தை கேட்கப் போகிறேன். என்னை நீ உனது பெற்ற தாயாரைப்போல் மதித்து பிரேமை வைத்திருப்பது உண்மையாயின் அதற்குச் சரியான பதில் சொல்லவேண்டும். என்னுடைய மனத்தில் வெகு நாட்களாக இதைக் கேட்கவேண்டுமென்கிற ஆவல் பூர்ணமாகத் துடித்தது. இன்றுதான் அதற்குச் சமயம் வந்தது. என்னை நீ உன் இதய பூர்வமாக அனுசூயா தேவியைப் போலவே நேசிப்பது உண்மை தானே!'' என்று விடுகதையைப்போல் கேட்டாள்.

இதைக்கேட்ட சந்திராவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. "என்ன விஷயம் கேட்கப் போகிருளோ! ஒரு வேளை சகோதரியின் விஷயமாகவிருக்குமோ! அன்றி ஸாரநாதனை மணக்கவேண்டுமென்று கேட்கப் போகிருர்களோ! அல்லது வேறு இடத்தில் என் கல்யா ணத்தைப்பற்றி பிரஸ்தாபிக்க உத்தேசமோ! எதற்கென்று நான் பதில் சொல்லுவேன்?'' என்று குழம்பிவிட்டது.

"இம்மூன்றில் எதைக் கேட்டாலும் என் மனது சம்மதிக் காதே! நான் என் மனச் சாட்சிக்கு விரோதமான பதிலைத்தானே சொல்லவேண்டும். பெற்றதாயைவிடப் பதினயிரம் மடங்கு அதி கரித்த தாயிடம் நான் உண்மையை மறைத்துப் பொய் சொல்வதால் மகத்தான பாபமும் தோஷமும் என்னைச் சூழ்ந்து வதைக்குமே! என்ன செய்வது?''என்று சில விநாடிகள் தியங்கினள். உள்ளுக்குள்

அடித்தாள். எது எப்படியிருப்பினும் தன் வயிற்றில்பிறந்த மகளைவிட அதிக அன்புடன் தன்னை வளர்ப்பதோடு தன் சொத்துக்களையும் பிடிகூட மோசம் செய்யாது காத்து ரக்ஷிக்கும் தாயிடம் எத்தகைய விதத்திலும் கடமைப்பட்டிருக்கிறோம். அவள் மனது நோகச் செய்தால் சாக்ஷாத் பகவானின் மனதே நோவதற்குச் சமமாகும். ஆகையால் கேட்பதற்குப் பதிலைச் சொல்லியே திருப்தி செய்வோம் என்று தைரியம் செய்துகொண்டாள்.

அமிருதவல்லியம்மாளின் காலைப் பிடித்துக்கொண்டு வணங்கி, "அம்மா! இந்த உலகத்தில் என்னைப் படைத்த கடவுளைக் காட்டிலும் உன்னைதான் நான் அதிகம் நேசிக்கின்றேன். பக்தி செய்கின்றேன். மகா பரிசுத்தாத்மாவாகிய உன்னை தரிசிப்பதேஎனக்குக் கடவுளின் தரிசனம் செய்வதுபோன்ற பேரின்ப உணர்ச்சி உண்டாகிறது. ஆகையால் நீங்கள் எதைக் கேட்டாலும் நான் பதிலைச் சொல்கிறேன்" என்று அழுத்தமாகக் கூறினாள்.

அமிருதவல்லியம்மாள் சந்திராவை மார்போடு அணைத்தவாறு, "கண்ணா! நீயும் இந்திராவும் ரெட்டைக் குழந்தைகளைப்போல் வளர்ந்தீர்கள். இருவரும் உயிர் ஒன்றாய்உடல் இரண்டாயிருந்தீர்கள். திடீரென்று நீங்கள் இப்படிப் பிரிந்திருப்பதற்குக் காரணம் நானும் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். என் மனத்தில் ஒரே ஒரு சந்தேகந்தான் உதிக்கின்றது. அதாவது உன் அத்திம்பேரிடந்தான் ஏதாவது குற்றமிருக்குமோ? அவர் உன்னை ஏதாவது வித்யாச எண்ணத்துடன் பார்த்து, பேசி...

என்று முடிப்பதற்குள் சந்திரா அலறினாள். "அம்மா!...நிறுத்துங்கள். நெருப்பின்மீது ஈ மொய்த்தது என்று சொல்வது எத்தனை பொருந்துமோ, அத்தனை பொருத்தமான சந்தேகந்தான் உங்கள் சந்தேகம். அத்தகைய விஷயம் எதுவுமே இல்லை. என் சகோதரியை நான் அன்றும், இன்றும், என்றும் ஒரே மாதிரியாகத்தான் நேசிக்கிறேன். அவள் எனது உயிர்நாடி என்பதை நான் என்றும் மறக்கவே இல்லை. அத்திம்பேர் மகா பரிசுத்த உள்ளத்தை உடையவர் என்று நான் பகவான் முன்னிலையில் சத்தியங்கூட செய்யத் தயாராயிருக்கிறேன்...பின்பு, 'ஏன் நீ இப்படியிருக்கிறாய்' என்று கேட்கலாம்.

அம்மா! நீங்கள் கோபிக்காமலிருந்தால் சொல்கிறேன். நான் அத்திம்பேருடன் பேசுவதையும் சகஜமாக விருப்பதையும் நீங்கள் இருவரும் வெறுத்ததாயும் கோபிப்பதாயும் ஒரு தினம் கனவு கண்டேன். ஒரு வேளை அது உண்மையாகவிருக்குமோ என்று நானே தீர்மானித்துக்கொண்டு பேசுவதை நிறுத்திவிட்டேன். என் தாயும் சொப்பனத்தில் சொல்லிய வார்த்தைகளை அன்றே உங்களிடம் சொல்லவில்லையா?....

அமிருதவல்லியம்மாள் சந்திராவைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டவாறு, "என் செல்வாத்

தினமே!....சந்திரா !...ஒரு விநாடிக்குமுன்பு வரையில் நிரபராதியின் மீது நான் அபாண்ட பழியை நினைத்திருந்தேன். உன் அத்திம்பேரை அடியோடு வெறுக்கவும் நான் துணிந்தேன். இப்போதுதான் எனக்குச் சமாதானமாயிற்று. ஆண்டவன்மீது ஆணையாக நான் ஒரு குற்றமும் உன்னிடம் நினைக்கமாட்டேன். நீ செந்தணல் போன்றவள் என்பது எனக்குத் தெரியும். இனிமேல் இம்மாதிரி அசட்டு சொப்பனங்களை நீ நம்பாதே. இதே ஏக்கமும் வீட்டைப் பற்றிய கோளாறுந்தான் அப்பாவின் உடம்பு கேவலமாகிக் கொண்டே வருகிறது.

சந்திரா ! கடவுளின் பாதத்தை நம்புவதைத் தவிர வேறு எந்த இதர விஷயங்களையும் நம்பாத என் உள்ளங்கூட இன்று காலையில் கண்ட காக்ஷியால் வேறுபட்டுத் தவிக்கின்றது. உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று பார்த்தேன். இவைகளை மறைப்பதில் லாப மென்னவென்று சொல்லுகிறேன். நம்ம தோட்டத்தில் ஒரு பிணம் புதைத்திருக்கவேண்டும். அதன் எலும்புங்கூடும் பாதிமக்கியும் பாதி உளுத்தும் கிடைத்தது. இதைப் பார்த்ததும் க்ருகக்கோளாறின் வதந்தியை நம்பத்தானே வேண்டியிருக்கிறது.

சந்தி:—(அலறியபடியே) என்ன ! நம்ம தோட்டத்திலாம்மா எலும்புக் கூடு இருந்தது? ஐயோ! இது வெளியில் தெரிந்தால் விபரீத மாகிவிடுமே ! அப்பா அதைப் பார்த்துவிட்டாரா !

அமி:—வேலைக்காரர்கள் நேரில் அப்பாவிடமே தெரிவித்தார்கள். அப்பாவுக்கு மயக்கமே போட்டுவிட்டது. நான் உடனே ஓடிப்போய் வேலைக்காரர்களுக்கு ஏதோ கொஞ்சம் பணத்தைக் கொடுத்து 'இந்த விஷயத்தை வெளியில் சொல்லாதீர்கள். சொன்னால் இந்த சூனியம் உங்கள் குடும்பத்தையே ஹதம் செய்துவிடும். இதோடு விட்டுவிடுங்கள்' என்று நயத்திலும் பயத்திலும் கூறி சமாதானம் செய்ததோடு அந்த இடத்தில் அரசங்கன்றை வைத்துப் பிள்ளையாரையும் வைத்துவிடலாம் என்று தீர்மானித்து பின்னும் பள்ளம் தோண்டியதில் ஒரு புதையல் கிடைத்தது.

சந்தி:—புதையலா!...உண்மையாகவாம்மா!...என்ன இருந்தது? நீங்கள் அதை என்ன செய்தீர்கள்?

அமி:—ஒரு பித்தளைத் தவலையில் இருக்கிறது. அதைத் தொடவும் வேலையாட்கள் பயந்தார்கள். இதுவும் வெளியில் தெரிந்தால் சர்க்கார் பறிமுதல் செய்துவிடுவார்கள். அதோடு இதென்ன சொத்தோ! என்ன சூன்யமோ! மந்திரமோ! எனக்கே பயமாயிருக்கிறது. நல்ல வேளையாக இதை அப்பாவிடங்கூடச் சொல்லாமல் நமது கோயிலில் பகவானின் காலடியிலேயே அந்த தவலையை வைத்துத் திறந்து பார்த்தேன்.

"என்ன ஆச்சரியம்போ...சொல்லிமுடியாது...சவரன்களும், நகைகளும் குழந்தையின் நகைகளும்...ரூபாய்களும் இருக்கின்றன. குழந்தையின் நகைகளில் ஸ்ரீதரன்...ஸ்ரீதரன்...என்று பெயர் வேறு

எழுதியிருக்கிறது. எனக்கொன்றுமே தெரியவில்லே. என் மனதும் குழம்பித் தவிக்கிறது... இந்த இடம் பூகம்பத்தில் புதைந்த இடமோ! சுடுகாடாக இருந்த இடமோ! கொள்ளேக் கூட்டத்தார்கள் வசித்த இடமோ! என்றெல்லாம் சந்தேகம் உண்டாகிறது.

இது எந்த குடும்பத்தினர் வயிறெரிந்த சொத்தோ தெரியவில்லே. பெரிய நகைகளில், 'சுந்தரி' என்று பெயர் எழுதியிருக்கிறது. உங்கப்பாவுக்குத் தெரிந்தால் கட்டாயம் சர்க்காரிடம் தானகவே கொடுத்துவிடுவார். இதை பகவான் தானகக் கொடுத்திருப்பதால் உனது துணையைக்கொண்டு ஏதாவதொரு நல்ல தர்மத்தைச் செய்யலாம். ஏழைகளுக்குக் கொடுத்துவிடலாம் என்று தோன்றியதால் தான் நான் இப்போது உன்னிடம் சொன்னேன்...

சந்திராவுக்கு அமிருதவல்லியம்மாள் மேலேசொல்லிக்கொண்டு போவதெல்லாம் காதில் படவேயில்லே. "நான் என் காதலனின் வீட்டை வாங்கிக்கொண்டு அவன் மனமெரியச் செய்த பாதகம் போதாதென்று அவனுக்குக் கிடைக்கவிருந்த அதிருஷ்டத்தையும் அவனுக்குச் சேரவிடாது நானே அபகரித்துக் கொண்டேனே... என்ற எண்ணமே தோன்றி அவளே வதைக்கிறது. அதோடு ஸ்ரீதரன் என்று பெயரிருக்கும் நகைகள் கட்டாயம் தன்னுயிர் நேசனின் நகைகளாகத்தான் இருக்கவேண்டும். அதை யார் திருடி எப்படிப் புதைத்து அமுக்கிவிடப் பார்த்தார்களோ தெரியவில்லேயே! என்ன ஆச்சரியம். அவர் இத்தனே சொத்திற்கும் அதிகாரியாயிருந்தா இப்படிக் கஷ்டப்படும்படி பகவான் சோதிக்கிறுர்.

ஐயோ! அவரை அபாரமான துன்பத்தில் ஆழ்த்திவிட்டு நாம் இத்தகைய போகத்திலிருப்பதா நியாயம்!...அவருடைய தாயார் பேர் சுந்தரி என்றுதான் சொல்லியிருப்பது நினேவிருக்கிறதே!... அந்தம்மாளின் நகைகளோ!" என்று பலவிதமான எண்ணங்களில் சிதறுண்டு தவிக்கிறுள். மனது கட்டுமீறிய வேகத்தில் ஸ்ரீதரனேத் தேடிக்கொண்டு ஓடுகிறது.

---

## 28

"அம்மா! உங்களுக்குத் தபால் வந்திருக்கிறது" என்று குமாஸ்தா ஒரு கடிதத்தை அமிருதவல்லியம்மாளிடம் கொடுத்தான். அவள் அதை வெகு உத்ஸாகத்துடன் வாங்கிப் படிக்கலானுள்.

"அம்மாவுக்கு அனேக வந்தனங்கள். க்ஷேமம்; க்ஷேமத்திற்கு எழுதவும். எனக்கு உடம்பு சரியில்லே யென்று நான் போனவாரம் எழுதிய கடிதத்தை நீ படித்து கவலே கொண்டு எழுதிய கடிதம் கிடைத்தது. ஆனல் அந்த கவலேக்கு மாற்ருக

அபாரமான சந்தோஷத்தைக் தரக்கூடிய கடிதம் இதோ எழுதுகிறேன். எனக்கு எத்தகைய வியாதியும் இல்லை. உன்னைக் கூடிய சீக்கிரத்திலேயே பாட்டியாக்குவதற்காக ஏற்பட்டுள்ள உடல் நிலைமை இது. இதற்கு மருந்து வேண்டாம் என்று டாக்டர்கள் கூறினர்கள். எனக்கு மூன்று மாதமாகிறது. என் மாமியார் என்னிடமே வந்திருக்கிறார். நான் சந்தோஷமாயிருக்கிறேன். அப்பா உடம்பையும் சந்திரா உடம்பையும் பார்த்துக்கொள்ளு. அடிக்கடி கடிதமெழுது.

உன் பிரிய
இந்திரா"

இதைப் படித்ததும் அமிருதவல்லியம்மாளின் சந்தோஷம் உச்சத்தை எட்டியது. ஆனந்தப்பூரிப்புடன் சந்திராவிடம் ஓடிவந்தாள். கடிதத்தைக் காட்டி "கண்ணு! பார்த்தாயா, உன் அக்காவுக்கு குழந்தை பிறக்கப்போகிறது. நீ சித்தி பட்டம் வகிக்கப்போகிறாய். உடம்பு ஒன்றுமே இல்லையாம்....சந்திரா!....நாம் இருவரும் நிறைய பக்ஷணங்கள் எடுத்துக்கொண்டு அக்காவைப் போய் பார்த்துவிட்டு வரலாமா! நாளையே புறப்படுவோமா! எனக்குப் பார்க்க வேண்டும்போலிருக்கிறது" என்றாள்.

இதைக்கேட்ட சந்திராவுக்கு ஒருபுறம் சந்தோஷம் பொங்குகிறதெனினும் "நான் அந்த வீட்டிற்குப் போவது எப்படி சாத்யமாகும். இந்தமாதிரியான சமயத்தில் அவள் மனது சந்தோஷமாகவிருக்கவேண்டியிருக்க, நான் போனல் அதற்குப் பங்கமல்லவோ வரும். அதனல் கருச்சேதமே ஏற்பட்டாலும் ஏற்படலாம். புதைந்து கிடக்கும் இந்த ரகஸியத்தை நான் எவ்வாறு ஜெயிப்பது?" என்று சிறிது நேரம் தியங்கினாள்.

தாயாரை த்ருப்தி செய்யும் நோக்கத்துடன், "ஓ! அப்படியே போய் அக்காவைப் பார்த்து பத்து நாட்கள் அவளுடன் இருந்துவிட்டு வரலாம். அக்காவுக்கு புதிய புடவைகள், நகைகள் செய்துகொண்டு போகலாம்மா! ...அம்மா! அன்று புதையல் விஷயத்தைப்பற்றிப்பேசிக்கொண்டேயிருக்கையில் அப்பா வந்துவிட்டதால் நின்று போயிற்று. அதை எனக்குக் காட்டுகிறாயா"என்றாள்.

அமிருதவல்லி பூர்ண திருப்தியுடன் சந்திராவை அழைத்துக்கொண்டு ஓட்டமாக அந்த கோயிலுக்குச் சென்றாள். ஸ்வாமியின் பின்புறமுள்ள ஒரு மறைவான இடத்தில் தவலையுடன் இருந்த புதையலைக் காட்டினாள். அவைகளைக் கண்டு சந்திரா பிரமித்தாள். "இத்தனையும் தன் இன்ப துரைக்கல்லவா உரிமையானது. இதை நாம் அபகரிப்பதுபோல் எடுத்துக்கொள்வது நீதியாகுமா!" என்று க்லேசமடைந்துத் தவித்தவாறு நகைகளை எடுத்துப் பார்த்தாள்.

அதில் ஸ்ரீதரன்...என்று எழுதியிருப்பதைக் காணும்போது அவள் இதயத்திலிருந்து இன்ப ஊற்று சுறந்தது. "அம்மா! இது யாருடைய குழந்தையின் நகைகளோ தெரியவில்லையே! எத்தனை

அழகாக இருக்கிறது பார்த்தாயா! நம்ம அக்காவுக்கு குழந்தை பிறந்தால்கூட இதேமாதிரிதான் செய்யவேண்டும்" என்று தாயாருக்குத் தன்னிடம் சந்தேகம் உண்டாகாதிருக்கும் பொருட்டு ஏதோ பேசுகிருளேயன்றி உள்ளத்தில் கொந்தளிக்கும் பலவிதமான உணர்ச்சிகளின் வெள்ளத்தை விவரிக்கமுடியுமா?

சந்திராவுக்கு இந்திராவிடம் உள்ள ஆழமான அன்பை எண்ணி அமிருதவல்லியம்மாள் உள்ளம் பூரித்தாள். சந்திரா நகைகளையெல்லாம் திருப்பித் திருப்பிப் பார்க்கிருள். பார்க்கப் பார்க்க நகைகள் அத்தனையும் ஸ்ரீதரனின் பிம்பம்போலவே தோன்றி அவளை பிரமிக்கச்செய்தன. நகைகளில் உள்ள பெயரைப் பார்த்துக் கூறுவது போல் "ஸ்ரீதரன்! ஸ்ரீதரன்...ஆஹா! எத்தனை அழகான பெயர்! ஸ்ரீதரன்! அம்மா...ஆம்மாம்மா!...இதோ பாரேன்! அக்காவுக்கு ஆண் குழந்தையாகப் பிறந்தால் ஸ்ரீதரன் என்று பெயர் வைக்கலாமா! அந்த பெயர் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அக்காவுக்குக்கூட இந்த பெயர் பிடிக்கும் என்று நினைக்கிறேன். பெண்ணுய்ப்பிறந்தால் என் தாயாருடைய பெயராகிய அனுசூயா தேவி என்று வைக்கலாம்...சரிதானம்மா!" என்று சிறு குழந்தையைப் போல் கொஞ்சலாகக் கேட்டாள்.

சந்திராவின் ஆழமான அன்பைக் கண்டு மிகவும் வியந்தவாறு அவள் கூறியதை ஆமோதித்து சந்திராவைத் தட்டிக்கொடுத்தவாறு "கண்ணா! உன்னிஷ்டப்படியே வைக்கலாம். நானே உன் தாயாரின் பெயரைத்தான் வைக்கவேண்டுமென்று நினைத்தேன். நீயும் அதையே கூறுகிருய். ஆகையால் உன்னிஷ்டப்படியே செய்வோம்" என்று உத்ஸாகப்படுத்தினுள்.

சந்திரா நகைகளைக் கிளறி ஒன்ருென்ருக எடுத்துப் பார்க்கும் போது நரஸிம்மன் அமிருதவல்லியைக் கூப்பிடுவதாக ஆள் வந்து சொன்னுள்.

அமி:—சந்திரா! அப்பா கூப்பிடுகிருராம். நான் போய் வருகிறேன். இதை ஜாக்கிரதையாக முன்போலவே மறைத்து வைத்து விட்டுவா...பிறருக்குத் தெரியவேண்டாம்—என்று கூறிச்சென்ருள்.

சந்திராவுக்கு அந்தப் புதையலைப் பார்க்கப் பார்க்க இதயக் கடலில் பல எண்ணங்கள் அலைபோல் மோதி மோதி உடைந்தன. "ஐயோ! வீட்டின் சொந்தக்காரர்களின் சொத்து இவைகள் என்பதில் சந்தேகமேயில்லை. கடவுளறிய பிரமாணமாகத் தெரிந்திருந்தும் அவர்களது சொத்திற்கு நான் சத்ருவாக வந்தேனே! அவர்களுடைய வீட்டை நான் வாங்கி மகிழ்வதென்று, அவருடைய மென்னியைப் பிடிக்காத குற்றமாக பணத்தைக் கக்கச் செய்து அந்த பணத்தில் எனக்காக மோட்டார் வாங்கியதொரு கண்ருவி, அவர் இக் கஷ்டகாலத்தில் அனுபவிக்கவேண்டிய புதையலுமா என்னிடமே அகப்பட்டு அவர்களுக்கு உபயோகப்படாது போக

வேண்டும். இதெல்லாம் ஏதோ ஜென்மாந்திர பாதகத்தின் விளைவு தானேயன்றி வேறில்லை'' என்று விசனித்துக் கண்ணீர் உதிர்த்தாள்.

அங்கு கோயில்கொண்டிருக்கும் கிருஷ்ண பிம்பத்தை நோக்கி, "ஹே கிருஷ்ணா! இந்த கிரகத்தில் நீ இருந்தும் இதன் சொந்தக்காரர்களின் கர்ம வினையினால் அவர்களைப் பலவிதத்திலும் ஆட்டி சோதனைக்குள்ளாக்கிவிட்டாய். இனியாவது அவர்களுக்குரிய இப் பொருள்களை அவர்களிடம் சேர்த்து கஷ்டகாலத்தினின்றும் விடுதலை செய்யமாட்டாயா! என்னப்பனே! நீ சர்வலோக ரக்ஷகனல்லவா! உன் ரக்ஷகத்தன்மையை நீயே உணராதிருந்தால் கேவலமான புழுகிற்கு ஒப்பாகிய நானா உணர்த்துவது....ஆம்...உணர்த்துவேன்...எனது பிதா நீயல்லவா! நான் குழந்தையல்லவா! உன் குழந்தை உனக்குரைப்பதில் என்ன குற்றம்?....குற்றமே இல்லை. உன் திருவடி சாக்ஷியாக இப் பொருள்களை நான் எவ்விதமாவது பிரயத்தனம் செய்து சொத்துக்காரர்களிடம் சேர்த்துவிடும் தைரியத்தையும் தக்க மார்க்கத்தையும் எனக்குக் கொடு....உன் மார்பில் வீற்றிருக்கும் வீரலக்ஷ்மி...தைரிய லக்ஷ்மியின் சக்தியை ஒரு அணு பிரமாணம் எனக்களிக்கச்செய்து இந்த அல்ப வேதனையைத் தீர்த்து வை...இதை நான் உன் பாத சாக்ஷியாகக் கொடுப்பதால் திருட்டில் சேராதல்லவா! உன் சாக்ஷியைவிட உலக சாக்ஷி வேறு வேண்டுமா! வேண்டாம்;—வேண்டாம். வேறு சாக்ஷியே வேண்டாம் அண்டமளந்த அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகன் நீ இருக்கும்போது, உண்டு உறங்கி உள்ள நேரம் தன்னைக் கள்ளமும் கபடமும் நிறைந்த முள்ளம் பாதையில் உழலும் மாமிசப் பிண்டங்களின் சாக்ஷி எதற்கு?...கண்ணா!...கார் முகில் வண்ணா! உன்னடியாளைக் காப்பாற்று. உன் குழந்தையான ஸ்ரீதரனைக் காப்பாற்று. என்று பித்து பிடித்தவள்போல் கூறி கண்ணனின் பிம்பத்தையே உற்றுப் பார்த்தாள்.

"நீ எண்ணுகிறபடியே செய். அஞ்சாதே!'' என்று அபயம் கொடுத்து கருணை நிறைந்த விழிகளால் கடாக்ஷித்து வாத்ஸல்யம் நிறைந்த வதனத்தில் புன்முறுவல் பூத்து அபாரமான தேஜஸுடன் கண்ணன் காக்ஷியளிப்பதுபோல் சந்திராவுக்குத் தோன்றியது. உடனே கண்ணனைப் பலமுறை சேவித்தாள். பிரதக்ஷணம் செய்தாள். இதயத்தில் எங்குமில்லாத தைரியமும் உத்ஸாகமும் பிரவாகம்போல் பெருக்கெடுத்தது. அதே வேகத்தில் அந்தப் புதையலில் இருந்த பணத்தில் கொஞ்சமும், நகைகளில் சிலவற்றைப் பொறுக்கியும் ஒரு முடிச்சாகக் கட்டித் தன் உள் மடியில் கட்டிக்கொண்டாள். "கிருஷ்ணா! உன் பாதமே துணை'' என்று நமஸ்கரித்தவாறு புதையல்களைப் பழயபடியே ரகஸியமான இடத்தில் வைத்து மூடினாள். சொத்துக்காரர்களிடம் முழு சொத்தையும் சேர்ப்பது எனக்கு தர்மமேயன்றி கொஞ்சம் கொடுப்பது மிகவும்

பாவமேயாகும். இதையாவது சேர்த்தால்போதும்'' என்று தனக்குள் தீர்மானமாக எண்ணியவாறு வெளியே வந்தாள்.

“மடியில் கனமிருந்தால் வழியில் பயம்'' என்கிற பழமொழி தற்சமயம் சந்திராவுக்குச் சரியாகத் தோன்றியது. என்னதான் கடவுள் சாக்ஷியாகத் தான் செய்யப் புகுந்தாலும் திருட்டுத்தனமாக மறைந்து செய்வது அவள் இதயத்தில் பக்கு, பக்கென்று ஏதோ பாறை அழுத்துவதுபோல் தோன்றியது. “எத்தகைய பாதகமாயினும் வரட்டும், இதை எப்படி அவரிடம் சேர்ப்பது? இதற்கு மார்க்கம் என்ன இருக்கிறது? எந்த வழியைக் காட்டி என் கவலையை அந்த கண்ணன் தீர்க்கப்போகிறான்?'' என்ற ஏக்கமே பெரிதாகப் புகுந்துகொண்டது.

## 29

“அமிருதவல்லி! உன்னை எதற்காக அழைத்தேன் தெரியுமா! உன் தங்கையின் கணவர் கடிதமெழுதியிருக்கிறார். ஸாரநாதனின் கல்யாணத்தைப்பற்றி எழுதியிருக்கிறார். சந்திராவைப் பிரிந்தது முதல் அவன் அதே ஏக்கமாகவிருக்கிறானும். சந்திராவினிடம் அவர்கள் எல்லோருக்குமே அபாரமான பிரேமை ஆழமாக விழுந்துவிட்டதாம். ஸாரநாதன் கல்யாணம் செய்துகொண்டால் சந்திராவைத்தான் செய்துகொள்வானும். இல்லையேல் கட்டாயம் பிரம்மச்சாரி விரதமே எடுத்துக்கொண்டு ஓடிவிடுவானும். தங்கள் குடும்பம் விளங்குவதும் அதற்கு விளக்கேற்றி வைப்பதும் நம் கையில்தான் இருக்கிறதாம். ஆகையால் உடனே ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறாராம். கல்யாணிகூட உன்னோடு இதைப்பற்றிப் பேசியிருக்கிறாளாம். அதை உன்னிடம் வற்புறுத்திச் சொல்லும்படியாகவும் எழுதியிருக்கிறார். அவர்களுக்குள்ள ஆசையை அளவிட்டுக் கூறவேமுடியாது. இதைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன'' என்றார்.

அமிருதவல்லியம்மாளுக்கு ஏற்கெனவே இது விஷயத்தில் பூர்ணமான திருப்தி இருப்பது இதுவரையில் அவருக்குத் தெரியாது. சந்திராவின் திரண்ட செல்வத்திற்காக ஆசைப்பட்டுக்கொண்டு தன் சகோதரியின் மகனுக்கே அவளை மணம் செய்வித்துவிடவேண்டும் என்கிற குறுகிய நோக்கமே அமிருதவல்லியம்மாளிடம் லவலேசமும் இல்லை.

தான் தன்னுயிரினும் இனியதாக வளர்த்த குழந்தையை தன்னைப்போலவே தன் சகோதரி கவனித்துக்கொள்வாள். தன்னுடைய பார்வையிலேயே சந்திரா இருக்கவேண்டும். அவளைத் தன்

காலம்வரையில் தன் கண்ணேபோல் பாதுகாக்கவேண்டும். பிறரிடம் கொடுத்தால் அவளைச் சரியாக நடத்துவார்களோ, மாட்டார்களோ! சொத்துக்காக ஆசைப்பட்டு அதை அபகரிக்கும் பொருட்டு இம்சிப்பார்களோ என்கிற பயமும் கவலையும் உண்டாகையால் ஸாரநாதனுக்குக்கொடுக்கமிகவும்ஆசைகொண்டிருந்தாள்.

இதைத் தன் கணவரிடம் கூறினல் ஒருவேளை தன் தங்கை பிள்ளைக்கு சொத்து சேர்வதற்காக இம்மாதிரி நிச்சயம் செய்வதாய் எண்ணிவிடப் போகிருரே என்று அஞ்சியே இதுகாறும் தெரிவிக்காதிருந்தாள். இப்போது சமயம் வாய்த்ததால், "ஓகோ! உங்களுக்கு வேறு கடிதம் வந்திருக்கிறதா! எனக்கும் கல்யாணி எழுதியிருக்கிருள். இந்த விஷயத்தில் உங்களுடைய அபிப்ராயம் எப்படியோ! அதே தான் எனது அபிப்ராயமும்" என்ருள்.

நரஸி:—ஸாரநாதன் வெகு கெட்டிக்காரப் பயல். அழகிலும் சந்திராவுக்குச் சரியான ஜோடிதான். படிப்பும் கேட்கவேண்டாம். சொத்தும் தேவலை. குணமோ தங்கக் கம்பி. நம்முடைய கைக்கு அடங்கிய பையனுகையால் குழந்தையை நன்ருக வைத்துக்கொள்வான். அவனும் அளப்பரிய ஆசையை வைத்திருப்பதால் எனக்கு மிகவும் சம்மதந்தான். சந்திராவை ஒரு வார்த்தை கேட்டுவிட்டு கடிதமெழுதிவிடலாமென நினைக்கிறேன். நீ என்ன சொல்கிருய்?

இதைக் கேட்டதும் அமிருதவல்லியம்மாளுக்கு வெகு சந்தோஷமாகிவிட்டது. "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பது போல் அந்தம்மாளின் முகத்தில் ஏதோ ஒரு பெருமிதமான வெற்றியின் சின்னமும் சந்தோஷத்தின் எல்லைகடந்த உணர்ச்சியும் தாண்டவமாடியது. "என்னுடைய இஷ்டமும் இதேதான். என்ன இருப்பினும் என் சொந்த தங்கையானதால் நான் சொத்துக்கு ஆசைப்பட்டுச் செய்தேன் என்கிற வார்த்தை வரக்கூடாது என்றுதான் இதுவரையில் பேசாதிருந்தேன். கல்யாணி என்னைவிட ஆயிரம் மடங்கு அதிகரித்த வாத்ஸல்யத்தோடு அந்த பரதேசிக் குழந்தையைப் பார்த்துக் கொள்வாள் என்கிற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகையால் இதையே முடித்துவிடலாம்.

நம்மிருவருடைய விருப்பத்திற்கு மீறி குழந்தை ஒருபோதும் பேசவேமாட்டாள். அதோடு இக்காலத்து அதிகப்ரஸங்கிப் பெண்களைப்போல் தானே நேசித்துக் கணவனைத் தேர்ந்தெடுப்பதும், பெற்றோருக்குத் தெரியாது காதலிப்பதும், கள்ளப் பேச்சு பேசுவதுமான துர்க்குணங்கள் நம் கண்மணியிடம் மருந்துக்கும் கிடையாது என்பதை நாமறியவில்லையா! ஆகையால் அவள் தடையே சொல்லமாட்டாள். எதற்கும் ஒப்புக்கு ஒரு வார்த்தை கேட்டுவிட்டு எழுதிவிடுங்கள்" என்ருள்.

தற்செயலாக இந்த பக்கம் வந்த சந்திரா இத்தம்பதிகளின் சம்பாஷணையை ஆதியோடந்தமாக கேட்கக் கேட்க அவள் உள்ளம் துடி துடிக்கின்றது. செய்வதறியாது அப்படியே ஒரு எந்திரம்போல்

அசையாது நின்றிருந்தாள். தன்னுடைய நலனைக் கோரி அவர்கள் பேசுவதும் தன்னுடைய ரகஸியமறியாது நிஷ்களங்கமான இதயத்துடன் தன்மீது வாத்ஸல்யத்தை அள்ளி வீசியிருப்பதும் காண ஒரு புறம் பிரேமை வெள்ளம் கரைபுரளுகிறது. தன்னுருயிர் ஸ்ரீதரனை விட்டு மற்றொருவனை மணப்பது என்றால் மனது இடந்தருமா?... அதை நினைத்தும் புழுகெனத் துடித்து அங்கொரு ஆசனத்தில் உட்கார்ந்துவிட்டாள்.

"தன்னை வந்து அவர்கள் கேட்டால் என்ன பதில் சொல்வது" என்கிற மகத்தான கவலையும் குழப்பமும் பிடித்து வாட்டி வதங்கச் செய்கின்றது. தன் வயிற்றில் பிறந்த மகளைவிட விசேஷமான அன்பு செலுத்தும் தம்பதிகளிடம்தான் அவர்கள் மனங்கோண நடப்பது குற்றத்திலும் குற்றமல்லவா! தனக்கு அவர்கள் நன்மையைக் கோரியே செய்வதை என் மனமறிந்தும் என்னிதயத்தை அந்தரங்கமாகப் பறிகொடுத்துத் தவிக்கும் நிலைமையை நான் எப்படித் தெரிவிப்பேன்? "ஐயோ! ஸ்ரீதர்! ஸ்ரீதர்! நான் இதோ இருக்கிறேன். நீ கவலைப்படாதே" என்று என் முன்பு வரமாட்டீர்களா! நான் எப்படியாவது என் பெற்றோர்களின் சம்மதத்தைப் பெற்று உங்களிடம் என்னுயிர் நீங்கும் வரையில் அடிமையாகிவிடுவேனே! தங்கள் இருப்பிடம்கூடத் தெரியவில்லையே!

பாழும் ஜென்மம் ஏன் எடுத்தேன். மனத்தைப் பறிகொடுத்த பரம ரகஸியத்தை மறப்பேனு! தாய் தந்தையர்களுக்காக மனம் விரும்பாத அண்ணனை மாலையிடுவேனு! உயிரினும் இனிய சகோதரியின் தன்மையறிந்தும் நிஷ்களங்கமான என் தாயாரை திருப்தி செய்வதற்காக நான் அந்த இடத்திற்குப் போவதா?...என் ஸ்ரீதரனுக்கு என்று உரிய பொருளை நான் கவர்ந்ததற்காக விசனிப்பதா! எத்தனைவித சங்கடங்களைத்தான் நான் சகிப்பேன்? என்னுல் முடியவில்லையே! பணமிருந்து என்ன, பாக்யமிருந்து என்ன? மனத்திற்குச் சந்துஷ்டியும் அமைதியும் இல்லாத ஜென்மம் ஒரு ஜென்மமா?" என்று நொந்துகொண்டும் கண்ணீர் விட்டாள். எங்குமில்லாத துக்கம் அவள் இதயத்தைப் பிறிக்கொண்டு வந்தது.

அதே சமயம் அமிருதவல்லியம்மாளும் நரஸிம்மனும் சந்திரா பயந்து நடுங்குவதற்குத் தகுந்தாற்போல் அங்கு வந்தார்கள். சந்திரா அவர்கள் வருவதையறிந்து தன்னைச் சற்று சமாளித்துக்கொண்டு சந்தோஷத்துடன் பார்ப்பவள்போல் அபிநயித்து, "அம்மா! உனக்கு நூறுயிசும்மா! இப்பதான் உனக்கொரு கடிதம் வந்தது. அதை உன்னிடம் கொடுக்கலாமென்று வந்தேன். நீயே வந்துவிட்டாய். இந்தாகடிதம்" என்றுவெகுசாதாரணநிலைமையுடன்கூறினுள்.

அமிருதவல்லி சந்தோஷத்துடன் சந்திராவைத் தட்டிக்கொடுத்துக் கொஞ்சியவாறு, "அடி என் திருட்டுக்கிளியே! அப்படியானுல் அப்பாவும் நானும் பேசியதை நீ கேட்டிருப்பாயல்லவா!"... என்றுள். சந்திராவுக்குத் திக்கென்று ஒரு கலக்கு கலக்கியது.

# மோகினி
## அன்பர்களுக்கு
# ஓர் அரிய விருந்து

**1-1-1943-ல் வெளியாகும் ஜகன்மோகினி 20-வது ஆண்டு மலரில் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் அம்சங்கள்**

(1) பல பிரபல எழுத்தாளர்களின் அருமையான கட்டுரைகள், சிறு கதைகள், உண்மைச் சித்திரங்கள் வாசகர்களுக்கு (a) இலக்கியம் (b) ஆராய்ச்சி (c) சரித்திரம் (d) கட்டுரை வியாஸம் (e) கற்பனை முதலிய துறைகளில் அரிய விருந்தளிக்கும்.

(2) அழகிய சித்திரங்களும், கவர்ச்சி மிகு போட்டோக்களும் உங்களுக்கு ஆனந்தத்தை உண்டாக்கும்.

(3) ஒரு முழு நாவல்—வை. மு. கோ. வைர விழா நாவல்—க்ருபாமந்திர் முன்பு வெளியான விசேஷப் பிரசுரங்கள் ஆத்ம சக்தி (1940), கருணாலயம் (1941), கலாநிலயம் (1942) போன்று பல அழகிய கலர்ப் படங்களுடன் கூடிய இனிய நவீனம்.

———————— இங்கு கத்தரிக்கவும் ————————

## கூப்பனை பூர்த்தி செய்யும் விதம்

1. தங்கள் பெயரையும், முழு விலாஸத்தையும் தெளிவாக பெரிய எழுத்துக்களில் எழுதவும். தபாலாபீஸ் பெயரை இங்கிலீஷில் ப்ரத்யேகமாகக் குறிப்பிடவும்.

2. 1943 வருடத்திய சந்தாவும், குறைந்த விலை திட்டத்தின்படி ஆண்டு மலரின் க்ரயமும் சேர்த்து பணத்தை போஸ்டல் ஆர்டர்மூலம் "ஜகன்மோகினி" ஆபீஸ், சிங்கப்பெருமாள்கோவில் போஸ்டு என்று ஷை போஸ்டல் ஆர்டரிலே எழுதி, அதை 'க்ராஸ்' செய்து, இந்த கூபனுடன் சேர்த்து அனுப்பவும்; மணியார்டர் மூலம் பணம் அனுப்புவோர் இந்த கூபனைத் தனியாக அனுப்பவும். முதலில் குறிப்பிட்டபடி அனுப்பினால் உங்களுக்கு தபால் கமிஷனும் ஸ்டாம்பும் $2\frac{1}{2}$ அணா ஆகும். இரண்டாவதாகக் குறிப்பிட்டபடி அனுப்பினால் $3\frac{1}{2}$ அணா ஆகும். சௌகரியம்போல் செய்யவும். (Postal Orders must be crossed without fail.)

3. ஏஜண்டுமூலம் ஆர்டர் செய்வோர் இந்த கூபனை பூர்த்தி செய்து, வருஷ சந்தாவுடன் பணத்தை ஏஜண்டிடம் கொடுக்கவும்.

# ஜகன்மோகினி 20-வது ஆண்டு மலரும்

## வைரவிழா நாவலும்

## 1943ளு ஜனவரிமீ 1உ யன்று உங்களுக்குக் கிடைக்கவேண்டுமாயின்

**நீங்கள் தாமதிக்காது இப்போதே உங்கள் பிரதிக்கு ஆர்டர் அனுப்பி "ரிஸர்வ்" செய்துகொள்ளவேண்டும்.**

ஏனெனில், ஜகன்மோகினி வாசகர்களில் ஒவ்வொருவருக்கும் ஷை பிரசுரம் கிடைக்கும்படியான அளவு பிரதிகள் அச்சிடவேண்டிய பேப்பர் அகப்படாததால், யார் சீக்கிரம் புது வருஷ சந்தாவுடன் முன்பணமனுப்புகிறர்களோ அவர்களுக்கே கிடைக்கும். தவிர, எவ்வளவு முன்னதாக ஆர்டர் செய்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு விலையும் குறைவு. ஏஜண்டு மூலம் ஆர்டர் செய்வோருக்கும் கீழே காணும் திட்டப்படி குறைந்த விலை உண்டு.

| | |
|---|---|
| நவம்பர் கடைசி வரை | ரூ 1-0 |
| டிசம்பர் | ரூ 1-4 |
| பிறகு, முழு விலை | ரூ 1-8 |

நவம்பர் மாதத்திலேயே புது மலருக்காக உங்களது ஆர்டரைப் பதிவு செய்துகொள்வது நல்லது. ஏனெனில்,

(1) கட்டாயம் உங்களுக்குப் பிரதி கிடைக்கும்.

(2) விலையில் 8 அணா குறையும்... தாமதிக்காமல் ஷை குறைந்த விலை திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

——— இங்கு கத்தரிக்கவும் ———

# ரிஸர்வேஷன் கூபன்

பெயர்

முழு விலாசம்

செலுத்தும் தொகை

தேதி கையெழுத்து

........................................................................................................

1943 வருட சந்தாவும் இத்துடன் செலுத்தப்படுகிறதா?

........................................................................................................

ஏஜண்டிடம் ஆர்டர் கொடுக்கப்படுகிறதா அல்லது நேரிலா?

........................................................................................................

(To be filled by Agent when booked by him)

Order booked on....................1942.

Amount remitted on..............1942.

Signature of Agent.

கேட்டேன் என்று சொல்லவும் மனது துணியவில்லை; பொய் சொல்லவும் நா எழவில்லை. சிலவினாடிகள் திக்குமுக்காடினாள். பிறகு தைரியமாக...என்னம்மா நான் ஒட்டு கேட்பதாகவா நினைத்தாய்? இப்போதுதான் வந்துகொண்டே இருக்கிறேன். அது கிடக்கட்டும். அக்கா என்ன எழுதியிருக்கிறாளோ! படியம்மா!" என்று வார்த்தையை மாற்றிவிட்டாள். அமிருதவல்லியம்மாள் கடிதத்தைப் படிக்கவாரம்பித்தாள்.

"அன்பு மிக்க அம்மாவுக்கு வந்தனங்கள். உபயக்ஷேமம். எனக்கு இப்போது உடம்பு ஒன்றுமில்லை. சவுக்யமாக இருக்கிறேன். நீ சந்திராவை அழைத்துக்கொண்டு வரப்போவதாய் கடிதம் எழுதியிருக்கிறாய். நான் உன்னை மிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன். என் மாமியார் வீட்டு மனிதர்களின் சுபாவம் உனக்குத் தெரியாது. அதனால் நீ மட்டும் வா! சந்திராவை அழைத்துவரவேண்டாம். இதை அவளிடம்காட்டாதே.

உன் பிரிய
இந்திரா'

இதைப் படித்ததும் அமிருதவல்லியம்மாளுக்கு ஒரே கலக்கமாகக் கலங்கியது. களங்கமற்ற குழந்தை சந்திராவிடம் இந்திராவுக்கு ஏற்கெனவே என்ன த்வேஷமோ தெரியவில்லையே என்று சந்தேகித்ததற்கு அதை ஊர்ஜிதப்படுத்துவதுபோல் இக்கடிதம் வந்திருப்பதானது அந்தம்மாளுக்கு முற்றிலும் தன் மகள் பேரிலேயே வெறுப்பும் கோபமும் தோன்றியது. இங்கிருந்தால் சந்திராவுக்குக் கடிதத்தைக் காட்டும்படி நேரும் என்கிறதற்காக பேசாமல் உள்ளே போய்விட்டாள். மகா யூகசாலியான சந்திரா, கடிதத்தில் இந்த விஷயத்தைப்பற்றிதானிருக்கும், அதான் தாயாரின் முகம் உடனே மாறுபட்டுவிட்டது என்று அறிந்துகொண்டு சந்தோஷமே யடைந்தாள். தான் செல்லாது நின்றுவிட்டால்போதுமென்றே அவள் இதயம் வேண்டியது.

## 30

பள்ளிக்கூடங்களைப் பார்வையிடப் புதிய இன்ஸ்பெக்டர் வரப்போகிறார் என்று ஸ்கூல்களில் அலங்காரமும் வரவேற்புகளும் தடபுடல் படுகின்றன. இன்ஸ்பெக்டருக்குக் கொடுத்திருக்கும் பங்களா வெகு நன்றாக இருந்ததால் அந்த தோட்டத்திலுள்ள பலவிதமான செடிகளைப் பார்த்து மனம் பூரித்தவாறே நமது கதாநாயகி சந்திரா தன் தகப்பனருடன் உலாவினாள்.

அமிருதவல்லியம்மாள், சந்திராவிடம் இந்திராவின் கடித ரகஸியத்தைக் கூறாமல், தான் மட்டும் இந்திராவைப் பார்க்கப்போவ

தாயும், தகப்பனுர் இன்ஸ்பெக்ஷனுக்குத் தனிமையில் போவதால் அவருக்கு ஏற்கெனவே தேகநிலே சரியில்லாததால் நீ அவருடன் கூடவருவதற்கு விரும்புகிருராகையால் அவருடன் போய் வா" என்று தந்திரமாக அனுப்பினுள்.

எல்லாம் நன்மைக்கே என்கிற தத்துவத்தைக் கடைபிடிக்கும் சந்திரா நெஞ்சைவிட்டு ஒருபாரம்குறைந்ததாக எண்ணி தகப்பனுருடன் தன் வேலேக்காரியையும் அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டாள்.

ஊரைவிட்டுப்போவதும் சற்று மனச்சாந்தியாகவே இருக்கும் என்று தோன்றியது. வந்திருக்கும் ஊரும் மிகவும் அழகானதும் ஆரோக்யமானதுமான ஊராகையால் நரஸிம்மனுக்கு மிகவும் பிடித்தது. மாலே மூன்று மணிக்கு பள்ளிக்கூடத்திற்குக் கிளம்பி கூடவே சந்திராவையும் அழைத்துச்சென்ருர்.

பள்ளிக்கூடத்தில் தடபுடல் வரவேற்புகள் நடந்தன. வகுப்பு வாரியாகப் பார்வையிட்டுக்கொண்டு வரும்போது 4--வது வகுப்புக்குள் தந்தையும்,மகளும் நுழையும் முன்பே அந்த வகுப்பின் உபாத்தியாயர் இவர்களே எதிர்கொண்டழைக்கவந்தார்.

சாதாரண சட்டை, சாதாரண வேஷ்டி, மற்ற ஆடம்பரம் எதுவுமில்லே. உடல் மெலிந்து கன்னங் குழிந்து அடையாளமே தெரியாத ஒரு நடைச் சித்திரம் போல் வந்த ஸ்ரீதரனேக் கண்டதும் சந்திராவுக்குத் தூக்கிவாரிப்போட்டு அவள் தேகத்தை அப்படியே ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது.

பிள்ளேகளின் ஆரவாரத்திலும் சப்தத்திலும் மற்ற உபாத்தியாயர்கள் நரஸிம்மனேச் சுற்றிக்கொண்டு சளசளவென்று பேசித் தமது வகுப்பு மாணவர்களேச் சரியாக நிற்கும்படியும் வந்தனம் செய்யும்படியும் உத்திரவிடுவதிலும் இன்ஸ்பெக்டரை வரவேற்பதிலும் மும்முரமாக இருந்தார்கள்.

"என் ஆத்மதுரையா!...என் இன்ப வடிவமா!...என்னிதயக் கோயிலில் சதா வீற்றிருக்கும் ஆனந்தஸ்வரூபமா!...ஸ்ரீதர்...ஸ்ரீதர் என்று தனக்குள் முணுமுணுத்தபடியே இதயத்தைப் பிடிக்கொண்டு வரும் ஒரு பெருமூச்சுடன் அசைவற்று, வைத்த விழி வாங்காது நின்று தத்தளிக்கின்ருள்.

தன்னே இந்த சங்கடமான நிலேமையில் பிறர் பார்த்துவிடப் போகிருர்களே என்கிறஅச்சங்கூட ஒருவிஞடி மறைந்துபோயிற்று. ஸ்ரீதர்!...என்று கூப்பிட்டுவிடவும் உள்ளம் பதறித் துடித்துக் காற்றினும் கடிய வேகத்தில் பாய்ந்தது. அகத்தில் கொந்தளிக்கும் ஆனந்தப் புசல்காற்றின் ஜ்வாலே கண்களில் பிரகாசித்து முகத்தில் அவளறியாத விகசிதத்தை உண்டாக்கியது.

"பாம்பின் பாதை பாம்பல்லவோ அறியும்?" அதுபோல் ஸ்ரீதரன் தன் கடமையைக்கூட மறந்து தடைகட்டிய நாகம்போல் "என்ன! என்னிதய ராணியா!... சந்திரா தேவியா! என் ஜீவிய மாணிக்கமா! ஐயோ! எத்தனேயோ முறை நான் தப்பித்துத் தலேமறைவாகப்

போயும் இப்போது புசல்காற்று இப்பக்கம் அடித்து இருவரையும் சந்திக்கும்படிச் செய்துவிட்டதே!" என்று தனக்குள் எண்ணி திகைப்பூண்டு மிதித்தவன்போல் நின்றான்.

நரஸிம்மன் தற்செயலாக தலைமை உபாத்தியாயருடன் பேசிக் கொண்டு தமது கழுத்தில் குவிந்துவரும் ரோஜா மாலைகளின் ஸரங்களைக் கையில் மாட்டியவாறு வாசனை பார்த்துக்கொண்டே வகுப்புக்குள் சென்றார். உடனே குழந்தைகள் தமக்கு உபாத்தியாயர் கட்டளையிட்டிருந்தபடியே, "ஸரஸ்வதி சரணம்" என்ற பாட்டை கணீரென்று சேர்ந்து பாடவாரம்பித்த தொனி காதில் பட்ட பிறகுதான் ஸ்ரீதரன் சற்று சுய உணர்வு பெற்று சடக்கென்று தலையைக் குனிந்தவாறு உள்ளே சென்றான்.

சந்திரா ஒரு எந்திரப் பாவைபோல் நரஸிம்மனின் பின்னாலேயே நடந்து போய் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தாள். அவளுக்கு அங்கிருக்கவே பிடிக்கவில்லை.

இதயத்தில் வேதனை செய்த சல்லடை போட்டு சலிக்கின்றது. பெண்களும் பிள்ளைகளும் பாடுவதே காதில் படவில்லை. ஜகஜ்ஜோதி பிரகாசமாக நின்ற ஸ்ரீதரனின் பார்வையில் பொதிந்து தெறித்து வந்த உணர்ச்சிகளின் ரகஸியத்தை அறிந்த உள்ளம் பொருமித்துத் தவிக்கின்ற நிலைமையில் ஸ்ரீதரன் சடக்கென்று வாத்தியார்களின் கும்பலில் மறைந்துவிட்டதானது பூர்ண சந்திரனைக் கார்மேகங்கள் கூடி மறைத்துவிட்டதுபோல் தோன்றியது. "இரண்டு முறைகள் எதிர்பாராதவண்ணம் இந்த ஆனந்தபிம்பத்தைத் தரிசித்தும் ஒரு வார்த்தை பேசும் பாக்யம்கூடக் கிட்டாதுபோனதுபோல் இம்முறையும் போய்விடுமோ! பகவானே! இம்முறை எப்படியாவது என் அன்பரிடம் ஒரு வார்த்தையாவது சொல்லி என் நெஞ்சை யழுத்தும் பாரத்தைச் சிறிது தணிக்கமாட்டாயா? என்னை சோதனை செய்வதற்கு இந்த சந்திப்பை உண்டாக்கினாயா? அன்றி ஒரு நன்மைக்கே காட்டி யிருக்கிறாயா...என்னால் இவ்வேதனைகளைப் பொறுக்கமுடியாது....சோதிக்காதே"...என்று தனக்குள் பலவாறு எண்ணமிட்டபடியே சித்திரம்போல் அசையாது அமர்ந்திருந்தாள். தன் தகப்பனார் வீட்டு விஷயமான விரோதத்தில் இவரை ஏதும் பேசாதிருக்கவேண்டுமேயென்கிற பயமும் பாதிக்கின்றது.

ஸ்ரீதரனுக்கோ, தன் அந்தரங்க விஷயத்தைத் தவிர நரஸிம்மனின் கடிதமே அத்தனை க்ரூரமாகவிருந்ததால் நேரில் என்ன சொல்வாரோ! என்ன நடக்குமோ!...கடவுளே! அம்மாதிரி ஒன்றும் ஆபத்து நேராதிருக்கவேண்டுமே! அதனால் சந்திராவின் மனது வருந்தித் தவிக்காதிருக்கவேண்டுமே!" என்று தனக்குள் விநாடிக்கு விநாடி தத்தளிக்கின்றான்.

சந்திராவின் பரிதாப பிம்பத்தை நரஸிம்மன் கவனிக்காததும் தன்னுடைய நற்காலத்திற்குத்தான் என்று எண்ணினாள். பள்ளிக்கூடத்து நடவடிக்கைகள் முடியும் வரையில் பல்லைக் கடித்துக்

கொண்டு உட்கார்ந்திருந்தாள். பாதியில் எழுந்து சென்றால் தந்தையின் மனத்திற்குத் தாங்கலாகவிருக்கும் என்பதை உணர்ந்து பேசாதிருந்தாள். வாடிவதங்கி நீரில் மிதக்கும் தாமரை மலர்போன்ற அவள் விழிகள் மட்டும் தன்னுயிர்ப் பொருளை நாடி ஹால் முற்றும் சுற்றிச் சுற்றி அலைந்தது. உபாத்தியாயர்களின் கூட்டத்து மத்தியில் ஒரு சமயம் விசனம் தேங்கி சுண்டிய முகமும் நீர் நிறைந்த கண்களும் துவண்டு ஆடும் சரீரமும் காணப்பட்டது. அடுத்த கணம் அதுவும் மறைந்தது.

பள்ளிக்கூடத்து நடவடிக்கைகள் ஒன்றுமே சந்திராவின் கண்ணில் படவில்லை. காதிலும் கேட்கவில்லை. அந்த வகுப்பு முடிந்ததும் அடுத்த வகுப்புக்குச் செல்லக் கிளம்பினர்கள். அதற்குமேல் சந்திராவால் தாங்கமுடியவில்லை. வேஷம் போடவும் மனமில்லை. தன் தகப்பனரை நோக்கி, "அப்பா! எனக்கு ஏதோ திடீரென்று தலை சுற்றுகிறது. நான் வீட்டுக்குப் போய் உங்களுக்கு வண்டி யனுப்புகிறேன்" என்றாள்.

நரஸிம்மனும் சரி என்றதனல் மறுபேச்சுக்கு நிற்காது சந்திரா மாயமாய் மறைந்தாள். போகும் முன்பு மரண தாகத்துடன் தவிப்பவன் தண்ணீருக்கு நாக்கை புரட்டி வேதனையுறுவதுபோல் மூலைமுடுக்குகளை யெல்லாம் அவள் கண்கள் துளாவின. தனது ஆத்ம சஞ்சீவி கிட்டாத ஓர் பெரும் ஏக்கத்துடன் காரில் செயலற்ற கட்டைபோல் உட்கார்ந்தாள்.

இவளை வழியனுப்ப ஒரு மாணவி கூட வந்தாள். "அம்மா! நமஸ்காரம்" என்று அந்தப் பெண் தானகக் குரலைக் காட்டிய பிறகுதான், அவளுக்குக்கூட ஒரு பெண் வந்தது தெரிந்தது. 'ஓ....நீ கூட வந்துவிட்டாயே!...ஸ்கூலில் இருக்கவேண்டாமா! நீ எந்த வகுப்பு படிக்கிருயம்மா?'...என்று தன்னுடைய விசனத்தை மறைத்துக்கொண்டு கேட்டாள்.

மாணவி:—நான் 5-வது வகுப்பு படிக்கிறேன். வகுப்புகளெல்லாம் பார்த்தானபிறகு ஒரு ட்ராமா நடக்கப்போகிறதே, அதைப் பார்க்காது போகிறீர்களே!....

சந்தி:—ஓ!...ட்ராமா வேறு நடக்கப்போகிறதா!

மாணவி:—ஆமாம்....தேக்கச்சேரிகூட நடக்கப்போகிறது. இன்று எங்கள் பள்ளிக்கூட ஆண்டு விழாவும் தற்செயலாகச் சேர்ந்ததால் நன்றாக நடத்துகிறார்கள். எங்கள் ஸ்கூல் டீச்சர்களில் சிலரும் மாணவ மாணவிகளில் சிலரும் நடிக்கப்போகிறார்கள்.

சந்தி:—அப்படியா! என்ன நாடகம் நடிக்கப்போகிறார்கள்?

மாணவி:—எங்க ஸ்கூல் வாத்தியார் 'ஸ்ரீமான் ஸ்ரீதர்' என்று ஒருவரும் 'சங்கர்'என்ற ஒருவரும் சேர்ந்து நாடகம் தயாரித்தார்கள். ஸ்ரீதர்தான் "தர்மமே ஜயம்" என்ற நாடகம் எழுதியிருக்கிறார். அவரே அதில் கதாநாயகனக நடிக்கிறார். இருந்து பார்த்துவிட்டு

போங்களேன்'' என்று வெகு நாள் பழகிய பெண்ணைப்போல் சகஜமாகப் பேசினுள்.

நீறுபூத்த நெறுப்புபோல்இருக்கும் சந்திராவின் இதய வேதனையை இப் பெண் கிளறிவிட்டதுபோல் சொல்லிய வார்த்தைகள் அவள் உள்ளத்தைத் துளாவின. "ஸ்ரீதர்!...ஸ்ரீதர்!" என்ற அற்புத நாமத்தை மந்திரம் ஜபிப்பதுபோல் தனக்குள்ளேயே ஜபித்தாள். ஸ்ரீதரனைப்பற்றிப் பேசுவதைக் கேட்பதே ப்ரம்மானந்தமாகத் தோன்றியது. அந்த ஒரு சிறிய சந்தோஷமாவதுண்டாவதற்குத்தான் கடவுள் இந்த பெண்ணையனுப்பியதாக எண்ணினுள்.

அந்த இன்ப உணர்ச்சியை அனுபவிக்கும் வேகம் ஒரு பெருமூச்சாக எழுந்து. மறுபடியும் சற்று சமாளித்துக்கொண்டு "உன்னுடன் பேசுவதற்கு எனக்கு மிகவும் பிடிக்கிறது. நீ நல்ல புத்திசாலியாயிருக்கிறுய். நன்ருகப் படித்துப் பாஸ் செய்யம்மா... எனக்குத் தலைவலி அதிகமாயிருப்பதால் வர முடியவில்லை. நாடகம் முடிய வெகு நேரமாகுமல்லவா?...

மாணவி:—ஆமாம். இரவு எட்டு மணியாகும்.

சந்திராவின் மனம் திடீரென்று எதையோ தாவிப் பறந்து எங்கோ ஓடியது. மறு நிமிடம் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு "உன் பேரென்னம்மா?" என்ருள்.

மாணவி:—என் பேர் ஸரஸ்வதி.

சந்தி:—பேஷ்...கல்வியின் தாயகமான ஆதி தேவதையின் பெயரை உனக்கு பொருத்தமாகவே வைத்திருக்கிருர்கள். இந்தா பழம்'' என்று கொடுத்தாள்.

மாணவி:—வேண்டாம் மாமி!....இருக்கட்டும். நான் இப் போது பள்ளிக்கூடத்திற்குள் கொண்டுபோகமாட்டேன்...

சந்தி:—ஏன்! வீட்டில் வைத்துவிட்டு வாயேன்.

மாணவி:—எங்க வீடு வெகு தூரத்திலிருக்கிறது. இந்தபள்ளிக் கூடம் மிகவும் உயர்ந்த முறையில் நடக்கிறது. பெரிய ஸ்கூல்என்றத ஞல் எங்கப்பா என்னை இங்கு அனுப்புகிருர். அதோடு ஸ்ரீதர் எங்கத் தெருவிலேயே நாலாவது வீட்டில் இருப்பதால் அவர் துணையி லேயே வருகிறேன்; அவர் மிகவும் நல்லவர், யோக்கியமானவர் என்று எங்கப்பாவுக்கு அவரிடம் அதிகமான மதிப்பு உண்டு....

சொல்லமுடியாத ஏதோ ஒன்று சந்திராவின் மனத்தில் கொந் தளித்தெழுந்தது. "அப்படியா!...நான் வருகிறேன்...உங்க தெரு வின் பேரென்னம்மா!...

மாணவி:—சாமிக் கண்ணுத் தெரு, 10-ம் நெம்பர் வீடு. நேரமாகி றது; நான் வருகிறேன் மாமீ!...

சந்:—நல்லது போய்வாம்மா!...என்ருள். மீண்டும் எதையோ நினைத்தவள்போல் 'ஸரஸ்வதி இங்குவாம்மா! உங்கள் ஸ்ரீதர்வாத்யார் வீட்டில் யார் இருக்கிருர்கள்? அவர்கள் மிகவும் பணக்காரர்களா!

மாண:—அப்படி ஒன்றுமில்லை மாமி! ஏழைதான். சின்ன கூரை வீட்டில்தான் குடியிருக்கிறார். அவருடன் அவருடைய மாமியாரும் மனைவியும்தான் இருக்கிறார்கள்.—என்று கூறிக் கொண்டே ஓட்டமாக ஓடி மறைந்தாள்.

ஈட்டியால் குத்துண்டு தவிப்பதைவிட ஆயிரம் மடங்கு அதிகரித்த சங்கடத்தை அடைந்த சந்திரா, "அவருடைய மனைவியா! மாமியாரா!...அவருக்கு விவாகமாகிவிட்டதா?...அந்த சுந்தரஸ்வரூபனுக்கு மாலையிடும் பாக்யவதி ஒருத்தி யிருந்தாளா!...இது உண்மையானதா?...இது நம்பத் தகுந்ததா!...என் ஸ்ரீதரனுக்கா விவாகமாகிவிட்டது. இதென்ன பேரிடி!" என்று பல்வேறு எண்ணங்களால் சிதறிப்போய் அடியற்ற மரம்போலானள். வண்டியை ஓட்டச் சொல்வதைக்கூட அவள் உள்ளம் மறந்தது.

## 31

"ஏம்மா இத்தினி சுறுக்கா வந்துவிட்டாய்! அப்பா வரவில்லையா! ஏன் இப்படி உடம்பு துவளுகிறது?" என்று நாகு மிகவும் அன்புடன் சந்திராவைத் தொட்டுப் பார்த்தாள். சந்திரா பதில் பேசவேமுடியாது கண்ணீர் பெருகக் கவிழ்ந்து படுத்து சில நிமிடங்கள் வரையில் கட்டிலடங்காத வேதனையுடன் துடித்தாள்.

சிறு குழந்தை முதல் பாடுபடும் நாகுவுக்குச் சந்திராவின் நிலைமை சகிக்கமுடியாது போயிற்று. "கண்ணா! எம்மா இப்படி அழறே!....உனக்கு என்ன உடம்பு சொல்லும்மா!" என்று அனுதாபம் நிறைந்து கேட்டாள்.

சந்திரா எதையோ தீவிரமாக யோசித்தபடியே தன் கைக் கடியாரத்தைப் பார்த்தாள். மணி 5 தான் ஆயிருந்தது. "ஆம்! நான் அவருக்கு முற்றிலும் த்ரோகி; அவருடைய வயிற்றுக் கஞ்சிக்கே உலை வைத்து எமனாக வந்த பாவி ...என்னை அவர் நிராகரித்து வேறு மணம் செய்துகொண்டதில் ஒரு அணுவளவும் பிசகில்லை. அவர் நியாயத்தையே செய்தார்.அவருடைய வாழ்க்கையின் துணைவி செய்த பாக்யத்தை மகா அபாக்யவதியான நான் பெற முடியுமா!...முடியாது...முடியாது... அந்த புண்ணியவதியை.... என் இன்ப வள்ளலுக்குத் தொண்டு புரிந்துப் பேரானந்தத்தை அனுபவிக்க வந்த பாக்யவதியை....கொடிய பாபங்கள் நிறைந்த இப் புண் விழிகளால் பார்ப்பதுகூட பிசகா... அந்த உத்தமியை தரிசித்து என் மனமார்ந்த ஒரு வந்தனத்தைச் செய்வதில் என்ன குற்றம்?...ஐயோ! அவருக்குத் தெரிந்தால் பெருங் குற்றமாகவே நினைப்பாரோ! என்னவோ! அப்படியாயின் என் இன்ப துரையின்

கண்களில் நீர் முட்டியதைக் கண்ணாரக் கண்டேனே, அது பொய்யா!...எதுவாயினும் சரி...குற்றமோ!...அபசாரமோ! அந்த ஆதிமூர்த்திக்கே அர்ப்பணம். மணி 5 தானாகிறது. என் பிதா வரவும் நேரமாகும். நாடகத்தில் வேஷம் போடப்போகிறதால் ஸ்ரீதரனும் வீட்டிலிருக்கமாட்டார். கட்டாயம் போய் பார்த்து வெகு நாட்களாக என்னிதயக்கோட்டையில் புதைந்து கிடக்கும் தாபத்தை தீர்த்துக்கொள்வதே சரி"...என்று தனக்குள் தீர்மானித்தாள்.

சடக்கென்று எழுந்து உட்கார்ந்து, "நாகு! என்னை நீ உண்மையில் கடவுள் பொதுவாக நேசிக்கிறாயா?...இது சத்தியமா?"...என்று ஓர் வெடிகுண்டு எறிவதுபோல் வீசினாள்.

நாகு:—கண்ணா! நான் முன்பே ஒருதரம் சொல்லியதை மறந்தாயா! உனக்குப் பால் கொடுத்து வளர்ப்பதற்காக என் வயிற்றில் பிறந்த மகனையும் நான் துறந்தேன். என் மீது வந்த கோபத்தில் என் கணவன் குழந்தையுடன் அன்று ஓடியவன் இன்று வரையில் காணவில்லை. இருவரும் இருக்கிறார்களோ இறந்தார்களோ! அதுகூட எனக்குத் தெரியாது. மரணத் தறுவாயில் உன் தாயாருக்குக் கொடுத்த வாக்குதத்தத்தை நிறைவேற்றவே நான் பாடுபட்டேன். நீ குழந்தை. உனக்கென்னம்மா தெரியும்?

சந்தி:—எனக்காகவா உன்னிரு கண்களையும் இழந்து கபோதியைப்போல் வாழ்நாளையேபாழ்நாளாக்கிக்கொண்டாய்...ஐயையோ! இந்தப் பாழும் உயிரை வளர்க்கும்பொருட்டு என்னை எத்தனைப் பாவ மூட்டைகள்தான் தாக்கும்?...நாகு! இந்த மகா பாவியை நீ மன்னிப்பாயா! உன்னுடைய அபாரமான வாத்ஸல்யத்தைக் காட்டி என்னை ஆசீர்வதிப்பாயா!—என்று தேம்பித் தேம்பி அழுது "என் பொருட்டா நீ இம்மாதிரி ஒண்டிக்கட்டையானாய்?...ஐயோ! உன் புருஷன் இருக்குமிடம் இன்னமுமா தெரியவில்லை?...

நாகு:—கண்ணா! அந்த வயத்தெரிச்சலெல்லாம் கிளப்பாதே. உனக்கு இந்த துக்கசம்பவங்களும் சமாச்சாரமும் தெரியவேவேண்டாம் என்றுதான் நான் பேசாமலிருக்கிறேன். நீயே கிளறுகிறாயே.

சந்தி:—இல்லை நாகு! நான் எத்தகைய பாவத்தைச் செய்தவள் என்று தெரிந்துகொள்ளவேண்டாமா! அதோடு வயிற்றில் பிறந்த குழந்தையை நிராகரிக்கச்செய்த சண்டாளத்தனம் என்னைவிடுமா! நீ ஏன் உன் குழந்தையை விடவேண்டும்? சொல்லு...சொல்லு நாகு!

நாகு:—இதோ பாரு! பழங்கதை எல்லாம் இப்போ வேண்டாம். உன் தாயாரின் மரணத்தறுவாயில் நானும் என் கணவனும் கூடத்தான் இருந்தோம். உன் தாயார் என் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சி உன்னைக் காப்பாத்துவதாக வாக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். நான் அப்படியே சத்தியம் செய்தேன். உங்கம்மா செத்தபிறகு உங்கப்பாவுக்கு அந்த விசனமே பெரிய கோபமாக மாறியதால் ஒருநாள் தலைகால் தெரியாமல் என் புருஷனைத்திட்டினார். அவர் அது பொறுக்காது கோவித்துக்கொண்டு

வேலையை விட்டுவிட்டதோடு என்னையும் விடச்சொன்னார். நான் 'வாக்குதத்தத்தை மீறமாட்டேன் எஜமான் கோவித்துக்கொண்டால் பரவாயில்லை. பொறுமையாயிரு' என்று எத்தனையோ சொன்னேன். கேட்கவில்லை. உங்கப்பாவுக்கும் எனக்கும் ஏதோ கள்ள நட்பு உண்டாகிவிட்டது; அதனால்தான் வரமாட்டேன் என்கிறதாக என்னைக் கண்டவாறு திட்டி கண்ணுமண்ணு தெரியாமல் அடித்துவிட்டுக் குழந்தையையும் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டார். எத்தனை பிரயத்தனம் செய்தும் அந்த ஆளைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. விதியின் கூத்து உங்கப்பாவும் உடனே இறந்தார். கதை எப்படி எப்படியோ முடிந்துவிட்டது. அதெல்லாம் ஏம்மா கேக்கறே?...நீ ஏன் இப்படி திடீரென்று துவண்டுவிட்டாய்!" என்று சந்திராவைச் சமாதானம் செய்வித்துத் தேற்றினாள்.

அவளைச் சந்திரா இறுகத் தழுவிக்கொண்டு "நாகு! நாகு! இதுவரையில் நீ என்னைப் பாதுகாத்து வந்தது பெரிதல்ல... இன்று......இப்போது எனக்கு நீ ஒரு மகத்தான உபகாரத்தைச் செய்யவேண்டும். உன்னைதான் கடவுள் எனக்குக் காட்டியிருக்கிறார். மணி 5 ஆகிறது. ஒரு வாடகை ரிக்ஷா வண்டி கொண்டு வா! 'எங்கே, எதற்கு, யாரைப் பார்க்க?' என்கிற கேள்விகளைக் கேட்காதே. நான் இறங்கி ஒரு வீட்டிற்குள் செல்வேன். நீ வண்டியிலேயே இரு. நான் அடுத்த நிமிடமே என்னுயிர்த் தோழியைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். இதை உன் உள்ளம் தவிர மற்ற யாரும் அறியக்கூடாது. சத்தியமாகச் சொல்லக் கூடாது. இது உன்னோடு சாம்பராகவேண்டியதுதான்" என்று கண்ணீர் வடியக் கூறி நாகுவின் கையைப் பிடித்துத் தூக்கினாள்.

நாகுவும் சந்திராவின் பரிதாபத்தைக் கண்டு மனமுருகி அவ்வாறே சென்று ஒரு வண்டி கொண்டுவந்தாள். அதற்குள் சந்திரா தான் ஏற்கெனவே தன் பெரிய பெட்டிக்குள் தயாராக வைத்திருந்த கைப்பெட்டி யொன்றை எடுத்துத் தன் புடவை முந்தாணியால் மூடிக்கொண்டாள்.

மனத்திற்குள் பித்துபிடித்தவள்போல் ஏதேதோ பேசிக்கொள்வதும் ஆகாயத்தைப் பார்த்து விழிப்பதுமாக இருக்கையில் நாகு வந்ததும் சடக்கென்று வண்டியிலமர்ந்து "சாமிக் கண்ணுத் தெருவுக்குப் போ" என்றாள். சில நிமிஷங்களில் அத் தெருவை அடைந்த வண்டிக்காரன் "எந்த வீடம்மா!" என்றான்.

சந்திராவின் மனத்தில் திக்கு திக்கென்று கூறத்திறமற்ற ஏதோ பெரிய வேதனை செய்து திடும் திடும் என்று தூக்கிப்போடுகிறது. இதய ஓட்டத்தின் வேகம் புடவைமீதே தெரிவதைக்காண அவளுக்கே நிலை கலங்கியது. வண்டிக்காரன் கேட்கும்போது, 10 நெம்பர் வீடு சாத்தியிருந்ததால் தற்செயலாக நம்பர் கண்ணில் பட்டது. "இந்த பக்கம் நாலாவது வீடா! அந்தப் பக்கம் நாலாவது வீடா!" என்று கவனித்தாள்.

ஏழை வீடு என்று ஸரஸ்வதி சொல்லியதும் நினைவிலிருந்தது. அந்தண்டை பக்கம் பூராவும் மாடி வீடாக இருந்ததால் இந்தப் பக்கத்து நாலாவது வீட்டில் வண்டியை நிறுத்தச் செய்தாள்.

அவளை அறியாமலேயே கால்கள் பின்னலிட்டு உதறுகின்றன. "நாகு! நீ இங்கேயே ஓரமாக இரு" என்று கூறிவிட்டு கூறத்திற மற்ற சங்கடத்துடன் உள்ளே சென்ருள்.

சுமார் 20 வயதுக்குள் மதிக்கத்தக்க ஒரு சாதாரண அழகுடைய பெண் நாற்காலியில் உட்கார்ந்து கிழிந்த ஷர்ட்டு ஒன்றைத் தைத்துக்கொண்டிருப்பதைக் கண்டதும், "இவள்தான் அந்த பாக்யவதியா!"...என்று திகைத்தாள்.

"ஸ்ரீதரனின் கால்விரல் நகத்திற்குக்கூட இம் மங்கையின் முகம் ஈடாகாதே...இவளாக இருக்குமா!" என்று பெரிய சந்தேகத்துடன் எதிரில் சென்று, "அம்மணீ! நீங்கள்தான் ஸ்ரீமான் ஸ்ரீதரனின் தர்மபத்தினியா?" என்று கேட்டபடியே, கூடத்தில் தானுக இழுத்துச் சென்ற கண்களைத் திருப்பமுடியாது பார்த்தாள்.

ஸ்ரீதரனின் கல்யாணப் புகைப்படம் மாட்டப்பட்டிருந்ததைக் கண்டு, "இந்த பெண்தான்" என்பதைத் தெரிந்துகொண்டு, அப் பெண்மணியை மீண்டும், "நீங்கள்தான் ஸ்ரீமதி ஸ்ரீதரனு?" என்ருள்.

தைத்துக்கொண்டிருந்த பெண் அதை அப்படியே வைத்து விட்டு எழுந்து நின்ருள். "ஸ்ரீ மகாலக்ஷ்மியோ! வனமோகினியோ!" என்று ஐயுறும்படியாக நிற்கும் சந்திராவைப் பார்த்து பிரமிப்பும், அளவிலா ஆச்சரியமும் அடைந்து பேந்தப்பேந்த முதலில்விழித்தாள். பிறகு பகவான் அவளுக்கென்று பரிந்து கொடுத்துள்ள பாஷையாகிய, 'பேப்பே...பே...ப்பே...பேபே' என்று கேட்டவாறு நீங்கள் யாரோ தெரியவில்லையே" என்று கையினுல் ஜாடையும் செய்தாள்.

அந்தோ! என்ன கண்ருவி....என்ன பரிதாபம். வானமே இடிந்து சந்திராவின் தலையில் விழுந்ததுபோல்..."ஊமையா... இவளா என் அன்பரின் இல்லக்கிழத்தி! வாழ்க்கைத் துணைவி! இப்படியா அவர் தலையெழுத்து இருந்தது. ஐயையோ! என்னுல் பொறுக்கமுடியவில்லையே" என்று அப்படியே விசனப்பதுமையாய் நின்ருள்.

அவளெதிரில் நிற்கும் ஊமைக்கும் ஒன்றுமே தோன்ருது ப்ரமை பிடித்துவிட்டதால் உள்ளே இருந்த தன் நொண்டித் தாயாரைக் கூப்பிடும் பாவனையில் "பேப்பே...பப்பப்பே...என்று கூச்சலிட்டுக் கத்தினுள். சந்திராவால் அதற்குமேல் ஒரு கணங்கூட நிற்கமுடியாது இதயம் துள்ளியது.

தன்னை வெகு சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு, தன் கழுத்தைத் தடவிக் காட்டி, கூடத்திலுள்ள ஸ்ரீதரனின் படத்தையும் காட்டி, "இவர் தானே உன் கணவன்" என்று ஊமை ஜாடை செய்து கேட்டாள்.



ஊமையும், "ஆமாம்; ஆமாம்" என்று தலையை அசைத்துத் தன் ஜாடையால் காட்டிச் சிரித்தாள். சந்திரா, துவளும் தேகத்துடன் நிற்கமுடியாது கண்ணீர் பெருகியவாறு, 'இந்தாம்மா! இதை உன் கணவரிடம் கொடு. நான் போய் வருகிறேன்' என்று ஜாடை காட்டிக் கூறினாள்.

பெட்டியைக்கண்டதும் ஊமை முன்னிலும் பதின் மடங்கு அதிகரித்த வியப்புடன் விழித்தவாறு, "இதென்ன!" என்று தன் சமிக்ஞையிலும் சப்தத்திலும் கேட்டாள்...... "இந்தா! பிடி...பிடி... இதை உன் கணவரிடம் கொடு.......நான் போகிறேன்" என்று கூறியவாறு அந்தப் பெண்ணிடம் பெட்டியைக்கொடுத்தாள்.

அதே சமயம் கட்டையின் உதவி கொண்டு நடந்து வரும் நொண்டியான பரிதாப ப்ரக்ருதியைப் பார்த்ததும் வயிற்றிலிருந்து சங்கடம் இன்னும் பீறிக்கொண்டு வந்தது. இந்த கண்ருவிகளைக்கண்டு சகிக்கமுடியாத சந்திரா போவதற்குக்கிளம்பினள்.

ஜகன்மோகன சிங்கார வடிவமுடன் நிற்கும் சந்திராவைப் பார்த்த நொண்டி பிரமிப்புடன், "அம்மா...யாரம்மா நீ!...நில்லு... நில்லு...போகாதே"...என்று கூறிக்கொண்டே வேகமாகவந்தாள். சந்திராவுக்கு அதற்குமேல் அங்கு நின்ருல் மனது சகிக்காது மயக்கம் வந்துவிடும்போல் தோன்றியதால், "நான் வருகிறேன்".... என்று கூறியவாறு சடக்கென்று போய்விட்டாள். நொண்டி தடுமாறிக்கொண்டு வீதிக்குச் சென்று பார்ப்பதற்குள் ரிக்ஷா மாய



மாய் மறைந்தது. சலிப்புடன் நொண்டி உள்ளே வந்து "இதென்ன வேடிக்கை! யார் வந்தது, போனது ஒன்றுமே தெரியவில்லையே!"... என்றவாறு உட்கார்ந்தாள்.

ஊமை தன் பாஷையில் பேசியபடி பெட்டியைக் கொண்டு காட்டினாள். சாவி பெட்டியிலேயே தொங்கிக்கொண்டிருந்ததால் பெட்டியைத் திறந்து பார்த்தாள்.

அவ்வளவுதான்...தாயும் மகளும் கூறத்திறமற்ற வியப்புக் கடலில் மூழ்கிவிட்டார்கள். ஊமைக்குச் சந்தோஷத்தால் இதயம் வெடித்துவிடும்போலாகியது. பெட்டிக்குள்ளிருக்கும் நகைகளும், ரூபாய்களும், சவரன்களும், நோட்டுக்களும் கண்டு எவர்தான் பிரமிக்காமலிருக்கமுடியும்?

"இதென்ன கனவா! நினைவா! இஷிணி, பக்ஷிணி முதலிய மந்திர மாயாஜாலமா! வனமோகினியின் சேஷ்டையா!...இந்தப் பெண் யாரோ! என்னவோ! எதற்காக இத்தகைய பெரும்புதையலை அளித்துச் சென்றாள்?" என்று ஆச்சரியத்தால் குழம்பிப் போய், அந்த நகைகளையே இமைகொட்டாது பார்த்தார்கள். ஊமை சிலவற்றைத் தானே எடுத்துப் பூட்டிக்கொண்டு நிலைக் கண்ணாடியில் அழகு பார்த்துக் குதித்தாள். தன் பாஷையில் அவள் உள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சிகள் தேங்கிய வார்த்தைகளை ஒரேயடியாகக் கொட்டியளக்கிறாள். இதைக் கண்ட நொண்டியின் இதயம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

## 32

வாழ்க்கைப் பலகணியில் எப்போதுமே இன்பம் நிறைந்த, சுகமே நிறைந்த காற்று எங்கோ ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் வீசி அகமகிழச் செய்கின்றது. மற்றவர்களுக்கு இன்பமும் துன்பமும் கலந்தோ அன்றி துன்பமே அதிகமாகவோ சம்பவிக்கின்றது. வயதில் மிகவும் சிறியவனாயினும் புத்தி தெரிந்தநாள் முதல் துக்கச் சுழலிலேயே உழலும் விதி ஸ்ரீதரனுக்கு அமைந்தது போல் மற்றயாருக்குமே அமையவில்லை என்பதைக்கூறவேண்டுமா!

அவனுடைய வாழ்க்கையின் சக்கரம் சாதாரண கரடுமுரடான பாதையையும் விலக்கிக் கல்லும் முள்ளும் புதரும் புத்தும் நிறைந்த பாதையில் இழுத்துச் செல்லும் துக்கத்தை எப்படித்தான் சகிக்கிறானே பாவம்!...இத்துடன் நில்லாது இன்னும் என்னென்னதான் ஆட்டப்போகிறதோ! ஆட்டட்டும் என்கிற ஒரு முரட்டுத் தீரமும் வைராக்யமும் எப்படியோ மனத்தில் வருவித்துக்கொண்டு அந்த பாதையில் நடந்து செல்கையில் சந்திராவின் பிம்பம் கண்ணில் படவேண்டுமா? இதுவும் சோதனையின் கூற்றுத்தானே!

ஏற்கெனவே உத்ஸாகம் குறைந்த உள்ளம் இந்த எதிர்பாராத சந்திப்பினால் பின்னும் சிதறுண்டு சுக்கல் நூறாக உடைந்த வேகத்தில் அவன் எத்தனையோ உயர்வாக நடிக்கவிருந்த நடிப்பின் தலையில் மண் விழுந்தது. எத்தனைதான் தன்னைத் தான் தேற்றிக்கொண்டு தான் எடுத்த காரியத்தில் கவனத்தைச் செலுத்த முயன்றும் அவன் கண் முன்பு சந்திராவின் பிம்பமே தோன்றி அவன் மூளையைக் குழப்பி நினைவைப் பறித்துக்கொண்டு அவனை மிகவும் பித்தனுக்கித் தோல்வியின் எல்லையில் இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தியது.

"ஒத்திகையில் எத்தனையோ அற்புதமாக நடித்த ஸ்ரீதரன் இதென்ன இத்தனை மோசமாக நடிக்கிறானே?" என்று உபாத்தியாயர்கள் வெறுத்தார்கள். உலகமே ஒரு நாடக மேடை. அதில் மக்கள் நடிகர்கள். இவர்களை ஆட்டிவைக்கும் சூத்திரதாரி பகவான். அந்த நாடகத்திற்குள் மற்றொரு நாடகம். மாயா நாடகம் எப்படியானால் என்ன!...போகட்டும் அறிவை இழந்தவனுக்கு உலகமே பைத்தியமாகப் படுவது சகஜந்தானே....

"நானே பைத்தியம் என்னுடைய நடிப்பும் பைத்தியம்" என்று தனக்குள் வைராக்யத்தையே நிலைநாட்டிக்கொண்டான். நாடகம் முடிந்ததும் தலைமை வகித்த நரஸிம்மன் பேசும்போது அதில் தனது மனத்தில் புதைந்துகிடந்த அகங்காரத்தைப் புகுத்தி ஸ்ரீதரனின் நடிப்பு திறமாயில்லை என்றும் அவர் எழுதிய நாடகத்தின் கருத்து அழகாயில்லை என்றும் மற்ற உபாத்தியாயர்கள் பிரமிக்கும் வண்ணம் நடித்ததாயும் கூறியதைக் கேட்ட ஸ்ரீதரனுடைய வைரம் போன்ற மனம் பின்னும் வைரமாயிற்று. கடகடவென்று ஒரு வெறுப்பும் வைராக்யமும் கலந்த சிரிப்பை சபை என்பதையும் பாராது சிரித்த மறுக்ஷணமே வீட்டிற்குப் புறப்பட்டான். அவனுடைய செய்கை எல்லோருக்கும் மிகவும் ஆச்சரியமாயிருந்தது.

சலிப்புடன் வீட்டிற்குப்போனதும் "பேசாமல் வெட்டவெளியில் படுத்து மனத்திற்குச் சுதந்திரமாகத் திரியும் உரிமையைக் கொடுத்துவிடவேண்டும். மவுனத்தின் மறைவிலுள்ள சாந்தியையும் நிர்மல இதயத்தையும் அடையவேண்டும்" என்றமுடிவுடன் வந்தான்.

வீட்டில் ஊமை மனைவி, நொண்டி மாமியார், சற்று மந்தமடைந்த புத்தியுடைய தகப்பனார் ஆகிய மும்மூர்த்திகளுடன் பழகும் இந்த இளம்தளிர் எத்தனை சந்தோஷத்தை அடைந்து இன்புறமுடியும் என்று கூறவேண்டுமா?

வீட்டிற்குள் வந்ததும் என்றுமே சொப்பனத்திலும் எதிர்பாராதவிதமாயும் இவனே பிரமித்துப்போகும் வண்ணமும் ஊமை அபாரமான நகைகளுடன் அலங்காரவதியாய் குதித்துத் தாண்டவமாடியவாறு எதிரில் ஓடிவந்து தனது அற்புத பாஷையில் பேசி பெட்டியைக் காட்டி நகைகளைக் காட்டி ஆரவாரம் செய்து, யாரோ ஒரு அதிரூப சுந்தரி இதைக் கொடுத்தாள் என்று தனது சைகையால் தெரிவித்தாள்.

ஸ்ரீதரனுக்கு அந்த நகைகளைப் பார்த்ததே ஆகாயமும் பூமியும் சேர்ந்து தலைகீழாகத் தட்டாமாலை சுற்றுகிறது. இதே நகைகளைத் தன் தாயாரின் திருமேனியில் சில காலத்திற்குமுன்பு கண்டுகளித்த நினைவு சட்டென்று கண்முன்பு தோன்றி அவனைச் சிதறவடித்தது.

நகைகளைப் பார்க்கும்போது சுந்தரி என்கிற தன் தாயாரின் பெயர் வைரங்களால் புதைக்கப்பட்டிருப்பது கண்டு நிலையே புரண்டது. பெட்டியில் தான் பாலியத்தில் அணிந்திருந்த நகைகளைக் கண்டு பின்னும் கதிகலங்கி ஒன்றுமே விளங்காது நின்றான்.

பெட்டியினுள்ள ரூபாய்களும், சவரன்களும், நோட்டுக்களும், அவன் மூளையைச் சிதறவடித்தன. தன் தாயாரின் நகைகளும் தன் நகைகளும் களவு போய் வெகு காலமாயிற்றே, இவை எப்படி வந்ததோ தெரியவில்லையே...இதென்னசோதனை. இதென்ன மாயக் காக்ஷியோ...என்று பிரமித்தான்.

ஊமையும் அவன் முகத்தை உற்றுப் பார்த்தவாறு அப்படியே நின்றது. இதற்குள் நொண்டி அங்கு வந்து, "அப்பா!...யாரோ ஒரு வனமோகினியைப் போன்ற சிங்கார யுவதி, இந்தப் பெட்டியுடன் கொடுத்துவிட்டுத் திரும்பிக்கூடப் பார்க்காது போயே போய்விட்டாள். கூப்பிடக் கூப்பிட அவள் காதிலேயே விழவில்லை. கண்ணீர் ஆறுய்ப் பெருகியதைத் துடைத்தவாறு போனாள். அவள் யாரோ!... இவைகள் என்னவோ! எனக்கொன்றுமே விளங்கவில்லை. இதைப் போட்டுக்கொண்டு உன் மனைவி ஆனந்தக் கூத்தாடுகிறாள். இந்த சம்பவம் நன்மைக்கோ, தீமைக்கோ தெரியவில்லை" என்றாள்.

"சந்திராதான் வந்திருக்கவேண்டும். அவளுக்கு இந்த நகைகள் எவ்வாறு கிடைத்திருக்கமுடியும்?" என்ற சந்தேகம் பலமாக எழுந்தது. தன் தாயாரின் நகைகளைக் காணும்போது அவனுக்கு அவளையே நேரில் காண்பது போன்ற உணர்ச்சி தோன்றியதால் அங்கு நிற்கமுடியாது முதலில் நினைத்தபடியே மொட்டை மாடிக்குப்போய் தடாரென்று கயிற்றுக் கட்டிலில் வீழ்ந்தான்.

அயோமயமான நிலைமையில் என்னென்ன எண்ணித் தவித்தானோ! எப்படிக் கதறினனோ! என்ன செய்தானோ! அந்தக் கயிற்றுக் கட்டில்தான் அவனை அவன் தாய்போல் மடியில் கிடத்தி அணைத்துக்கொண்டிருந்தது. தலையணை அவனது கண்ணீரைத் தாங்கும் மட்டும் தாங்கி பின்பு தன்னாலும் முடியாதுபெருகவிட்டது.

நாகஸர்ப்பத்தின் கொடிய சீற்றம்போல் 'புஸ் புஸ்' என்று மார்பைப் பிளந்துகொண்டு வரும் பெருமூச்சும், விம்மி விம்மி வடியும் உப்பசமும் ஆகாய வாணியும் பூமி தேவியுந் தவிர யாரறிய முடியும்? ஊமை இரண்டு தரம் வந்து பார்த்தது. காது உண்டா கேட்பதற்கு? தூங்குவதாக எண்ணிப் போய்விட்டது. நொண்டிக்கோ வரவேமுடியாது.

இத்தனை சங்கடத்தில் தத்தளிக்கும் ஸ்ரீதரனின் உள்ளம் என்ன நினைத்தது?...'ஏ காலக்கூற்றே! கொடிய உன்னாட்சியில் இன்னும்

என்னென்ன காக்ஷிகள் பாக்கியோ, அத்தனையையும் நடத்திக் கொள்ளு. ஆனல்...என் ஊமை மனேவியையும்...நொண்டி மாமி யாரையும், சித்த ப்ரமை கொண்ட தகப்பனாரையும் தனியே தவிக்க விட்டு நான் சாக மனம் விரும்பவில்லே. என்னுயிரைப் பலி கொள்ளாதே! நான் நிர்த்தாக்ஷிண்ய இதயத்தை உடைய ஆாமிக் கட்டையல்ல. என்னே அண்டின பேர்களுக்குச் செருப்பாய் உழைக்க நான் விரும்புகிறேன். என்னுயிரை மட்டும் விட்டுவிடு" என்றுதான் எண்ணினுன்.

தன் தாயினுடைய நகைகளின் தரிசனம் தன் தாயின் தரிசனம் காண்பதுபோன்ற பேரானந்தம் ஒருபுறம் பொங்குகிறது. இது எவ்வாறு இங்கு வந்திருக்கும் என்கிற பெரிய ஆலோசனேயும் வியப்பும் தாண்டவமாடுகிறது. "இவைகளேச் சந்திரா கொண்டு கொடுத்திருப்பாள் என்பதற்கு எங்கள் புராதன பொருள், அதினும் களவுபோன பொருள் அவளுக்குக் கிடைக்க மார்க்கமே இல்லேயே என்ன வேடிக்கை இது!" என்று தனக்குள் எண்ணிக் குமுறினுன்.

சடக்கென்று ஒரு யோசனே தோன்றியது. அப்போது ஆகா யத்தில் துல்லியமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சந்திரனே இவனுடைய சந்தேகத்தை விளக்கவரும் சாக்ஷிபோல் தோன்றியது. படுக்கையிலிருந்து எழுந்து கீழே வந்தான்.

ஊமைப் பெண், அணிந்த நகைகளேக் கழட்டக்கூட மனமின்றி அதோடு உலகையே மறந்து தூங்கிக்கொண்டிருந்தது. நொண்டியும் முடங்கிக் கிடந்தாள். தன்னுயிரினும் இனிய சந்திராவின் புகைப் படம் அவனது பெட்டிக்குள் எப்போதும் ஐக்யமாகி இருந்து, அடிக்கடி அவனுக்குக் காட்சி கொடுத்தும் மிக்க சோகந்தட்டிய காலேயில் ஆறுதலளித்தும் வந்தது; அதை ஸ்ரீதரன் எடுத்தான்.

தன்னே மீறிய அன்பு வெள்ளத்துடன் படத்தை கண்களில் ஒற்றிக்கொண்டு அதை இமை அசைக்காது பார்த்தான். கண்ணீர் மாலே மாலேயாய்ப் போய்க்கொண்டிருப்பதைத் தடுக்கமுடியாது விம்மினுன். "இன்பக் கனியே!...எத்தனே யுகங்களுக்கப்புறம் உன் தரிசனம் கிடைத்தது. கிடைத்தும் ஒருவாய்ப் பேச்சு பேச என் துரதிருஷ்டம் இடந்தரவில்லேயே!...கைம்மாறு கருதா மேகத்தைப் போல் நீ, உனக்கு நான் தீங்கிழைத்திருக்கும்போதும் உபகாரம் செய்திருக்கிருயே!...நீயா இந்த மறைந்துபோன ஐச்வர்யத்தை மறுபடியும் கொண்டு அளித்தாய்...நீதான் என்று எனக்கு விளங்க வைப்பாயா!"...என்று பித்தன்போல் இவன் கண்ணீர்விட்டவாறு ஊமையை அவன் ஆயுளிலேயே முதன்முதல் எழுப்பி, சமிக்ஞை யினுல் "உஸ்; சத்தம் போடாதே. இந்த படத்தைப் பார்த்தாயா! இவள் தெரியுமா!" என்ருன்.

ஊமை ஆச்சரியமும் ஆனந்தமும் பொங்க அவளுடைய பாஷையில் "இவள்தான் இவைகளேக் கொடுத்தாள்" என்று கூறி சந்தேகத்தை விளக்கியதும், ஊமையைப் படுத்துக்கொள்ளும்படிக்

கூறிவிட்டு மீண்டும் மாடிக்கே போனான். "எப்படியாவது சந்திராவைப் பார்த்தே தீரவேண்டும்; இல்லையேல் மனது தாங்காது, இதயம் வெடித்துவிடுமோ!" என்கிற சங்கடம் உண்டாகியது.

ஏதோ பித்துபிடித்தவன்போல் வீதிக்கு ஓடிவந்தான். நாஸிம்மன் நாடகத்தில் தன்னைத் தாக்கிப் பேசியிருந்தும் அதையவன் பொருட்படுத்தவில்லை. வீதிப் பக்கம் கதவைப் பூட்டிக்கொண்டு, நரஸிம்மன் இறங்கியிருக்கும் வீடு தெரியுமாதலால் அதிவேகமாக அங்கு சென்றான். கேட் பூட்டியிருந்ததோடு நரஸிம்மனின் வேட்டை நாய் கேட்டின் உள்புறம் பாராக் கொடுப்பதையறிந்து தன்னைக் கண்டு எங்கு பெரிதாகப் பாடக் கிளம்பி எல்லோரையும் எழுப்பி தர்மசங்கடமான நிலைமையில் கொண்டுவிட்டுவிடுமோ! என்கிற பயத்தால் வெளியிலுள்ள ஒரு மரத்தடியில் நின்றவாறு பங்களாவை உற்று நோக்கினான்.

3073

தனது மனமோகினி வசிக்கும் வீட்டைப் பார்க்கும்போதே ஆனந்த நிலயமாயும், அற்புத பூங்காவனமாயும் காக்ஷி கொடுத்து அவன் இதயத்தில் இன்பவாரிதி பொங்கியது. நிலாவின் அழகு மிகுந்த சாயலில் அந்த பங்களா ஓர் அரண்மனையைப் போன்று விளங்கியது. பங்களாவின் மெத்தை வெளித் தாழ்வாரத்தில் நிலாவின் ஆனந்தஸ்வரூபத்தைப் பார்த்தவண்ணம் அந்த நடுநிசியில் சந்திரா நின்று தனது கலியைத் தீர்க்கும்பொருட்டுக் காட்சி கொடுப்பதைப் பார்த்ததும் ஆச்சரியத்தைத் தாங்கவேமுடியவில்லை. தான் சற்றும் எதிர்பாராத இந்த தேவ தரிசனம் கிடைத்த சந்தோஷத்தில் மரத்தின் கீழேயே குதித்தான்; கொக்கரித்தான்.

வாடி வதங்கி சொப்பன உலகில் சஞ்சரிக்கும் சித்திரப் பாவையைப்போல் சோகமே உருவாய் நிற்கும் சந்திராவை வாய் விட்டுக் கூப்பிட்டு விடலாமா என்றும் எண்ணினான். அந்த செய்கை அவளுக்கு ஆபத்தாயும் தனக்கு அசட்டுத்தனமாயும் முடியும் என்கிற பயத்தினால் சப்தம் வெளி வராதவாறு "சந்திரா!... சந்திரா!" என்று வாய்க்குள் கூறி இன்புற்றான். அவ்வாறு கூறியது அவனுக்கோர் பேரானந்தமாயும், தன் பிணிக்குப் பரம அவுஷதமாயும் தோன்றியதால் பைத்தியம்போல் "சந்திரா!...என் ஆருயிர் சந்திரா!" என்று பிதற்றிக்கொண்டான்.

சந்திராவின் முகத்தில் தேங்கிக் கிடக்கும் விசனத் தோற்றங் கூட அவளுடைய அழகுக்கு அழகு செய்தாற்போல் இருந்தது. தான் நாடிவந்த பொருளின் தரிசனம் கிடைத்த சந்தோஷத்தில் அவன் க்ஷணநேரம் தன் துக்கத்தையே மறந்தான். என்றுமே தனக்கிந்த ஆனந்த நிலை சாச்வதமாக இருந்துவிடக்கூடாதாவென்று எண்ணும்போது அவன் இதயத்தைப் பீறிக்கொண்டு வந்த பெருமூச்சின் சப்தம் சந்திராவுக்குக்கூட கேட்டிருக்குமோ என்னவோ? யார் கண்டது!

சித்திர ரகளை

சகுனப் பொருத்தம் எப்படி?



முக்கிய அறிவிப்பு. கவனிக்கவும்

''ஞானதீபம்'' சஞ்சிகைகள் (ஜனவரி முதல் ஜூலைவரை) செலவழிந்துவிட்டதால் இப்போது சந்தா அனுப்புவோருக்கு 'வாத்ஸல்யம்' முதல் அனுப்புகிறோம்.

மானேஜர்.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, VENKATAPURAM, SINGAPERUMAL KOIL, E. O.